Registered at the G. P. O. as a Newspaper

வாரப் பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 புரட்டாதி திங்கள் 4-ம் நாள் (20—9—1959) ஞாயிற்றுக்கிழமை ற.அவ்வல் பிறை 16 இதழ் 16

# உரிமைப் பாதுகாவலர் உலகை விட்டு பிரிந்தார்

## தாயை இழந்த சேயின் நிலையில் இலங்கைத் தமிழினம்

## தாங்கொணாத் துயர் கொண்டு தவியாய்த் தவிக்கிறது

### கோப்பாய் பிரதிநிதி திரு. வன்னியசிங்கத்தின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு

—யாழ்ப்பாணம் செப் 17

தமிழினத்தின் உரிமைப் பாதுகாவலராக இன்று (வியாழக்கிழமை) காலை வரை இருந்தகோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் இப்போது நம்மிடையே இல்லை. உலகை விட்டுப் பிரிந்து விட்டார் அவர்.

தாயை இழந்த சேயின் நிலையில் தமிழினத்தை விட்டு விட்டு அவர் திடீரென்று போய் விட்டார். தாங்கொணாத்துயர் தமிழினத் துக்கு. தவியாத் தவிக்கிறது; துடியாய்த் துடிக்கிறது. ஆற்றுவார் இல்லை; தேற்றுவார் இல்லை.



அமரரான திரு. கு. வன்னியசிங்கம் எம். பி.
தோற்றம்: 13-10-1911 மறைவு 17-9-59

இரத்தக் கொதிப்பு என்ற பெயரில் கூற்றுவன் வந்து அவரை இன்றிரவு 8-45 மணிக்கு எம்மிடமிருந்து பிரித்துச் சென்று விட்டான். இந்தத் தண்டனைக்குரிய குற்றம் எதையும் தமிழினம் செய்ததில்லை. எனினும் கூற்றுவனுக்கு கண்ணில்லை; கருத்தும் இல்லைப் போலும்! நம் அருமைத் தலைவரை ஈவிரக்கமற்ற முறையில் கவர்ந்து சென்று விட்டான் பாவி!

திரு வன்னியசிங்கத்தின் மறைவு தமிழினத்துக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. ஆண்டுகள் பல கடந்தாலும் மறக்க முடியாத நிகழ்ச்சி. இன்றுள்ள நாம் மட்டுமல்ல, நாளைய சந்ததிகூட நந் தலைவர் வேளை தப்பிப் பிரிந்து விட்டாரே என்று வயிற்றிலடித்து வேதனை அடையத் தான் செய்யும்.

இலங்கையில் தமிழன் வாழும் வரை வன்னியசிங்கம் தமிழுக்காகவும், தமிழனுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் இறுதிமூச்சு வரை போராடிய வீரக் கதை ஒவ்வொரு உண்மைத் தமிழனது நெஞ்சிலும் வாழத்தான் செய்யும்.

திரு வன்னியசிங்கம் சோர்வறியாச் செம்மல் என்பது தெரிந்ததே. உழைப்பின் போதுதான் அவருக்கு இறப்பு நேர்ந்தது. காலையில் நீதிமன்றத்துக்கு கடமை செய்யப் புறப்பட்ட திரு வன்னியசிங்கம் வீட்டுக்கு உயிரோடு திரும்பவேயில்லை. வெறும் சடலமாக எடுத்துச் செல்லப்பட்டார்.

#### மயக்கம்

நீதிமன்றத்துக்குச் சென்ற அவருக்கு மயக்கம் வந்தது. அந்த நிமிஷத்திலேயே அவர் நம்மையெல்லாம் விட்டு வெகுதூரம் விலகிச் சென்று விட்டார். பின்னர் திரும்பவே இல்லை. மயக்குமுற்றவர் வைத்தியரிடம்கொண்டு செல்லப்பட்டார். நிலைமை மோசம் எனக் கண்டதும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும் என்ன? தலைவரின் மயக்கம் தெளியவில்லை; கண் திறந்து அவர் பார்க்கவில்லை; ஒரு சொல்தானும் யாருடனும் பேசவில்லை.

#### வேதனைக் குரல்

இன்றோ, நாளையோ, நாளை மறுநாளோ ஐந்தாவது குழந்தைக்கு தாயாகப்போகும் தமது மனைவி அருகிருந்து புலம்பியழுததை அவர் அறியவில்லை. 'எமது அருமை நண்பருக்கு இக்கதியா?' என்று நெஞ்சில் கைவைத்து நெக்குருகிய நண்பர் குழாத்தை அவர் காணவில்லை. உள்ளேயும் வெளியேயும் கூடிவிட்ட மக்கள் கூட்டம் விட்ட பெருமூச்சையும் 'ஐயகோ எமது அன்புத் தலைவருக்கா இந்த தலைவிதி?' என்று நொந்த உளத்தோடு வேதனைக் குரல் எழுப்பியதையும் அவர் தெரிந்துகொள்ளவில்லை.

#### முயற்சி வீண்

மயக்க நிலையிலிருந்து திரு வன்னியசிங்கம் மீளவே இல்லை. முடிந்தவரையில் சிகிச்சை செய்து பார்த்தார்கள். கொழும்புக்கு அனுப்பியாவது ஏதாவது இன்னும் விசேஷமாகச் செய்து பார்க்கலாமா என்று எண்ணினார்கள். எண்ணத்திலே மண் விழுந்தது. அதற்கிடையில் கண்ணற்ற கூற்றுவன் அவரைக் கவர்ந்துகொண்டான். இது நடந்தது இரவு 8-45 மணிக்கு.

#### கண்ணீர்

ஆபத்து என்ற செய்தி ஏற்கனவே எங்கும் பரவிவிட்டதால் இழவுச் செய்தி ஒவ்வொருவரையும் சென்றடைய அதிகநேரம் பிடிக்கவில்லை. யாழ் நகரம் உறங்கிவிட்டது. திரு வன்னியசிங்கத்தின் சடலம் வைக்கப்பட்டுள்ள அவரது சுண்டிக்குளி இல்லத்துக்கு வடிந்த நீரைத் துடைத்தவண்ணம் மக்கள் சாரிசாரியாகச் சென்று தலைவருக்குத் தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்து வருகிறார்கள்.

#### உழைப்பு

நான்கு பெண் பிள்ளைகளுக்குத் தந்தை திரு வன்னியசிங்கம். மிக வேதனைக்குரிய விஷயம், அவர்கள் வாழ்க்கைக்கு ஏதும் வழி செய்யவில்லை அவர். செய்ததெல்லாம், உழைத்ததெல்லாம் தமிழினத்துக்குத்தான். தமிழரசுக் கட்சித் தூண்போல இருந்து அல்லும் பகலும் அயராது தொண்டாற்றினார்.

#### தகைமை

தமிழ்-ஆங்கில அறிவு, அரசியல் ஞானம், சட்ட நுணுக்கம், விவாதிக்கும் திறன், கேள்விகளுக்கு சாமர்த்தியமாகப் பதிலளிக்கும் பெற்றி இத்தனை சிறப்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற திரு வன்னியசிங்கம் தமிழர் தலைவர்களுள் எல்லாம் தனித்தன்மை வாய்ந்தவர் எனலாம். அன்பும் 'அடக்கமும்' பண்போடு எவருடனும் அன்னியோன்னியமாகப் பழகும் சுபாவமும் அவரிடம் இருந்ததால் அரசியல்

(9-ம் பக்கம் பார்க்க)

## பரம்பொருள் தான் வழிகாட்ட வேண்டும்

### எஸ். ஜே. வி. துயரம்

"திரு. வன்னியசிங்கத்தின் மறைவு தமிழ் பேசும் இனத்துக்கு எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமாகும். பெரும் துயரில் ஆழ்ந்திருக்கும் என்க்கு அவரைப் பற்றி எதையாவது கூறக்கூட முடியாமலிருக்கிறது"

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திரு. வன்னியசிங்கத்தின் மறைவு குறித்து துக்கம் தோய்ந்த குரலில் கூறினார்.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:-

"எதிர்பாராமல் இப்படியான ஒரு இடையூறினை விளைவித்த பரம் பொருள் தான் இதிலிருந்து கடைத்தேறவும் வழி காட்ட வேண்டும்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# விஞ்ஞானம் கற்பவர்கள் தமிழை படிப்பதில்லை

## தமிழ் படிப்பவர்களோ விஞ்ஞானம் கற்பதில்லைப் பெரும்பாலும்!

## இந்த நிலை இன்னும் தொடர்ந்தால் நந்தாய் மொழி புதுத் துறையில் பின் தங்கி விடும்

### கலைச் சொல் ஆக்கம், மொழி பெயர்ப்பு சிக்கல்களை ஒழித்து தமிழர் விஞ்ஞான அறிவை வளர்க்கவேண்டும்

"தமிழில் விஞ்ஞானம் எழுத முடியுமா? முடியாதா? தமிழில் எழுதுவது அறிவுடமையாகுமா?"—இப்படியான விவாதங்கள் முடிவுறும் காலம் நெருங்கிவிட்டது. காரணம் தமிழில் விஞ்ஞானம் எழுத முடியாது என்று குரலெழுப்பிக் குட்டை குழப்பிய கூட்டம் குன்றத்தொடங்கிவிட்டதே. பயிற்சி மொழிக்குச் சிறந்தது தாய் மொழிதான் என்பது, பல்மொழி வல்லுநரும் அகநூல் அறிஞரும் கல்வி ஆராய்ச்சியாளரும் கொண்ட முடிவு மட்டுமல்ல அநுபவம் கற்பித்துள்ள உண்மையும் ஆகும்.

ஒரு மாணவனின் அடிப்படைக் கல்விக்குச் சிறந்த பயிற்சி மொழி அவனுடைய தாய்மொழிதான் என்பதை இன்று மறுப்பார் இல்லை. சிறு வயது தொட்டு எந்தமொழியைப் பேசவும் எழுதவும் ஒருவன் பயின்ருனே அந்த மொழிதான் அவனுக்குத் தன் கருத்துக்களை எண்ணவும் வெளியிடவும் உகந்ததும் தகுந்ததும் ஆகும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சூழ்நிலை, பாரம்பரியம், பண்பாடு-எதற்கும் முரணுன ஒரு பிற மொழியில் கல்வி பயில்பவர்களின் அறிவு வளர்ச்சி, அவர்கள் எந்த மொழியில் பயில்கிருர்களோ அந்த மொழியில் அவர்களுக்கு உள்ள அறிவால் ஓரளவு கட்டுப்படுத்தப் படுகின்றது; தடைப்படுத்தப் படுகின்றது.

### பயிற்சி மொழிச் சிக்கல்

சில ஆண்டுகளுக்கு முன்பு நடுநிலை வகுப்புகளில் விஞ்ஞானம் ஆங்கிலத்தில் தான் பயிற்றப்பட்டது. அப்பொழுது, விஞ்ஞானம் பயின்ற பல மாணவர்கள் விஞ்ஞானக் கருத்துக்களை எளிதில் விளங்கும் திறமை படைத்திருந்தும் அதைப் பயில்வதற்கு ஊடாக (Medium) இருந்த ஆங்கில மொழியை நன்கு அறிந்திராததால் தம் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பில் கிடைத்திராததைப் பலரும்அறிவார்கள். பள்ளிக்கூடத்தில்எம்மோடு படித்த ஒரு மாணவன் கணக்கில் ஓர் 'புலி'. சிக்கல் மிகுந்த கணக்குகளை எல்லாம் சிறிது நேரத்தில் செய்து வைக்கும் திறமை பெற்றிருந்தான். ஆனல் ஒரு குறை. ஆங்கிலத்தில் எழுத வேண்டியிருந்த செய் முறைகள் (Steps)எதையும் அவன் எழுதி வைப்பதில்லை. ஒரு தேர்வில் இப்படியாக எல்லாக் கணக்குகளையும் செய்து வைத்ததைக் கண்டு ஐயுற்ற ஆசிரியர், மாணவனைப் பார்த்து, "எங்கே செய்முறை ஒன்றையும் காணுேமே, எப்படி விடை கிடைத்தது?'' என்று கேட்டார். அப்போது அவன் அளித்தபதில் "I Put it,Cut it, And got it" அதாவது,போட்டேன், வெட்டினேன், (விடை) பெற்றேன் என்றுன் அவன். இது ஒரு சிறு எடுத்துக்காட்டு.

### தமிழில் ஏன் இயலாது?

மேல் நாடுகளைப் போல் நமது நாட்டிலும் விஞ்ஞானம் வளர வேண்டும் என்ருல், எங்கள் விஞ்ஞானக் கல்வி எங்கள் குழலுக்கு உகந்ததாய் அமைய வேண்டும். எமது கல்வி எமக்கு இயல்பாக வரும் தாய் மொழியில் இல்லாத மட்டும் சிந்தனைகள் தடைபடுவதைத் தவிர்க்க முடியாது; விஞ்ஞான வளர்ச்சி இங்கு குன்றுவதை விலக்க முடியாது. கணிதம், விஞ்ஞானம் போன்ற கலைகளைக் கசடறக்கற்றறிஞர் "இவற்றை எல்லாம் சொல்லும் திறமை தமிழனுக்கு இல்லை" என்று சிந்திக்காது முடிவு கட்டிவிடுகின்றனர். வலம் இருந்து இடம் எழுதும் சீன மொழியிலும், மேல இருந்து கீழாக எழுதும் யப்பானிய மொழியிலும், நல்ல உருப்பெற்ற எழுத்துக்களே இல்லாத வேறு பல மொழிகளிலும் விஞ்ஞானக் கருத்துக்களை நன்கு வெளியிட இயலும் என்ருல் தமிழில் ஏன் இயலாது?

### தனித்தன்மைவாய்ந்த தமிழ்ச் சொற்கள்

எக்கருத்தையும் எம் மொழியிலும் வெளியிடலாம் ஒரு வேளை பேச்சில் அல்லது எழுத்தில் அதற்குப் போதிய கலைச் சொற்கள் இல்லாது இருக்கலாம். ஆயினும் அதை பிறர்விளங்கும் அளவிற்குத்

சு. பாலேந்திரா

தெளிவாய்க் கூறுவது அரிதன்று. மொழிகள் இல்லாத காலத்தில் கூட கருத்துக்கள் பரிமாறப்பட்டன. "கலைச் சொற்கள்" என்பது எந்த ஒரு தனி மொழிக்கும் சொந்தமான சொத்து அல்ல. எந்த எந்தக் கலைகள் எந்தெந்த நாட்டில் வளர்ந்தனவோ, அந்தந்த நாட்டு மொழிகளில் அந்த அந்தத் துறைகளில் கலைச் சொற்கள் மிகும். தமிழிலும் கலைச் சொற்கள் உண்டு. அவற்றிற்கு நேரான பிறமொழிச் சொற்களைக் காண்பது அருமை. எடுத்துக்காட்டாக, 'உண்மை', 'வாய்மை', 'மெய்மை' என்ற சொற்களின் கருத்துக்களை ஆங்கிலத்தில் எச் சொற்களால் வேறுபடுத்திக் காட்டலாம்? எளிதில் இயலாது. அதற்காக, ஆங்கிலத்தில் சித்தாந்தம் பற்றி எதுவுமே எழுத முடியாது என்று கூறிவிடலாமா?

### தமிழ்க் கலைச் சொற்கள்

தமிழ் நாட்டிலும் விஞ்ஞானமும் பொறியியலும் வளர்ந்திருந்தன. கட்டடம் அமைத்தல், உழவுத் தொழில், நீர்ப்பாய்ச்சல் ஆகிய பொறியியல் துறைகள் சீர் பெற்ற நிலையில் தமிழகத்தில் இருந்தன என்பதற்கு வரலாற்றில் சான்றுகள் உண்டு. தமிழ் நாட்டில் இருந்த அணைகள், வாய்க்கால்கள் பற்றி மாக்கோப் போலோவின் பயணக் கட்டுரைகள் கூறுகின்றன. அணைக்கட்டு—Anicut—என்ற கலைச் சொல்லை ஆங்கிலத்திற்குத் தமிழ் வழங்கியது எனின், தமிழில் கலைச் சொற்களே இருந்ததில்லை என எப்படிக் கூறலாம்?

### ஆங்கிலத்தின் வளர்ச்சி

வருங்காலத்தில் ஏந்த ஒரு மொழியும் வளர வேண்டும் எனின் அந்த மொழியில் புதிய கலைகள் யாவும் வளர வேண்டுவது இன்றியமையாதது. அன்றேல் அந்த மொழியும் அந்த மொழியைப் பேசும் இனமும் பின்தங்கிவிடும். ஆங்கில மொழி எங்கும் பரவியதும் உயர்ந்ததும் அதன் இலக்கிய வளத்தால் அன்று. அம் மொழில் வாணிபம், கணிதம், விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம் ஆகிய [illegible] பட்டதே அதன் செறிவுக்கும் உயர்வுக்கும் காரணம்.

### ஈபுறு மொழியும் சிங்களமும்

உருப்பெற்ற எழுத்துக்களே இல்லாத ஈபுறு மொழியை வளர்க்கிருர்கள் யூதர்கள். தம் நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் தம் மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு உண்டு. சிங்கள மொழியும் பிற மொழிகளுடன் நிகராக நிற்க வேண்டும் என்று உறுதி பூண்டு அதை வளர்க்கிருர்கள் அம் மொழி பேசுவோர். தமிழர் மட்டும் பழம் பெருமைகளைப்பேசிக்கொண்டு புதிய துறைகளில் மொழியை வளர்க்காது வாழாவிருப்பதா?

### பொருளாதார வளர்ச்சி

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அந் நாட்டின் விஞ்ஞான வளர்ச்சியில் பெருமளவு தங்கியுள்ளது. அதனுல் வருங்காலத்தில் தமிழ் மாணவரிலும் பெரும்பாலோர் விஞ்ஞானக் கல்வியை இயல்பாகவே விழைவர். ஆதலால் புதுக் கலைகளை எல்லாம் தமிழில் ஆக்குதல் இன்றியமையாதது. ஒரு மொழியின் விடுதலை அரசியல் துறையில் மட்டுமின்றி அதற்குக் கல்வித் துறையில் கிடைக்கும் உரிமையிலும் தகைமையிலும் தங்கியிருக்கிறது.

### தமிழில் விஞ்ஞானம்

இனி, இன்று தமிழில் விஞ்ஞானம் எய்தியிருக்கும் நிலை பற்றியும், அதன் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கும் ஒரு சில சிக்கல்கள் பற்றியும் கவனிப்போம். இன்றைய நிலையில் விஞ்ஞானம் மேல் நாடுகளில்தான் பெருமளவு வளர்ந்துள்ளது. ஆகையால் தமிழில் எழுதக்கூடிய விஞ்ஞானம் அனைத்தும் அந் நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியில்தான் தங்கியுள்ளது. ஆகவே, இன்றைய முதற் தேவை மொழி பெயர்ப்பு. பிற மொழி (குறிப்பாக ஆங்கிலத்தில்) விஞ்ஞானக் கட்டுரைகள், பாட நூல்கள் பல தமிழில் மொழி பெயர்க்கப் பட வேண்டும். ஆனல், இத் துறையில் ஈடுபட்டுள்ள வெளியீடுகள், நூலாசிரியர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு என்பது வருந்தத் தக்கது.

(7-ம் பக்கம் பார்க்க)

## பாம்புக் கடிக்கு பரிகாரம்

### ருஷ்ய விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்பு

நச்சுப் பாம்புகள் உள்ள இடங்களெங்கும், பாம்புக் கடிக்கான நாட்டு மருத்துவ முறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் 1937-ல். ருஷ்யாவில் முதல் தடவையாக, அஜர் பெய்ஜான் தாவரவியல்—நுண்ணுயிர் ஆராய்ச்சிக் கழகத்தில், எம். எலிசுய்ஸ்கி என்பவரால், பாம்பின் நச்சுக்கு மாற்று மருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

இதே சமயத்தில் டாஷ்கண்டு நுண்ணுயிர் ஆராய்ச்சிக்கழகத்தில்,இதேபோன்ற மற்றொரு மாற்று மருந்து ஒன்று எம். மாக்கிமோவிச்சிஞல் உருவாக்கப்பட்டது.

### மாற்று மருந்து

இந்த (சீரம்) மருந்து மிகவும் எளிய முறையில் தயாரிக்கப்படுகிறது. ஒரு மனிதன் அல்லது மிருகத்தின் உடலில் பாம்பின் நச்சை சிறுசிறு அளவுகளில்—ஆனல் படிப்படியாக அதிகமான அளவில்-புகுத்தினல், மூன்று நான்கு மாதங்களில் 'ஆண்டி பாடீஸ்' எனப்படும் அம்சங்கள் இரத்தத்தில் உருவாகி நச்சுக்கு சரியான மாற்றாக விளங்குகின்றன. இந்தக் கோட்பாட்டின்படியே, பாம்பின் நச்சிற்கான சீரமும், இதர சீரங்களும் தயாரிக்கப் படுகின்றன.

### தயாரிப்பு முறை

முதலில் சிறிய அளவு பாம்பு நச்சுடன் 'பார்மலின்' என்ற மருந்தைச் சேர்த்துப் பதப்படுத்தியபின், உட நலமுள்ள ஒரு குதிரையின்சதையில் ஊசியின் மூலம் அது செலுத்தப்படுகிறது. பிறகு படிப்படியாகக் கூடுதலான அளவு நச்சு செலுத்தப்படுகிறது—அதாவது, மரணம் ஏற்படப் போதிய நச்சைப் போல் பன்மடங்கு நச்சு இவ்வாறு படிப்படியாகச் செலுத்தப்படுகிறது. இதன் விளைவாக, குதிரையின் இரத்தத்தில் 'ஆண்டி பாடீஸ்' என்ற மாற்று மருந்து உருவாகிறது. அதன்பிறகு, அந்தக் குதிரையின்இரத்தத்தை எடுத்து பாம்புக்கடி சீரம் தயாரிக்கின்றனர்.

### பரிசோதனை

இந்தச் சீரத்தைப் பயன்படுத்தும் முறைகள்(எத்தனை முறை செலுத்துவது; எவ்வளவு செலுத்துவது;பல்வேறு அளவு நச்சுக் கலப்புகளின் போது கையாளவேண்டிய பல்வேறு முறைகள்) ருஷ்ய விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டுள்ளன. இம் முறைகள் நடைமுறை மருத்துவச் சிகிச்சைகள் மூலம் பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ளன.

### உபயோகம்

சாதாரண பிச்சாளியின் மூலம் தசையின் வழியாக பாம்பு நச்சின் சீரம் செலுத்தப்படுகிறது. ஒரு முறையில் 10 முதல் 40 கன சென்டிமீட்டர் சீரம் செலுத்தப்படுகிறது. (நச்சுக் கலப்பின் அளவையும் கடிபட்ட நபரின் உடல் நிலையையும் பொறுத்தது இது.) அதிக நச்சு இரத்தத்தில் கலக்காத பாம்புக் கடிகளுக்கு, கடிபட்ட உடனே ஒரு 'இஞ்செக்ஷன்' கொடுத்தாலே போதும்.கூடுதலான நச்சுக் கலப்பு ஏற்பட்டுள்ள நிலையில், பல முறை 'இஞ்செக்ஷன்'செய்ய வேண்டியது அவசியம். முதல் 2—3 நாட்களில், நாள்தோறும் பலமுறை சீரம் 'இஞ்செக்ஷன்'களைக் கொடுக்க வேண்டும். மிகவும் படுமோசமான பாம்புக் கடிகள் நேரிடும்போதுகூட; சீரம் 'இஞ்செக்ஷன்' கொடுத்த 2—3 நாட்களில், நச்சின் கடுமை பெரிதும் குறைந்துவிடுகிறது. பிறகு மருத்துவமனையில் சேர்த்து வெகு விரைவில் நலம் பெற முடிகிறது.

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது.

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்குத் தொழில் கவிதை

## காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
போட்டியிட்டு முன்னின்ற புல்வர் தமைக்—கூட்டிவைத்துப்
பேணிவிழாக் கொண்டாடும் எந்தமிழர் பேதைமைக்கு
நாணுதடா நெஞ்சம் நலிந்து
—செ. செல்வரத்தினம், கொக்குவில் மேற்கு

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
போட்டியின்றி முன்னேறும் போர்வீரன்!—காட்டில்வளர்
கோடரிக் காம்புக் குலமான சிங்க(ள)மே
நாடறிக்க வந்த நமன்
—அ. குமரப்பன், பதுளை

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
மீட்டும் தமிழ்ப்பேர் விளங்குதே!—நாட்டிலுயர்
மக்கள் மனம்வேக மந்திரியாய் வாழ்க அவர்
எக்காலும் மானம் இழந்து!
—மு. திருநாவுக்கரசு, வட்டுக்கோட்டை

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
நாட்டில் சிலதமிழர் உண்டென்று—காட்டினர்!
மீட்சியிலா தூரை மிதித்துத் தமக்காக
ஆட்சியில் சேர்ந்தார் அவர்!
—தமிழ்ப்பித்தன், தம்பலகாமம் தெற்கு

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
ஏட்டில் ஒளிர் கின்ருய் எதிர்மன்னு—வீட்டுக்கும்
பூட்டி இருந்து புலவருடன் பேசாமல்
கூட்டித் திரிவதும்ஏன் கூறு
—மா. சோ. முத்து, செங்கலடி.

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
போட்டியின்றி மேன்மைப் பதவியினை—ஏற்றமகா
பட்டிருப்புச் சிங்களமே! பாரில் உமக்களித்தோம்
எட்டப்பன் பேரை இனி!
—மு. பொன்னம்பலம், நெடுந்தெரு

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
பாட்டி சேர்ந் தெம்மைப் பதம் பார்த்தீர்—
ஆட்டிவைப்போம்
அப்போது தானுய் அடங்கி ஒடுங்கிடுவீர்
எப்போதும் ஏமாருே மே!
—ந. டே. குணரெத்தினம், மண்டூர்

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
ஏட்டப்பன் தன்னைமட்டும் எண்ணினீரோ—பாட்டுடையீர்
மானமே வாழ்வென்றோர் மாண்பழிக்க வந்தவெதிர்
மானனையே நாம்மறப்ப மோ?
—பவானி, கொள்ளுப்பிட்டி

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
நீட்டிக் கிடக்கும் நினதுபெயர்—மீட்சியின்றி
நாட்டிற் கினிதான நம்மினத்தை விற்கவந்திப்
பாட்டிற் கிலக்கானுய் பார்
—வே. சிவகுரு, அக்கரைப்பற்று

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
கூட்டிவிட்டோம் கொள்கை குலம் இழந்தே—ஆட்சியினர்
அன்பைப் பெறுதற் கறத்தை அறமறந்து
தன்மானம் விட்டோன் தனை
—க. வே. கதிர்காமவேல், வதிரி

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
மாட்டிக்கொண் டானெதிர்மா மன்னசிங்கன்—
மாட்சிகொண்ட
காரியப்பர் முஸ்தப்ப ரோடலியும் கண்டுவந்தார்
ஈரமிலா நெஞ்சம் இனிது!
—வி. கே. சாமி, திருகோணமலை

காட்டிக் கொடுத்த கவயர் வரிசையிலே
ஈட்டிக்கொண் டாயே இடம்ஒன்று!—கேட்டில் உழல்
எட்டப்பன் கோத்திரமே பட்டிருப்பு விட்டோடு
மட்டுநகர் மாட்சி பெற
—க. சிற்றம்பலனுர், தலவாக்கொல்லை

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
மாட்டிவிட்டார் பட்டிருப்பு மந்திரியார்—கேட்டாலோ
கல்வித் தமிழினத்தைக் காப்பாற்றவென்கின்ருர்
என்னவிதப் பேச்சோ இது?
—"தாமரைத்திவான்", மலைவீடு

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
ஏட்டில் பதிந்த எதிர்மானம்,—ஆட்சிக்கா
சாதிக் குலம்விட்டுச் சங்கத் தமிழ்மறந்தாய்
பாதிப் பதவியைப் பார்த்து?
—க. வே. கதிர்காமவேல், வதிரி

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
நீட்டி நிமிர்ந்துயர்ந்து நிற்கின்ருர்—வேட்டியணி
வண்டமிழர் பட்டிருப்பார்! வாய்வீச்சும் வீசுகிருர்!
கண்டறியோம் ஈடிதற்குக் காண்
—சோ. இராசேந்திரம், ஈச்சந்தீவு

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
மாட்டித் திணறுமெதிர் மன்னசிங்கி—'சாட்டையடி'
வாங்கிப் பரிதவிப்பார்; வாழவகை யின்றியினி
ஏங்கி இரங்குவார் இங்கு
—மு. க. சூரியன், இடல்காசின்னை

காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே
ஏட்டில்இடம் பெற்ற எதிர்மனமே!—நாட்டிலுள்ள
மக்களையே மாற்றிமட மந்தைகளைக் கூடுமுன
திக்கலை வெல்லா தினி
—க. மெய்யழகன், அ[illegible]

(தொகுத்தவர் : கவிஞர் "அமுது")

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

இ. சிவகுரு, கொள்ளுப்பிட்டி.

கே: பாலைக் காய்ச்சாமல் குடித்தால் க்ஷயரோகம் வருமாமே?

ப: அப்படியானல் தாய்ப் பால் குடிக்கும் குழந்தைகள் எல்லாமே க்ஷயரோகிகளா? பசுப் பாலைக் காய்ச்சாமல் குடித்தால் க்ஷயரோகம் வரலாம். பசும் பாலில் க்ஷயக் கிருமிகள் சுலபமாக சேர்ந்து கொள்ளுகின்றன. ஆட்டுப் பாலைக் காய்ச்சாமல் குடிக்கலாம். ஆட்டுப் பாலில் க்ஷயக் கிருமிகள் உறைவதில்லை. உலகிலேயே க்ஷயரோகம் பிடிக்காத பிராணி வெள்ளாடு ஒன்றுதான் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதே.

ஃ

மு. குமார், பலாங்கொடை.

கே: தமிழில் ந, ன என்று இரண்டு எழுத்துக்கள் உள்ளனவே இவற்றை வேறுபடுத்திக் கூறுவது எப்படி?

ப: முன்னதைத் தன்னகரம் என்றும், பின்னதை இறன்னகரம் என்றும் கூறுவார்கள். றன்னகரம் என்பதுதான் இறன்னகரம் என்று எழுதப்படுகிறது ற என்னும் எழுத்து மொழி முதலில் வராத காரணத்தால். த வுக்கு அடுத்துவரும் அயல் எழுத்து ந என்பதும், ற வுக்கு அடுத்துவரும் அயல் எழுத்து ன என்பதும் இவற்றின் பொருளாகும். விஷயமறியாத 'அறிஞர்'கள் கூட இறன்னகரத்தை ரன்னகரம் என்று சொல்லிவிடுகிருர்கள். ர வுக்கும் ன வுக்கும் சம்பந்தமே கிடையாது.

ஃ

எல். கே. முஸ்தபா, கல்முனை.

கே: வழுக்கல் தலையர்களுக்கு புற்று நோய் வராதாமே, இது உண்மையா?

ப: மேல் நாட்டு டாக்டர் ஒருவர் இப்படிக் கூறினர். ஆனல் அது தவறு என்று ருஷிய டாக்டர் மீய்ஷின் லேவ் என்பவர் நிரூபித்து விட்டார். அவ்வளவேன்? உருளைக்கிழங்கு போன்ற தலையுடையவர்கள் கூட புற்று நோயினல் கஷ்டப்படுவதை கொழும்பை அடுத்துள்ள மஹாறகம புற்றுநோயாளர் நிலையத்தில் நிதர்சனம் காணலாமே.

ஃ

எல். எஸ். இராமசந்திரன், யாழ்ப்பாணம்.

கே: தமிழரசுக் கட்சித் தலைவர் திரு என். ஆர். இராஜவரோதயம் இப்போதெல்லாம் அடிக்கடி பத்திரிகை அறிக்கைகள் வெளியிடுகிருரே, அவருக்கு அப்படி என்ன நேர்ந்துவிட்டது?

ப: ஒன்றுமில்லை. வருடாந்த மாநாடு வருகிறது. அதற்கு முன்னர் விடவேண்டிய தெல்லாவற்றையும் விட்டுத் தள்ளிவிட விரும்புகிருர் போலும்!

ஃ

கெ. பழனிசாமி, கம்பளை

கே: இந்தியாவில், இப்போது தோன்றியிருக்கும் சுதந்திரக் கட்சியைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: பிற்போக்கான கொள்கைகளையுடைய இக்கட்சிக்கு செல்வாக்கு ஏற்படப் போவதில்லையென்றே பலரும்கருது[illegible] [illegible] என்னவில்லை. சுதந்தர்க் கட்சிக்கு தனிப்பட்ட வகையில் ஆதரவு வளரா விட்டாலும், காங்கிரஸ் மீது வளரும் வெறுப்பு சுதந்திரக் கட்சியைத் தேர்தலில் தூக்கிவிட்டாலும் விட்டுவிடலாம். யு. என். பி. மீது கொண்ட வெறுப்பினல் எம். ஈ. பிக்கு சுக்ர திசை அடித்ததைப் போல!

ஃ

எம். ராதா, மண்டைதீவு

கே: திரு. ஜீ. ஜீக்கு சிலை நாட்டுவதைக் கைவிட்டு விட்டார்களாமே!

ப: என்ன செய்வார்கள் பாவம். இந்த விஷயத்தில் பொது மக்களும் கைகொடுக்கவில்லை, பொன்னரும் பொன் கொடுக்கவில்லை யென்றல் பின் எப்படிச் சிலை நாட்டுவது?

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்,
> த. பெ. 1183
> கொழும்பு.—12

ஃ

நா. இராமசாமி, அனலைதீவு

கே: கற்பனைக் கெட்டாதது யாது?

ப: கற்பனைக் கெட்டாதது கடவுள் என்று சொல்லிக் கொண்டே கடவுளைப் பற்றி எத்தனை எத்தனை கற்பனைகளைப் படைத்து விட்டான் மனிதன். உண்மையில் கற்பனைக்கு எட்டாதவன் மனிதன் தான்!

ஃ

ஏ. விஜயரத்தினம், நவாலி

கே: தற்காலப் பெண்கள் தம் ஆடைகளுக்கு அழுத்திப் பூட்டும் "பிரஸ் பட்டன்" களையே விரும்பித் தைப்பதேன்?

ப: நேரத்தை மிச்சம்பிடிப்பதற்காக. வேண்டும் போது ஒரே இழுப்பில் களைந்துவிட வேண்டுமல்லவா?

ஃ

ஜி. செல்வா, திருமலை

கே: முதலாம் பெண்ணிடம் அச்சமுண்டு, இரண்டாம் பெண்ணிடம் நாணமுண்டு, மூன்ரும் பெண்ணிடம் மடமுண்டு, நான்காம் பெண்ணிடம் பயிர்ப்பு உண்டு. இவர்களில் நான் யாரை என் மனைவியாகத் தேர்ந்தெடுக்கலாம்?

ப: ஐந்தாம் பெண்ணிடம் பணமும் குணமும் உண்டானல் அவளையே தேர்ந்தெடுத்து மணம் செய்வது நல்லது.

ஃ

திருமதி எம். மீனு, கரவெட்டி

கே: மனிதன் மிருகமாக மாறுவது எப்போது?

ப: இச்சையையும் உணர்ச்சியையும் ஒழுங்கு படுத்த முடியாத போது.

ஃ

கே. இராசையா; யாழ்ப்பாணம்

கே: கடந்த காலத்தில் தமிழ் அரசியல் வாதிகள் செய்த தவறு என்ன?

ப: சோல்பரிக் கமிஷனர்கள் வந்தபோது ஐம்பதுக்கு ஐம்பது கேட்டதை விடுத்து ஜின்னு கேட்டதுபோல் நாட்டைப் பிரித்து விட்டு சுதந்திரம் வழங்கு; பிரிக்க முடியா விட்டால் சமஷ்டி அமைப்பின் கீழ் சுதந்திரம் வழங்கு என்று கேட்டிருக்க வேண்டும்.

ஃ

மு. சாகுந்தன், பதுளை

கே: சிவாஜி கணேசன் பிறந்திருக்காவிட்டால் வேறுயாரைக் கட்டபொம்மனுகப் போட்டிருப்பார்கள்?

ப: ம. பொ. சி. யை!

கே: வீரபாண்டிய கட்டப் பொம்மன் போன்ற வீரன் இருந்தும் நமது நிலை தாழ்ந்து விட்டதே, காரணம்?

ப: என்ன செய்வது? கூடவே எட்டப்பன் என்பவனும் பிறந்து விட்டானே! "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்றும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா?

ஃ

எல். எம். பரராஜசிங்கம், யாழ்ப்பாணம்

கே: இலங்கையில் ஒரு கட்டபொம்மன் படம் தயாரித்தால் யார் யாரை நடிகர்களாகப் போடலாம்?

ப: கட்டபொம்மனுக மட்டக்களப்பு பிரதிநிதி இராசதுரையையும், ஊமைத் துரையாக வி. என். நவரத்தினத்தையும், வெள்ளையத் தேவனுக அமிர்தலிங்கத்தையும், எட்டப்பனுக எதிர் மன்னசிங்கத்தையும், கலக்டர் ஜாக்சனுக முஸ்தபாவையும், கேனல் மாக்ஸ் வெல்லாக காரியப்பரையும் தானுபதிப்பிள்ளையாக டாக்டர் நாகநாதனையும் போடலாம்.

ஃ

த. குமாரசாமி, கிளிநொச்சி

கே: எனது மகன், வயது வந்தவன், எண்ணுமல் எதையும் பேசி விடுகிருன். இதற்கு என்ன செய்வது?

ப: அடடா, இது ஆபத்தான வருத்த மாச்சே! அவனுக்குப் பகுத்தறிவு வளர ஆரம்பித்து விட்டது! இதற்கு ஒரே மருந்து தான் உண்டு. உடனே கல்யாணம் பண்ணி வையுங்கள். அப்புறம் அவள் முன்னிலையில் எண்ணி யெண்ணிப் அவன் பேசிப் பழகிக் கொள்வான்.

ஃ

இ. கந்தசாமித்துரை, வல்வெட்டித்துறை

கே: ருஷிய ரொக்கட் சந்திரனை முட்டிவிட்டதாமே!

ப: ஆமாம், இனிப் பெண்களின் முகத்தை சந்திரனுக்கு ஒப்பிட்டால் ஆபத்துத் தான்!

ஃ

வி. கே. இராசா, கணேசபுரம்

கே: ஒரு அழகான இளம் பெண்ணிடம் சென்று "தாகமாயிருக்கிறது தண்ணீர் தாருங்கள்" என்றேன். "குடத்திலிருக்கிறது குடியுங்களேன்" என்ருள். ஆனல் அங்கு குடத்தைக் காணவில்லை. நான் என்ன செய்வது?

ப: சரியான இடத்துக்கு இட்டுச் செல்லுங்கள் என்று வெட்கப்படாமல் அவளையே கேட்டுக் கொள்வதுதானே.

ஃ

எஸ். பசுபதி, காந்தியூர்

கே: தற்காலப் பெண்கள் குதி உயர்ந்த சப்பாத்தை விரும்புகின்ருர்களே எதற்காக?

ப: காலளவிலாவது கணவனை விட ஒருபடி உயர்ந்தவர்களாய் விளங்க வேண்டும் என்பதற்காக.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் திரு கு. வன்னியசிங்கம்:

# சிங்களத்தை ஏற்பதும் ஏற்காமல் இருப்பதும் தமிழரைப் பொறுத்தது

## ஏற்பதாயின், எப்போது என்று தீர்மானிப்பது அவர்களுக்கு உள்ள உரிமை

### இந்தி விஷயத்தில் நேரு இதைத் தான் சொன்னார்

### திணிக்க முயன்றால் எதிர்த்தே தீருவோம்

கோப்பாய்ப் பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கம், தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் இழைக்கும் தீங்குகளையும் தமிழை ஒழிக்க எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும் அணிமையில் பாராளுமன்றத்தில் உரைப்பாகப் பேசிய பேச்சின் நாலாவது பகுதி இங்கு தரப்படுகிறது. முதல் மூன்று பகுதிகளும் ஏற்கனவே சுதந்திரனில் வெளியிடப்பட்டன.

திரு வன்னியசிங்கம்: தலைவர் அவர்களே! பண்டிதர் நேருவின் (மொழிக்) கொள்கை யாதெனில், தாங்கள் எப்பொழுது இந்தி மொழியை ஏற்பாரெனத் தீர்மானிக்கும் பொறுப்பு இந்தி பேசா மக்களுக்கே உரியது என்பதே. 'இந்தி' என்ற சொல்லை யெடுத்துவிட்டு அதற்குப் பதிலாக 'சிங்களம்' என்ற சொல்லை அந்த இடத்தில் இட்டால் இலங்கை நிலைமைக்கு மிகப் பொருத்தமாயிருக்கும்.

வடக்குக், கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் சிங்களத்தை எப்பொழுது ஏற்பது, எவ்வாறு ஏற்பது என்பதைத் தீர்மானிப்பது எம்மைப்பொறுத்தவிடயமாகும். அதை நீங்கள் எவராயினும் எங்கள் மேற் றிணிக்க முடியாது; அவ்வாறு உங்களில் எவராயினும் திணிக்க முயல்வீர்களாயின் எம் சக்தி முழுவதையும் திரட்டி எம்மால் இயன்ற வரை அதை எதிர்ப்போம், என்பதை இவ்விடத்தில் இப்பொழுதே சொல்லி வைக்க விரும்புகிறேன்.

#### ஆங்கிலத்தின் நிலை

இந்தியாவில் ஆங்கிலம் இந்தி பேசும் மக்களுக்கும் இந்தி பேசா மக்களுக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் சாதனமாக விளங்குகிறது; அதுபோலவே இலங்கையிலும் சிங்களம் பேசுவோருக்கும் தமிழ் பேசுவோருக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் சாதனமாக ஆங்கிலம் இருத்தல் வேண்டும். ஆங்கிலம் இவ்வாறு பயன்படுகின்றமையினாலேயே அதனை நாம் சில வேலைகளில் உபயோகிக்க வேண்டியிருக்கிறது என்பதை கொழும்பு மத்திய தொகுதியின் மூன்றுவது பிரதிநிதிக்கு (திரு தேமிஸ்) சொல்ல விரும்புகிறேன்.

#### இரு மொழிகளுக்கும் சமஅந்தஸ்து

இன்று காலை கூட நான் பேசுவதற்கு எழுந்தவுடன் தமிழிற் பேசினால் தமக்கு விளங்காதென்று கூறி ஆங்கிலத்திலேயே பேசும்படி பிரதம மந்திரியார் கேட்டுக் கொண்டார். நிலைமை இவ்வாறிருக்கும்போது ஆங்கிலத்தில் நாம் பேசினால் நாம் ஆங்கில மோகம் உள்ளவர்களென்றோ, சிங்களம் அல்லது தமிழை முன்னேறவிடாது தடை செய்பவர்களென்றோ கூறிவிட முடியாது. சிங்களமும் தமிழும் இந்நாட்டின் அரசகரும மொழிகளாக இருத்தல் வேண்டுமெனவே நாம் விரும்புகிறோம்; ஆனால் ஒன்று மற்றதற்கு எவ்வகையிலும் குறைந்ததாகக் கருதப்படக்கூடாது. இரண்டும் சம அந்தஸ்துடன் விளங்கவேண்டும்.

இத் தொடர்பில் திரு நேருவின் கூற்றிலிருந்து வேறொரு பகுதியை எடுத்துக் கூற விரும்புகிறேன்—

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: எதிலிருந்து வாசிக்கிறீர்கள்?

திரு வன்னியசிங்கம்: ஆகஸ்ட் 8-ம் தேதி வெளியான இந்துப் பத்திரிகையிலிருந்து.

"ஆங்கிலம் நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவுக்கு ஒரு சிறந்த திறவுகோலாகச் சேவை செய்யும்; சுருங்கக் கூறின் 'நவீன உலகைப் பார்ப்பதற்கு ஒரு பலகணிவாயிலாக' அது உதவும், ஆகையினால் ஆங்கிலத்தை நாம் அகற்ற முடியாது; அகற்றினால் எமக்கே நட்டமாகும். விஞ்ஞான, தொழில் நுட்ப பாடங்களைப் படிக்க உதவும் பிற மொழிகளுள் ஆங்கிலத்தை நாம் விரும்புவது இயற்கையே; ஏனெனில் அதை நாம் கற்றுவிட்டோம், ஆங்கிலமே எமது பாட

(8-ம் பக்கம் பார்க்க)






# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழியக்கம் கைமேற் பயனளிக்கத் தொடங்கி விட்டது. தொண்டர்கள் பலர் ஆர்வத்துடன் அரும்பணி ஆற்றுகிறார்கள். ஊர்காவற்றுறைப் பட்டின சபை தன் அலுவல்களை எல்லாம் தமிழிற் செய்ய முடிவு செய்துள்ளது. யாழ்ப்பாண மாநகர சபையும் தன் அலுவல்கள் சிலவற்றைத் தமிழிலே செய்ய முன்வந்துள்ளது. அது எல்லா அலுவல்களையும் தமிழிலே செய்து ஈழத் தமிழகத்துக்கு வழி காட்டல் வேண்டும். அரும்பணி ஆற்றும் இளந் தமிழர் இயக்கம் யாழ்ப்பாண மாநகர சபையை எல்லா அலுவல்களையும் தமிழிலே செய்யுமாறு தூண்டல்வேண்டும். பல காப்புறுதிக் கம்பனிகள் (Insurance Companies) தமிழிலும் தம் அலுவல்களை செயய முனைந்துள்ளன. திருமலை நகர சபையும் ஏறாவூர் வடக்குக் கிராமச் சங்கமும் சிங்கள அறிக்கைகளை அரசாங்கத்துக்கே திருப்பி அனுப்பிவிட்டன, தமிழரசு வாலிப முன்னணி "எல்லாந் தமிழிற்" செய்வோம் என உறுதிபூண்டுளது. அகில இலங்கைத் தமிழியக்கமும் தோன்றிப் பணியாற்றுகிறது.

#### இனியும் காலம்தாழ்த்தல் ஆகாது

இந்த ஆண்டு முடிவுக்குள் [illegible] சாங்கம் முயல்கிறது. 60 சதவிதத்தினர் ஆங்கிலத்திலே அரசாங்கத்துடன்தொடர்பு கொள்கின்றனர் என அரசாங்கம் கவலைகொள்கிறது. எனவே ஆங்கிலத்தில் எழுதும் கடிதங்கள் முதலியவற்றுக்கு அடுத்த ஆண்டில் சிங்களத்திலேயே மறுமொழி அனுப்ப அரசாங்கம் முடிவு செய்வது உறுதி. எனவே தான் தமிழ்ப் பெருமக்களை இனியும் காலந்தாழ்த்தாது தமிழிலே எல்லா அலுவல்களையும் செய்யுமாறு வேண்டுகிறோம்.

#### கார்த்திகையில் தமிழியக்க வாரம்

வருகிற மார்கழி மாதம் முதலாந் தேதிக்குமுன் எல்லாத் தமிழரும் தமிழிலே தம் கருமங்களைச் செய்தல் வேண்டும். இந்நிலைமையை உண்டாக்குதல் தமிழியக்கத் தொண்டர்களின் முதற் பணியாகும். இப்பணி முற்றுப்பெறுதற்குத் தமிழியக்கத் தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் எம் இயக்கத்தில் சேர்தல் வேண்டும். சோர்வின்றித் தொண்டாற்றல் வேண்டும். தமிழியக்க வாரத்தை ஒவ்வொரு ஊரிலும் கொண்டாடுதல் வேண்டும். வருகிற கார்த்திகைத் திங்களில் தமிழியக்க வாரம் கொண்டாடப்படும். ஒவ்வொரு கிராம அதிகாரியின் (விதானை) பிரிவிலும் தமிழியக்க "வாரம் கொண்டாடப்படல் வேண்டும். எல்லா ஊர்களிலுமிருந்து தொண்டர்கள் தமிழியக்கத்தில்

(13ம் பக்கம் பார்க்க)

## கடவுளுக்கு கடிதம்

அகோ ஆண்டவரே! இப்படியாகத்தானே நானும் ஹோட்டல் சாப்பாடும் இட்டலியும் சாம்பாரும் போல—ஒருபிடி சோறும் ஒருபிடி கல்லுமாக விழுங்கி உயிர் வாழ்ந்து வருகின்றேன்.

கல்லென்றால் என்ன சாமானியமான பொருளா? ஒரு வீடுகட்ட எத்தனை வண்டி கல்லைக் குவிக்கவேண்டியிருக்கிறது. வீடுகட்டுவதற்கு கடன் கேட்டு மனுச்செய்த அத்தனை பேருக்கும் கடன் வழங்கிவிட வீடமைப்புப் பகுதி தீர்மானித்திருக்கிறதாம். விடு கட்ட கடன் வாங்கி விடுவது சுலபமான வேலை என்று எண்ணிவிடாதீர்கள், மனுச்செய்தவுடன் பணத்தைச் சாக்குச் சாக்காகக் கட்டி லொறியில் ஏற்றி வந்து கொட்டிவிடமாட்டார்கள். எத்தனையோ பேருக்கு பந்தம் பிடிக்க வேண்டும். பெரிய சுவாமிகளைச் சரிக்கட்டிவிட்டாலும், சொற்ப சம்பளத்தில் கணக்கெழுதும் சில்லறைப் பூதங்களைத் திருப்திப்படுத்தவே முடியாதாம். இவர்களுடைய தலைவிக்சம் வடிய எல்லோரையும் வரிசையாகக் கால்பிடிக்கவேண்டுமாம்.

ஆமாம், நமது விஸ்வாமித்திரருக்கும் கால்ப்பிடிப்பு வந்து இத்தனை நாளாச்சே, என்ன ஆச்சு? யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு நடையாக நடந்ததால் இடுப்பு வேறு வலிக்கிறதாம். சில நோயாளிகளைப் போல, அங்குள்ள கங்காணி முதல் காத்தவராயன்விடுவரை தேடிச்சென்று முட்டை, வாழைக்குலை, இராசவள்ளிக் கிழங்கு, ஆகியன அன்பளிப்புச் செய்து தெண்டனிட, அவருக்கு உங்களுடைய சம்பளம் என்ன, உறைபோடுவதற்குக் கூடக் காணாதே. முடிவில் ஆயுள்வேத வைத்தியத்தையாவது நாடலாம் என்றிருக்கிறார்.

ஆயுள்வேதக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் தான் நிறுவப்படும் என்று சொல்லிக்கொண்டே, அனுரதபுரியில் நிறுவ ஆயத்தங்கள் நடைபெறுகின்றனவாம். தமிழ் மக்களைப் பார்த்து, "நீ மாற்றாந்தாய் பிள்ளை, என் பிள்ளை என் பிள்ளைதான்" என்று கூறும் இந்த பண்டா(அ)ரச(ா)ங்கம் சிற்றன்னைப் பொலிலியைக் கைக் கொண்டு வெகுகாலம் ஆகிறது.

எதையும் சமாளித்து புண்ணுக்குப் புனுகு பூசி மூடுவது தான் நமது மானத்தைக் காக்க நல்லவழி. அப்படியல்லாமல் இங்குள்ள சம்பவங்கள் வெளி நாடுகளில் அம்பலமானால் சிரியாய்ச் சிரிப்பார்கள். அரை மந்திரிப் பதவிக்காக எட்டப்பன்கள் உருக்கொள்வோரும் இங்கு தான் இருக்கிறார்கள். சிறைச்சாலைகளில் இருந்து கைதிகள் தப்பி ஓடுவதும் இங்குதான். அவர்களைப் பிடிக்க முடியாமல் அரசினர் தவிப்பதும் இங்கு தான். மாஜி மாஜிஸ்ரேட்டுகளைக் கைது செய்யப் பிடி வாரண்ட் பிறப்பிப்பதும் இங்குதான். எல்லாம் இங்குதான். ஹூம்! அவர்களாச்சு அவர்களுடைய அரசாங்கமாச்சு, நமக்கெதற்கு வீண் வம்பு?

—நாரதர்

16—9—59

# மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கும் மூன்றெழுத்துச் சொல் அண்ணா

# தென்னாட்டுக்கு தன்மான உணர்வு ஊட்டிய மேதை

## அண்ணாவின் ஐம்பது ஆண்டு நிறைவு

மூன்று எழுத்துக்கள் இன்று மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கின்றன. தமிழ் நாடானாலும் சரி, தமிழன் வாழும் பிறநாடுகளானாலும் சரி அங்கெல்லாம் அந்த மூன்று எழுத்துக்களுக்கும் முக்கியத்துவம் உண்டு.

'அ...ண்...ணா'- இவைதான் அந்த மூன்று எழுத்துக்களும். அண்ணாமலைகள், அண்ணாசாமிகள் இன்னும் அண்ணா என்ற பகுதியை முதலில் கொண்ட பெயருடையோர் ஆயிரம் பேர் இருக்கலாம். அவர்களில் எவராலும் "அண்ணா"வாகி விட முடியவில்லை அண்ணாதுரை ஒருவரே வயதில் குறைந்தோருக்கும் மிகுந்தோருக்கும், கற்றோருக்கும் மற்றோருக்கும், ஒத்த கொள்கை உடையோருக்கும் எதிர்த் தரப்பாருக்கும், எளியோருக்கும் வலியோருக்கும், எல்லோருக்கும் அண்ணா ஆனார்.

### அண்ணா

அன்பின் அடையாளம், மதிப்பின் முத்திரை அந்த வார்த்தை. காஞ்சிப் பெருநகரம் தமிழ் நாட்டுக்குத் தந்த அண்ணாத்துரை எம். ஏ. பட்டம் பெற்றதோடு, பதவியும் பவுசும் தேடியிருக்கலாம்; துரைத்தனம் நடத்தியிருக்கலாம். ஆனால் அதை அவர் விரும்பவில்லை. தமிழ் மீது பற்றுக் கொண்டார். தம்மவரான தமிழரை ஒரு அங்கமாகக் கொண்ட திராவிடப் பெருங்குடி மீது பாசம் வைத்தார். அவர்கள் வாழும் முறை, நாட்டின் இழி நிலை இவற்றைக் கண்டு துடித்தார். அதன் விளைவு...? பொது நலப் பணிக்கு தம்மை அர்ப்பணித்தார். துரைத்தனம் நடத்தும் எண்ணமே அற்றவரானார். எனவேதான் நம்மிடம் இப்போது "துரை" இல்லை; அண்ணா இருக்கிறார்.

### அறிஞர்

அண்ணா அண்ணாவாக மட்டும் இல்லை. அவர் அறிஞர் அண்ணா. அப்படித்தான் எல்லோராலும் அழைக்கப்படுகிறார். அன்பின் அடையாளமான அண்ணா என்ற சொல் எப்படி அண்ணாத்துரையை மட்டும் குறிப்பதாக உள்ளதோ அதேபோல அறிவின் அடையாளமான அறிஞர் என்ற வார்த்தையும் இன்று அண்ணாத்துரையையே குறிப்பதாக இருக்கிறது. இதைவிட வேறு என்ன பெருமை வேண்டும்?

### அறிமுகம்

தென்னாட்டவருக்கு தன்மான உணர்வு ஊட்டி சமூக சீர்திருத்தப் பணி புரிந்து வரும் வெண்தாடி வேந்தராம் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் 14 ஆண்டுகள் பயிற்சி பெற்ற அண்ணா சீர்திருத்த வாதியாக, தமிழ் நாட்டின் தலைசிறந்த பேச்சாளனாக, அருமையான எழுத்தாளனாக, நல்ல பத்திரிகை ஆசிரியனாக, தீவிர சிந்தனையாளனாக, அற்புத நடிகனாக, எல்லாவற்றிற்கும் மேலாக மக்களைத் தன்பால் ஈர்த்திழுக்கும் சக்தி வாய்ந்தவனாகவும் செயல் வீரனாகவும் நாட்டுக்கு அறிமுகமானார்.

இன்று அண்ணா அரசியல் வாதியாக-மக்கள் பிரதிநிதியாகத் திகழ்கிறார். அரசியல் துறையிலும் அண்ணாவுக்கு

> அறிஞர் அண்ணாவின் ஐம்பதாண்டு நிறைவை யொட்டி இவ்வாரம் தமிழ் நாட்டில் பல பாகங்களிலும் யாழ்ப்பாணத்திலும் (பகுத்தறிவு இயக்கத்தால்) விழாக் கொண்டாடப்பட்டது; சுதந்திரனில் அண்ணாவின் ஐம்பதாண்டு நிறைவை யொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.
>
> தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தி. மு. கழகத்தின் பத்தாண்டு நிறைவு விழாவும் கடந்த 17-ந் தேதி தொடக்கம் பல்வேறு இடங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தேசபந்து

ஈடாகச் சொல்ல வேறு யாரும் இல்லை. 10 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியாரின் பொருந்தாக் கல்யாணம் காரணமாக மனக்கசப்பு



அடைந்து அவர் தலைமையிலிருந்த திராவிட கழகத்திலிருந்து விலகியதோடுதான் அண்ணா அரசியலில் தீவிர ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். தி. மு. க. (அதுவும் மூன்று எழுத்துக்கள்தாம்) உதயமாயிற்று. பக்கத்துணைக்குப் பலர் சேர்ந்தனர். கொள்கை வகுத்தனர். பட்டி தொட்டி எங்கும் பிரசாரம் ஆரம்பமாயிற்று. "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற குரல் எங்கும் எதிரொலித்தது. கழகத்தில் லட்சக் கணக்கில் மக்கள் சேர்ந்தனர். கடந்த 1957 தேர்தலில் சென்னை சட்ட சபைக்கு கழகத்தவர் 15 பேர் (அண்ணா உட்பட) தெரிவு செய்யப்பட்டனர் டில்லி பாராளுமன்றத்துக்கு 2 பேர் அனுப்பப்பட்டனர். அணிமையில் நடந்த சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் கழகம் நிர்வாகத்தையே கைப்பற்றியது.

### விடுதலைப் படை

ஆயினும் இதுவல்ல பெருமை தருவது அண்ணாவுக்கு. மற்ற அரசியல் தலைவர்களிலிருந்து அண்ணாவைத் தனியாக உயர்த்திக் காட்டும் சிறப்புக்குரிய அம்சம் வேறு. கழகத்திலே கொள்கைக் குழப்பம் இல்லை; பதவிப் பூசல் கிடையாது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று அண்ணா விதித்த கட்டுப்பாட்டை மீறுவார் இல்லை. [illegible] தாங்கும் இ[illegible] ருக்கும் உண்டு. செயல் வீரர்களுக்கு குறைவில்லை. பேச்சு, எழுத்து, நாடக, பிரசாரப் பணிகளுக்கு ஒவ்வொருவரும் தயார். எல்லாவற்றிற்கும் மேலாக இன்னொன்று. அண்ணா வாய் திறந்து பணிக்க வேண்டாம். கண் இமைத்து குறிப்பு உணர்த்தினாலே போதும். கழகத்தவர் எவரும் எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள்.

அண்ணாவின் வாயிலிருந்து என்ன வருகிறது, பேனா எதைப் பொறிக்கிறது என்பதில் எல்லோருக்கும் இன்று ஒரே அக்கறை. இது அவரவர் நிலையைப் பொறுத்து அன்பாலும், ஆர்வத்தாலும், அச்சத்தாலும் ஏற்படுகிறது.

அண்ணா யார்க்கும் எளியவர்; பழகுவதற்கு இனியவர். அன்பின் சின்னம், பண்பின் பிறப்பிடம் அவர். இத்தியாதி சிறப்பியல்கள்பு அவரது அறிவோடும் ஆற்றலோடும் சேர்ந்திருப்பதாலேயே மாற்றுக் கட்சிக்காரரின் அபிமானத்துக்கும் அவர் உரியவராக விளங்குகிறார்.

### பெரியாரும் அண்ணாவும்

பெரியாரை என்று விட்டுப் பிரிந்தாரோ அண்ணா, அன்றிலிருந்தே அவரையும் அவரது தோழர்களையும் "கண்ணீர்த்துளிகள்" என்றும் இன்னும் எப்படி எல்லாமோ பெரியார் திட்டிக் கொண்டு வருகிறார். இத்தனைக்கும் பெரியாரின் உள்ளம் புண்படும்படி ஒரு வார்த்தைதானும் அண்ணா பேசியதில்லை. தி. மு. கவினர் யாரையும் அப்படிப் பேச அனுமதித்ததுமில்லை பெரியாரைத் தமது அறிவுத் தந்தையாக, தலைவராகவே மதித்து வருகிறார். அண்ணாவை தி. மு. கழகத் தலைவர் என்று பலரும் சொல்லிக்கொண்டாலும் கழகத்தின் தலைமைப் பதவி இன்னமும் காலியாகவே இருக்கிறது-நிரப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரியார் காலத்துக்குப் பின்னர் ஒரு வேளை அது நிரப்பப்படலாம். இப்பொழுது பொதுச் செயலாளரே கழகக் காவலராக இருந்து வருகிறார்.

இன்னும், பெரியார் தொடங்கி வைத்த பணியையே அண்ணா இன்றும் செய்துகொண்டு வருகிறார். "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற உரிமைக் குரல் எழுப்பிய பெரியார் "திராவிட நாடாவது வெங்காய நாடாவது" என்று கேலி செய்யுமளவுக்கு நிலை மாறிவிட்ட போதிலும் அண்ணா திராவிட நாடு இலட்சியத்துக்காகவே பாடுபட்டு வருகிறார்.

### இலங்கையும் அண்ணாவும்

இலங்கை மக்கள் மீது அவருக்கு உள்ள அபிமானம் சொல்லி முடியாது. இதை மனதில் வைத்தே இங்குள்ள சிங்களத் தலைவர்கள் சிலர் தி. மு. கவையும் தமிழரசுக் கட்சியையும் இணைத்து ஆபத்து செய்திகளை அவ்வப்போது கட்டவிழ்த்துவிட்டு வருகிறார்கள். நல்லவேளையாக இங்குள்ள இ. தி. மு. க. தோழர்களைப் பார்த்தவர்கள் அண்ணாவையும் அவரது [illegible] கள். அந்தமட்டில் மிக்க மகிழ்ச்சி.

# ஏழு ஆண்டுகளாக நடக்கும் இலவச இராப் பாடசாலை

## ஆரம்பிக்கப்பட்டது இரண்டு மாணவர்களோடு--இன்று 214 பேர்

சுயநலம்வாய்ந்த அரசியல் வாதிகளால் இன வெறியும் மொழிவெறியும் ஆண்டப்பட்டு நாடு அல்லோலகல்லோலப்படும் இந்த வேளையில்கூட, சிங்கள வம்சத்தில் பிறந்த திரு அ. ஆ. சுமணதாஸ என்னும் ஒரு வாலிபர் தமது தாய் மொழிக்கு ஈடான பற்று தமிழ் மொழியிலும் கொண்டு, இரு மொழியிலும் ஒரு இலவச இராப் பாடசாலையை கொழும்பில் நடத்தி வருகின்றார் என்றால் அவர் தொண்டினைப் பாராட்ட யார்தான் தயங்குவார்கள்?

### வளர்ச்சி

கொழும்பு கொச்சிக்கடை இரத்தினம் ரோட்டில் நடைபெற்று வரும் ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் இராப் பாடசாலை இன்று அவ்வட்டாரத்திலுள்ள ஏழை மாணவர்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. 1952ம் ஆண்டில் ரா. முனியாண்டி, பி. கோவிந்தன் என்னும் இரண்டு மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த இலவச இராப்பாடசாலையில் இன்று 214 பிள்ளைகள் தமிழும் சிங்களமும் பயின்று வருகிறார்கள். திரு அ. ஆ. சுமணதாஸ தலைமை ஆசிரியராகவும் திரு ஜே. அகுஸ்தீன் பர்னாந்து பிரதம உதவி ஆசிரியராகவும், மற்றும் திருவாளர்கள் எஸ். தியாகராசா, எம். கிருஷ்ணா, அந்தோனிப்பிள்ளை, முத்தையா எம். என். முதலி ஆகியோர் உதவி ஆசிரியர்களாகவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

திரு சுமணதாச ஒரு சாதாரண தொழிலாளிதான். பணம் படைத்தவருமல்லர். அப்படியிருந்தும் அவருக்கிருக்கும் கல்வித் தாகத்தையும் சமூகப் பணி ஆர்வத்தையும் பார்க்கும்போது அவரை ஒரு சிறந்த தியாக சீலராகவே எண்ணத்தோன்றுகிறது.

### முத்தமிழ் வளர்க்க இயக்கம்

இன்றைய இலங்கையில் தமிழ் மொழி அரசாங்க மொழிகளுள் ஒன்றாக இருக்கக்கூடாது. தமிழுக்குச் சம அந்தஸ்து அளிக்கக்கூடாது என்று கிளர்ச்சி நடத்தும் சிங்கள மக்களின் இனத்தைச் சேர்ந்தவரான சுமணதாஸ தமது தாய்ப் பாஷைக்கு சமமாகவே தமிழையும் நேசிக்கிறார். தமிழ் மொழியில் அவர் நிரம்பிய அறிவாற்றல் உடையவராகவும் விளங்குகிறார். தமிழில் கொண்ட பற்றுதல் காரணமாக 'முத்தமிழை வளர்க்க மாணவர் சங்கம்,' மாணவர் கலைமன்றம் ஆகிய இரு இயக்கங்களை ஆரம்பித்து அவ்வப்போது கலாநிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார். அணிமையில் அவ்வாறான ஒரு கலைநிகழ்ச்சி கொழும்பு



திரு. அ. ஆ. சுமணதாஸ

கமலா மோடி மண்டபத்தில் நடைபெற்றது. (படம் 12-ம் பக்கம்)

### மகிழ்ச்சி

தமது பாடசாலையைப் பற்றி திரு சுமணதாஸ கூறுவதைக் கேட்க மிகவும் உருக்கமாக இருக்கும். அவர் சொன்னார்: 1952ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ந் தேதி ஒரு திண்ணையில் விளையாட்டாக இரண்டு பிள்ளைகளுடன் ஆரம்பித்த இந்த இராப் பாடசாலை இன்று 214 கொண்டு தினந்தினம் வளர்ந்து வருவதைக் கண்டு என் மனம் சொல்லிடங்காத மகிழ்ச்சியை அடைந்திருக்கிறது. இப்பாடசாலைக்காக நான்பட்ட துன்பம் கொஞ்சநஞ்சமல்ல எவருடைய பண உதவியையும் எதிர்பார்க்காமல், எந்த மாணவரிடமும் ஒரு சதம் தானும் கட்டணமாக வாங்

(12-ம் பக்கம் பார்க்க)


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கலகத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் [illegible]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சட்டமும் சமூகமும்



# தாபரிப்புச் சட்டம்

விவாகத்தின் விளைவுகளைப் பற்றிக் கவனித்தபொழுது, விவாகம் செய்த ஒருவன் தன் மனைவியையும் பிறக்கும் பிள்ளைகளையும் தயாரிக்கும் கடமையுள்ளவனென்பதையறிந்தோம். இங்கு தாபரிப்பு என்னும் விஷயத்தை விரிவாக ஆராய்வோம்.

முதலாவது, பிள்ளைகளைத் தாபரிக்கும் கடமைகளைப் பற்றிக் கவனிப்போம். தேசவழமைச் சட்டப்படியும் பொதுச் சட்டமாகிய ரோமன் டச் சட்டப்படியும் ஒரு தகப்பன் தனக்கு முறையான விவாகத்தால் பிறந்த பிள்ளைகளைத் தாபரிக்கும் கடமை உள்ளவனாய் இருக்கிறான். அது போலவே தகப்பன் காலம் சென்றவிடத்தில், தாபரிக்கும் கடமை தாய்க்குள்ளது. தகப்பனுக்கு தாபரிக்கும் வலிமை குறைந்திருந்தாலும் தாய் தாபரிக்க வேண்டும்.

பொதுச் சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட இக் கடமையை விரைவாகவும் குறைந்த செலவுடனும் ஆற்றப் பண்ணுவதற்காக 1889-ம் ஆண்டின் தாபரிப்புச் சட்டமென ஓர் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இப்போது தாபரிப்பு வழக்குகள் அச் சட்டத்தின் கீழேதான் கொண்டுவரப் படும்.

### தாபரிக்கும் கடமை

தாபரிக்கும் கடமையாவன, தன் தகுதிக்கும் தன் அந்தஸ்துக்குமேற்றவாறு பிள்ளைகளுக்கு உணவு அளிப்பதும், அவர்களுக்கு வசிக்க வசதி கொடுப்பதும், அவர்கள் உடம்புக்கு வேண்டிய சிகிச்சை செய்வதும், அவர்களுக்கு வேண்டிய கல்வியைப் பயிற்றுவதுமேயாம். பிள்ளை தாய்ப்பால் குடிக்கிறது என்னும் காரணத்தால் தகப்பன் தாபரிக்கும் கடனினின்றும் நீக்கப்பட மாட்டான். அதேபோலத்தான் பிள்ளைக்குப் போதிய ஆதனம் கொடுத்துவிட்டபடியால் தாம் தாபரிக்கக் கடமைப்பட்டவனல்லன் என்றும் தகப்பன் சொல்ல முடியாது. கொடுத்த ஆதனத்தினின்றும் வருமானம் வருவதாயிருந்தால் அல்லது ஆதனம்பணமாயிருந்துஅது அழியாமலிருந்தால்தான் அவன் தாபரிக்கும் கடமையிலிருந்தும் நீக்கப்படுவான்.

### வயது எல்லை

தாபரிப்புச் சட்டப்படி தகப்பனின் கடமை பிள்ளை 16 வயது அடையுமட்டுந்தான் உள்ளது; ஆனல் நீதிபதி விரும்பினல் தாபரிப்பு 18 வயது வரைக்குமெனத் தீர்க்கலாம். ஆயினும் அத்தீர்ப்பு பிள்ளை 16 வயது அடைய முன்னரே கொடுபட வேண்டும். 16 வயது அடைந்தபிறகுதாபரிப்புக்கு மனுப்பண்ண முடியாது; தாபரிப்பையும் 18 வயது மட்டும் நீடிக்க முடியாது. தாபரிப்பு வழக்குப் போடுவதற்குத் தகுதியான நீதிமன்றம் தகப்பனிருக்கும் இடத்தைச்சேர்ந்த அல்லது பிள்ளை வசிக்குமிடத்தைச் சேர்ந்த நீதிமன்றம்(மாஜிஸ்டிரேட் கோர்ட்) ஆயிருக்க வேண்டும். மாவட்ட நீதிமன்றத்தில் (டிஸ்ரிக் கோர்ட்) தாபரிப்பு வழக்குக்கு மனுப்பண்ண முடியாது.

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

### தாபரிப்புத் தொகை

ஒருவன் தன் பிள்ளையைத் தாபரிக்க மறுக்கும் பட்சத்திலும் அல்லது தாபரிக்காமல அசண்டை செய்யும் பட்சத்திலும் அவனல் தாபரிக்கும் வல்லமையுண்டானல், நீதிமன்றம், அவனைத் தாபரிப்புப் பணம் கட்டும்படி உத்தரவிடலாம். ஒருவன் எவ்விதத்தாலும் சம்பாத்தியமுடையவனயிருந்தாலும் அல்லது சம்பாதிக்க வல்லமையிருந்தும் சம்பாதியாமலிருந்தபோதிலும் தாபரிக்கும் வல்லமையுடையவனெனவே கருதப்படுவான்.

ஒருவன் பிள்ளையில்லாமலயிருந்தால் அவன் எவ்வளவு உழைக்கச் சக்தியுள்ளவன் என்பதை ஆராய்ந்து நீதிமன்றம் தகுந்த பணத்தைத் தாபரிப்புப் பணமாகத் தீர்க்கும். எனினும் பிள்ளைக்கு மாதம் நூறு ரூபாவுக்கு மேற்பட்ட தாபரிப்புப் பணம் வழங்க நீதிமன்றத்துக்கு இச் சட்டத்தின்கீழ் உரித்தில்லை.

### கடமையை தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள்

பிள்ளையின் தாபரிப்புக்காக ஒரு முழுத் தொகையையும் கட்டித் தன் கடமையினின்றும் விலகவும் முடியாது. பிள்ளையின் பேரில் பிள்ளையைப் பராமரிப்பவர் யாரேனும் தாபரிப்புப் பணத்துக்கு மனுப் பண்ணலாம். பிள்ளை இன்னெருவரின் தர்மத்தாலே வளர்க்கப்பட்டு வருகிறதென்னும் காரணத்தைக் கொண்டு தகப்பன் தன் கடமையைத் தவிர்க்க முடியாது.

ஆனல் தானே பிள்ளையைத் தாபரிக்க உடன்பட்டு பிள்ளையைத் தாபரித்தால் தாபரிப்புப் பணம் கட்டத் தேவையில்லை. தகப்பன் போதிய காரணத்தின் நிமித்தமாகப் பிள்ளையை வளர்க்கும் தகமையை யிழந்திருந்தாலன்றி அவன் வேறெவரின் இல்லத்திலும் பிள்ளையை வளர்ப்பதற்காகத் தாபரிப்புப் பணம் கட்ட வேண்டிய கடமையில்லை; ஒருவன் தன் நடத்தைப் பிழை(அதாவது குடி அல்லது விபசாரம்) காரணமாக தன் பிள்ளையை வளர்க்கும் தகைமையை யிழப்பான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பிள்ளைகளைச் சதா கொடுமைப்படுத்தலும் இதுபோலவே).

### முந்திய சட்ட நடை முறை

இச் சந்தர்ப்பத்தில் தேசவழமைச் சட்டத்தின் பழைய சரித்திரமொன்றையும் அவதானித்தல் நன்று. 1911-ம் ஆண்டுக்கு முந்திய சட்டப்படி ஒரு யாழ்ப்பாணத் தமிழன் முதல் தாரத்துக்குப் பிள்ளைகளிருக்குங்கால் மறு விவாகம் செய்தால் அப் பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்தை யிழப்பான். அத்துடன் அவன் பிள்ளைகளையும், பிள்ளைகளுக்கு தாயிடமிருந்து வந்த சொத்துக்களையும், தேடிய தேட்டத்தின் அரைப் பங்கையும் பிள்ளைகளின் மாதாவழி உரித்தினரிடம் (பிரதானமாக மாதாவின் தாயிடம்) பாரம் கொடுக்க வேண்டும். அச் சந்தர்ப்பத்தில் பிள்ளைகளைத் தாபரிப்பதற்குப் பணம் கட்டும் கடமையவனுக்கில்லை பிள்ளைகளைத் தன்னிடம் கொடுக்காவிடில் தாபரிப்புப்பணம் கொடுக்க மறுக்க அவனுக்கு உரித்துண்டு.

### பிந்திய நடை முறை

ஆனல் மாதாவின் தாய் பிள்ளைகளைத் தகப்பனிடம் திருப்பிக் கொடுக்க மறுத்துக் கொண்டும், தகப்பனிடம் தாபரிப்புப் பணம் ஒரு சந்தர்ப்பத்தில் கேட்கலாம். (அதாவது சதா கொடுமை காரணத்தால் தகப்பன் பிள்ளைகளை வளர்க்கும் தகைமையை யிழந்திருக்கும் சந்தர்ப்பத்தில் அப்படிக் கேட்கலாம்.) இக் கொள்கையில் 1911-ம் ஆண்டுக்குப் பிறகு சிறு மாறுதல் ஏற்பட்டது. 1911-ம் சட்டப்படி தகப்பனுக்கு மறு விவாகம்செய்த சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளைப் பராமரிக்கும் உரித்தும் பிள்ளைகளுக்குத் தாயிடமிருந்துவந்த சொத்தில் பிள்ளைகள் பராயப்படும்வரையுள்ள சீவிய உரித்துமுண்டு. (பிள்ளைகள் பராயப்பட்டவுடன் தாயிடமிருந்து வந்த சொத்து முழுவதையும் பெறுவதற்கு உரித்துடையவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது)

1911-ம் ஆண்டுக்குப்பிறகு பொதுச் சட்டம் போலவே பிள்ளைகளைப் பராபரிக்கும் உரித்தும், பிள்ளைகளைத் தாபரிக்கும் கடமையும் தகப்பனுக்கே உரியன. ஆகையால் பிள்ளைகளைப் பராமரிப்பதில் அசண்டை செய்தால் அல்லது பிள்ளைகளின் பராமரிப்புக்குத்தன் நடத்தையினல் அருகதையற்றிருந்தால் பிள்ளைகளைத் தாபரிப்பதற்குப் பணம் கட்டியாக வேண்டும்.

### பிள்ளையின் பிதா என ருசுப்படுத்தல்

இனிச் சட்ட ரீதியற்ற பிள்ளை (Illegitimate Child) அதாவது முறையான விவாகமில்லாமல் பிறந்த பிள்ளையை அப்பிள்ளையின் தகப்பன் தாபரிக்கக் கடமைப்பட்டுள்ளானே வென்பதையும் அதையொட்டிய விஷயங்களையும் ஆராய்வோம். முதலாவதாகத் தாபரிப்புப் பணத்துக்கு மனுப்பண்ணுபவர் தாயாயிருந்தாலும் சரி, வேறெவராயிருந்தாலும் சரி பிரதிவாதி (Respondent) தாம் பிள்ளையின் தகப்பன் என்பதை நிரூபிக்க வேண்டும், அவன் பிள்ளையின் தகப்பன் என்பதைத் தாயின் தனிச் சாட்சியத்தால் மாத்திரம் நிரூபிக்க முடியாது. வேறு சாசன மூலமேனும் அல்லது வேறு சாட்சிய மூலமேனும் திட நிச்சயப்படுத்த வேண்டும். (Corroborate).

உதாரணமாகக் கருத்தரித்த காலத்தில் தாய் தன் இனத்தவர்களுக்கு, குற்றம் சாட்டப்பட்டவரின் முன்னிலையில் அவர்தான் பிள்ளையின் தகப்பனெனக் கூற அவர் பேசாமலிருந்தார் என்பதே போதிய சாட்சியமாகும். ஆனல் தாய்க்கும் பிரதிவாதிக்கும் தொடர்பு கொள்வதற்குச் சந்தர்ப்பமிருந்ததென்னும் சாட்சியம் திட நிச்சய சாட்சியம் (Corroborative Evidence) அல்ல. உதாரணமாகத் தாயும் பிரதிவாதியும் ஒரே வீட்டில் எட்டு வருஷமாகக் கூடி வசித்தார்களென்பது மாத்திரம் போதுமானதாகாது.

### தாபரிப்பு மனுவுக்கு காலஎல்லை

இரண்டாவதாக பிள்ளை பிறந்து 12 மாதத்திற்கிடையில் தாபரிப்புக்கு மனுப்பண்ண வேண்டும்; இல்லையேல் பிள்ளை பிறந்து பன்னிரண்டு மாதத்துக்கிடையில் பிரதிவாதி பிள்ளையைத் தாபரித்தாரென்ருவது அல்லது தாபரிப்பதற்குப் பணம் கொடுத்தாரென்ருவது நிரூபிப்பதற்குச் சாட்சியம் காட்டவேண்டும். பிள்ளை பிறந்து பன்னிரண்டு மாதத்திற்கிடையில் அத்தகப்பனரெனப்பட்டவர் இலங்கைத் தீவுக்கு வெளியே போயிருந்தாரானல் அவர் அப்படியே போயிருந்தாரென நிரூபிப்பதுடன், அவர் இலங்கைக்குத் திரும்பிவந்த நாளிலிருந்து பன்னிரண்டு மாதத்திற்கிடையில் மனுப்பண்ணினர் என்பதையும் ருசுப்படுத்த வேண்டும்.

### பிள்ளையின் நிலைமை

மூன்ருவதாகப் பிள்ளை தன்னைத் தாபரிக்கும் சக்தியற்றதெனவும் ருசுப்படுத்த வேண்டும்; தாயின் உழைப்பாலே பிள்ளை வளர்க்கப்படுகிறதென்பதை யொட்டித் தகப்பன் தாபரிக்கும் கடமையிலிருந்தும் நீக்கப்பட மாட்டான். ஆனல் பிள்ளை தன் உழைப்பால் தாபரிப்புக்குச் சற்றேனும் உதவிகொடுப்பதாயின் அதற்கேற்றபடி அது தன்னைத் தாபரிக்கும் சக்தியுடையதென்பது புலனகும், அச் சந்தர்ப்பங்களில் அதன் வயது உடலுறுதி தேகாரோக்கியம், சூழ்நிலை, உழைப்பால் வரக்கூடிய வேதனம்யாவும் ஆராயப்படும்.

நான்காவதாக தகப்பனெனப் படுபவர் தாபரிக்கப் போதிய வசதியுள்ளவ

(11-ம் பக்கம் பார்க்க)


## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. ஹமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுண்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்

திரு. அ. ஆனந்தலிங்கம்
ருப்பியன் தோட்டம், கம்பர்மலை
வென்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கண்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியாவிலிருந்து வந்த இராமன் இலங்கை வீரன் இராவணனைத் தோற்கடித்தான் என்ற கதையைக் கேட்ட நாள் தொடக்கம் நாட்டுப் பற்று காரணமாக நான் பட்ட கவலை கொஞ்ச நஞ்சமல்ல. இராமராகவநத விட்டுணு பத்து அவதாரங்கள் மாத்திரம் தான் எடுக்க முடிந்தது. பாபம்! அவருக்கு அதற்குமேல் வேறென்ன அவதாரம் எடுக்கலாம் என்று தெரியவில்லை! ஆனால் இராவணனின் நாடான இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இரப்பரோ பத்துக்கு மேற்பட்ட அவதாரங்களை எடுக்கிறது ஷாங்கையில்; பலவிதங்களில் பயன்படுகிறது மக்களுக்கு. இதனைக் கண்ணுற்ற எனக்கு இராவணன் தோற்றுவிட்டானே என்ற கவலைகூட மறைந்தது; மகிழ்ச்சி என்னை ஆட்கொண்டது.

### நமது இரப்பரும் சீன அரிசியும்

இரப்பர், தேயிலை முதலிய மூலப்பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு அரிசிக்காக இரந்து தொலைப்பர் இலங்கையர். "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்" என்ற குறளுக்கு, "மக்கள் வேலையின்றி வாடிப் பிச்சையெடுக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டால் அந்நாட்டை ஆளும் மன்னன் கெட்டொழிவதாக" என்ற புதுமைக் கருத்தில் நம்பிக்கை கொள்ளும் நாள் எந்நாளோ?

இரப்பரைச் சீனுவுக்கு அனுப்புகிறோம். அவர்கள் எமக்கு அரிசியை அனுப்புகிறார்கள். அரிசியிலும் பார்க்க இரப்பர் பால் அதிக சுவையும் சத்துமுள்ளதென்பதை அறிந்து, தந்திரமாக அரிசியைத் தந்து இரப்பரை வாங்கி இரைப்பைக்குள் தள்ளுகின்றனரா சீனர் என யாரோ ஆவலோடு கேட்டதாக நினைவு. இந்த ஐயத்தைத் தீர்ப்பதற்கு ஷாங்கையிலே நல்ல வாய்ப்பேற்பட்டது. அம்மாபெரும் நகரில் நாம் பார்த்த பல தொழிற்சாலைகளில் இரப்பர் தொழிற்சாலை மிக முக்கியமானது.

### இரப்பர் தொழிற்சாலை

இந்தத் தொழிற்சாலைக்கு இலங்கை, இந்தோனேசியா, மலாயா முதலிய நாடுகளிலிருந்து இரப்பர் இறக்குமதியாகிறது. காலணிகள், பைசிக்கிள், கார் முதலியவற்றிற்கான டயர்கள் போன்ற பல அவதாரங்களை இரப்பர்எடுக்கின்றது. கிளைத் தொழிற்சாலைகள் உட்பட இங்கு வேலை செய்வோர் எண்ணிக்கை 5,600. தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இத்தொழிற்சாலையின் இயக்குநர் குழுவில் இடம் பெற்றுள்ளனர். இப்பொழுது தொழிலாளரின் வேலைதிறமையைப் பெருக்குவித்துத் தொழிலில் ஊக்கம் கொள்ளச் செய்வதற்காக ஆங்காங்கு பல சுலோக அட்டைகள் தொங்க விடப்பட்டுள்ளன. கேலிச் சித்திரங்களும் காணப்படுகின்றன. அதிலொன்றில் பிரித்தானியன் ஒருவன் யூனியன் ஜாக் கொடியுடன் சிறிய உருவில் பதுங்கி இருக்க, பெரிய உருவிலுள்ள சீனன் ஒருவன் கையில் செஞ்சீனக் கொடியுடன் 1965ல் கடந்து செல்வதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. 1965ல் சீனுவின் உற்பத்தி மிஞ்சிவிடுமாம்.

### ஆண்—பெண் சமத்துவம்

தொழிற்சாலையின் பல பிரிவுகளிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக நின்று வேலை செய்கின்றனர். குறிப்பாகச் சைக்கிள் டயர்களை, கரிக்கையோடு நிற்கும் காரிகைகள் நிமிடத்திற்குப் பலவாக ஆக்கிக் குவிக்கின்றனர். அவர்களின் கைவன்மையைக் கண்டஎம் ஆசிரியர் குழுவிலிருந்த கன்னியர் "பெண்களால் செய்ய முடியாததும் உண்டோ?" என நாவன்மை காட்டிப் பீடுநடை போட்டனர். ஆனால் தொழிற்சாலை முழுவதையும் பார்ப்பதற்குள் கால்வன்மை குன்றி திண்டாடித் திணறி ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டனர்; பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாயிற்று.

நாம் சென்றிருந்தன்று தான் டிராக்டருக்கானடயர் உற்பத்தி தொடங்கியது. முதலாவது டயர் இயந்திரத்தினின்றும் வெளியாகி வந்ததும், தொழிலாளர் அதனைச் சூழ்ந்து நின்று மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரித்தனர். முதல் டயர் உற்பத்தியாவதைக் காணும் பெருவாய்ப்பு எமக்குக் கிட்டியதையிட்டுப் பெரு மகிழ்வு கொண்டோம். சிகரெட் சாம்பல் போடுவதற்காகச் சிறிய உருவில் டயர்போலச் செய்திருக்கிறார்கள் சிமிழ்களை. அவற்றை அன்பளிப்பாகத் தந்தார்கள்.

### நடுப் பள்ளி

பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மட்டுமுள்ள ஷாங்கையின் நடுப் பள்ளியொன்றிற்குச் சென்றோம். மேல் வகுப்பு மாணவர் சீன மொழி, வேற்று நாட்டு மொழியொன்று (உருசியன் அல்லது ஆங்கிலம்), கணிதம், வரலாறு, நிலவியல், அரசியல், உயிரியல், பௌதிகம், இரசாயனம், இசை, நுண் கலைகளிலொன்று, உடற்பயிற்சி முதலிய எல்லாப் பாடங்களையும் படித்தல் வேண்டும். கலைப் பாடங்கள் பயில்வோர், விஞ்ஞானப் பாடங்கள் பயில்வோர் என்று வேற்றுமை கிடையாது. இடநெருக்கடி காரணமாக இது இருநேரப் பள்ளியாக மாற்றப்பட்டிருக்கிறது. காலை 7-15 தொடக்கம் 11-15 வரை ஒரு பகுதி மாணவரும், பிற்பகல் 1-30 தொடக்கம் 6-30 வரை மற்றப் பகுதி மாணவரும் பள்ளிக்கு வருகின்றனர். ஒருகிழமையில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பள்ளி இயங்குகின்றது.

### ஆசிரியர் சம்பள உயர்வு

கல்வித்தரம், பயிற்சி, சேவை, அரசியல் விழிப்புணர்ச்சி முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டே ஆசிரியர்களது சம்பளம் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆண்டுதோறும் குறிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வு கிடையாது. நாட்டு வருமான உயர்வைப்பொறுத்தே சம்பளமும் உயர்த்தப்படுகின்றது. தலைமை ஆசிரியர் நேரம் முழுவதும் நிர்வாகத்திலேயே செலவிடப்படுகின்றது; அவர் வகுப்புகளுக்குச் சென்று கல்வி பயிற்றுதல் கிடையாது.

குறும்பு செய்யும் மாணவர்களைப் புத்திமதிமூலமே திருத்துகின்றனர்; அடிப்பதில்லை. சொற்கேளாது, அடிக்கடி தொல்லை கொடுப்பானாகில் அவன் பள்ளியிலிருந்தே விரட்டப்படுவான்.

### புது முயற்சியாளர் இயக்கம்

செஞ்சீனப் பள்ளிகளில் சாரணர் இயக்கம் இல்லை. அதற்குப் பதிலாகப் "புது முயற்சியாளர் இயக்கம்" (Pioneer Movement) உண்டு. இது சீனப் பொதுவுடைமை வாலிப இயக்கத்தின் நேரடிப் பார்வையின்கீழ் இயங்குகின்றது. நாம் சென்றிருந்த நடுப் பள்ளியில் ஆசிரியர் இருவர் தமது முழு நேரத்தையும் புது முயற்சியாளர் இயக்க வேலைகளுக்காகச் செலவிடுகின்றனர். இவ் வியக்கத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பள்ளிக்கு வரும் பொழுதும், பொதுப் பணிக்கோ, சுற்றுலாவிற்கோ செல்லும்பொழுதும் கழுத்திலே சிவத்த அங்கியொன்றை அணிகிறார்கள்.

### புது முயற்சியாளர் மனை


புது முயற்சியாளர் இயக்கத்திற்கு ஒவ்வொரு நகரிலும் தலைமைநிலையம் உண்டு. ஷாங்கையிலிருக்கும் இந்த நிலையம் முன்னைய பிரித்தானிய வாணிபப் பெருமகனார் ஒருவரின் மாளிகையாகத் திகழ்ந்திருந்தது. இங்கு நாம் சென்றிருந்தபோது அதன் இயக்குநர் சென்-வெய்-போ இதன் பல பிரிவுகட்கும் எம்மை அழைத்துச் சென்று காண்பித்தார். அண்மையில் செஞ்சீனக் குடியரசின் உதவித் தலைவர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி சன்-யாட்-சன் அவர்களே இந் நிலையத்தை 1963-ல் இங்கு நிறுவினர்.

பள்ளி நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் மாணவர் இங்கு வருகின்றனர். தத்தமக்கு விருப்பமான ஈடுபாடுகளில் புகுந்து செயலாற்றுகின்றனர். இசை, நாடகம், ஓவியம், விஞ்ஞானம் முதலிய பல துறைகள் மாணவர் கவனத்தைக் கவருகின்றன. ஆசிரியர்கள் இங்கு வந்து பல துறைகளிலும் பயிற்சி பெற்றுச் செல்கின்றனர்.

### மாணவரும் அரசியலும்

1925-ம் ஆண்டு தொடக்கம் மாணவர் அரசியலில் பெரும் பணியாற்றி வந்திருக்கின்றனர். ஊர்வலங்கள், கிளர்ச்சிகள், கட்சிப் பிரசார வேலைகள் முதலியவற்றில் மாணவருக்கும் முக்கிய பங்கிருந்து வந்தது. 1949-ம் ஆண்டுப் பொதுவுடமைப் புரட்சியின் போது காவலராகவும், செய்தித் தூதுவராகவும் மாணவர் பணியாற்றினர். அரசியலில், செய்தித் தூதுவராகவும் மாணவர் பணியாற்றினர். அரசியலில் மாணவரின் சக்தியை யுணர்ந்த பொதுவுடமைக் கட்சியினர் இவர்களை ஒன்று சேர்த்து ஒரு கட்டுப்பாடான இயக்கத்திற்குள் கொண்டுவரவே இந்தப் புது முயற்சியாளர் இயக்கத்தைத் தொடக்கினர்.

(தொடரும்)



இடம்: தொழிலாளர் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் சில குழந்தைகள். வலம்: மறைந்த மாவீரர் சன்-யாட்-சன் இல்லத்தின் முன்புறத் தோற்றம். இரண்டும் ஷாங்கையில் உள்ளன.

# விஞ்ஞானம் கற்பவர்கள் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### மொழிபெயர்ப்பில் சிக்கல்

இன்று மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் உள்ள முக்கிய சிக்கல் கலைச் சொல் ஆக்கம் ஆகும். பொது விஞ்ஞானத்தில் உள்ள சில ஆங்கிலக் கலைச் சொற்களுக்குப் பல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். வெளியீட்டிற்கு வெளியீடு, ஆசிரியருக்கு ஆசிரியர், வேறுபட்ட சொற்களை வழங்குகின்றனர். இதனால் மாணவர்களுக்கு ஏற்படும் மயக்கம் கொஞ்சநஞ்சமல்ல. எடுத்துக்காட்டாக, Hydrogen என்ற சொல்லுக்கு 'ஐதரஸன்', 'ஜலவாயு', 'நீரகம்' என்று இப்படிப் பல சொற்கள் வழக்கில் உண்டு. Temperature என்பதை 'உஷ்ண நிலை', 'வெப்ப நிலை' என இரு விதமாக அழைக்கின்றனர். சில இலக்கியப் பற்றுடையோர், "ஒரு சொல்லுக்குப் பொருள் கூறப் பல சொற்கள் இருந்தால் அதில் என்ன கேடு? பொருள் விளங்கிய வரை அதால் எமக்கு ஏற்படும் இழப்பு என்ன?" என்று கேட்கின்றனர். இலக்கியம் வேறு, விஞ்ஞானம் வேறு என்பதை நாம் உணர வேண்டும். விஞ்ஞானத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு சொல்லும் மட்டும் இருப்பதுதான் வேண்டற்பாலது.

### தொலை பேசியும் தொலைபன்னியும்

கலைச் சொற்களில் ஒரு [illegible] பல சொற்கள் தோன்றுங் காரணம் என்ன? ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒரு தனி முறை அமைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். தமிழில் புதுக் கலைகள் வளர வேணடும் என்ற பொதுப் பணி எண்ணம் மனதில் இருந்தால் இத்தொல்லை ஏற்படாது. எடுத்துக்காட்டாக, நம் நாட்டுத் தன்மொழி அலுவலகத்தார் Telephone என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பெருமளவில் வழக்கில் வந்துவிட்ட 'தொலைபேசி' என்ற சொல்லைத் தள்ளிவிட்டுத் 'தொலைபன்னி' என்ற சொல்லைக் கண்டுபிடித்துள்ளனர்.

### ஆட்டுக் குட்டியும் ஆஷ்டுக் குஷ்டியும்

தமிழ் மொழியில் தம்மால் இயன்றளவு வட மொழியைப் புகுத்திவிட வேண்டும் என்று ஆர்வம்கொண்ட ஒருசாரார்

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1959 செப்டம்பர் மாதம் 20-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன: 3411 த. பெ. 1183

# கோப்பாய்க் கோமானை இழந்தோம்

நெஞ்சம் பிளந்தது. இரத்தம் உறைந்தது. இதயம் சில்லிட்டது. வான் இடிந்து தலைமீது விழுந்தது போன்ற பேரதிர்ச்சி பீடித்தது. பேச முடியாத நிலை; ஆற்ற முடியாத கண்ணீர்!

கோப்பாய்க் கோமானை இழந்தோம் என்ற கொடிய செய்தி நாராசம் பாய்ந்ததெனச் செவியில் ஊடுருவியபோது, தமிழ் பேசும் மக்கள் செயலிழந்து, சிந்தனையிழந்து, நிலைமறந்து, சிலையாக ஸ்தம்பித்தனர்!

பன்னிரண்டு ஆண்டுகள் பாராளுமன்றத்தில் கோப்பாய்த் தொகுதியின் மணிச்சுடராய் நின்றெரிந்த மலைவிளக்கு அணைந்துவிட்டது. தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ் நாட்டுக்குமாகத் தியாகத் தீயில் தம்மைத் தாமே பொசுக்கிப் புகைத்து நறுமணம் நல்கி வந்த அகில் தூபம் குமைந்துவிட்டது.

தமிழினத்தின் உரிமைக் கிளர்ச்சியை, தமிழகத்தின் விடுதலைப் போராட்டத்தைக் குன்றாத ஆர்வத்துடனும், குலையாத மனஉறுதியுடனும் முன்னின்று நடத்தி வந்த வீரத் தளபதியின் வீங்கு தடந்தோள்கள் சாய்ந்துவிட்டன. அந்தோ, ஓய்ந்துவிட்டன.

தேன் சொட்டும் தீந் தமிழிலும், அறிவொளி வீசும் ஆங்கிலத்திலும், அரசியல், இலக்கியம், பொருளியல், தருக்கம், சமூகம், சமயம் ஆகிய அறு துறைகளிலும் அழகழகாக, அட்சர சுத்தமாக, ஆற்றொழுக்காகச் சொற்பெருக்காற்றும் நாவலனை—சோர்வில்லாச் சொற் செல்வனைச் சோரம் போகவிட்டு விட்டோமே!

அன்பராக, நண்பராக, பண்பாளராக, பகுத்தறியும் சிந்தனையாளராக, பாராளுமன்ற நடைமுறை சாஸ்திரத்தில் பண்டிதராக, முத்தமிழ்க் காவலராக, முதுதமிழ் அறிஞராக, தமிழ் மொழித் தொண்டராக, சட்ட நிபுணராக, புள்ளிவிவரப் பொக்கிஷாதிபராக, சத்தியாக்கிரகியாக, அரசியல் ஞானியாக, நகைச் சுவைப் பேச்சாளராக, மக்கள் பிரதிநிதியாக, மாபெரும் தலைவராக விளங்கிய ஒரு பெருமகனை நாம்திரு வன்னியசிங்கம் என்ற திருவுருவில் பெற்றிருந்தோம். இன்று அன்னாரை இழந்து—காலன் வசம் பறிகொடுத்து—கையறு நிலையில் நின்று கதறுகின்றோம்.

ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பு இது. திரட்டிச் சேர்க்க முடியாத பெரும் நஷ்டம் இது. தேடித் தேடித் திரிந்தாலும் நிரப்ப முடியாத பரந்த பெரும் இடை வெளி இது. இந்த நிலையில் 'தமிழினத்தின் தலைவிதி, தமிழினத்தின் சாபத்திடு, தமிழினத்தின் கதி இதுவா?' என்று அலறுவாருக்கு இதமுற ஒரு வார்த்தை ஆறுதல் கூறுவது எங்ஙனம்?

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் வெளியிட்டுள்ள ஒரு வாக்கியம் தான் துடியாய்த் துடிக்கும் தமிழினத்துக்கு, துவண்டு புலம்பும் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு ஆறுதல் தரவேண்டும். அந்த மணியான வாக்கியம்—

"எதிர்பாராமல் இப்படியான ஒரு இடையூறினை விளைவித்த பரம்பொருள் தான் இதிலிருந்து கடைத் தேறவும் வழி காட்ட வேண்டும்" என்பதே.

# 'எண்ட எண்ட மாத்தயா எதிர் மான சிங்க(ள)மே'

## பட்டிருப்புப் பாவாணர் பாடியளித்த வரவேற்புப் பா

[ எழுதியவர்: "இராமபாணம்" சுதந்திரன் விசேஷ நிருபர் ]

பெரிய கல்லாற்றுப் பொதுமக்கள் எட்டப்பன் எதிர்மானசிங்க(ள)த்துக்கு வழங்கிய வாழ்த்துரையைக் கடந்த வாரம் நேயர்களுக்குத் தந்தோம். அந்த வாழ்த்துரை கேட்ட அரை மந்திரியார் பட்ட பாட்டை நாம் இங்கு விளக்க விரும்பவில்லை. நேயர்களின் கற்பனைக்கு அதை விட்டுவிட்டு இன்னுமொரு முக்கிய விஷயத்துக்கு விரைந்து வர வேண்டியிருக்கிறது.

அதாவது, வாழ்த்துரையைத் தொடர்ந்து பட்டிருப்புப் பாவாணர் எட்டப்பனுக்கு மிகப் பொருத்தமானதொரு வரவேற்புப்பா பாடி வழங்கியிருக்கிறார். அதை இங்கு நேயர்களுக்குத் தருகிறோம்:

'எண்ட எண்ட மாத்தயா
எதிர்மான சிங்க(ள)மே!
பண்டெங்கள் பட்டிருப்பின்
பாவத்தால் வந்துதித்த
"சண்டாளன்" என்றிங்கு
சத்தமிட்டு நின்வரவு
கண்டு சினங்கொண்டு
கல்லெடுத்து வீசுதற்கும்
பாட்டனார் காலின்
பழையவற்றைத்
தூக்குதற்கும்
விட்டுக்குச் சின்னாள்
விலகி இருந்தபெண்கள்
தோட்டிக்குப் போடுவதைத்
தோரணமா யும்முன்னே
நீட்டுதற்கும் வேலிகளில்
நீள்எருமைக்
கொம்புகளைத்
தொங்கவிட்டுக் கூடத்
துடைப்பத்தைக்
கட்டியதில்
இங்கே எதற்கு
"இது"வும் வருகுதெனப்
பொங்கி எழுந்துவைக்கோற்
பொம்மைகளைச்சந்தியிலே
மங்கையர்தம் கையாலே
மாலையிட்டு வைப்பதற்கும்
அஞ்சி ஒளிக்காத
"அரைமந் திரி" வருக!

***

பஞ்சமிலைப் போலீசுப்
பட்டாளம் துப்பாக்கி
கொஞ்சமா கைகளிலே
குண்டாந் தடிசவுக்கு!
மிஞ்சினால் கண்ணீர்ப்
புகையிருக்கு!! நீர்செய்த
சேவை களைத்தான்
சிலாகித்துப் பேசுதற்குத்
தேவையிலை யாரும்
திரு(வர்) புலவர்மணி
நாவடக்கா, நெட்டை
நரியோடு லீலுககள்
ஆ'வடிவேல், பேச்சை
ஆரும்கேட் காவிடினும்
பள்ளி மனைகளிலே
பட்டமரம், ஓடு, செங்
கல்லும் நெடுந்தூணும்
காத்திருக்கு நீர்வருக!

***

கல்லாத மாந்தர்
கறுப்புக் கொடிகாட்டி
சொல்லால்உமையொன்றும்
சுட்டெரிக்க ஒண்ணாது!!

ஐயா வருக,

"அரையின் அருகினிலே
ஆண்டவனார் தந்த
மறைவாம் பொருளினுக்கு
மந்திரியாய் வந்ததனால்
அரைமந் திரி"யென்று
அர்த்தம் உரைத்துக்
குறைமதியார் ஏதேதோ
கூறுகிறார்! பொய்பொய்!!
வாலா மணிதரிக்கும்
வாத்திமார் தான்!!!துறை
[illegible]
வாலை நறுக்கி
வழியனுப்பி வைவீரோ?

வேலைசெய உற்சாக
'விஸ்க்கி'வர மாட்டாதா?
கண்டி, களுத்துறையில்
காலி நுவரெலியில்
அண்டப் பயந்திருக்கும்
அம்பாந்தோட்
டைதனிலே
திண்டாடி நின்ற
திருக்கூட்டம் நீயன்றிக்
கண்டாரா மட்டக்
களப்புமா வட்டத்தை
மாற்றத்தை மாற்றுதற்கு
மந்திரியைப் பேட்டிகண்டு
தூற்றுபவர் தம்மைமிகத்
தூரத்தில் ஓட்டுதற்கும்
நேற்றுவரை நின்போல
நீளிலங்கை கண்டதில்லை!

கூற்றுவனே வந்தாலும்
கொள்கையிலே மாறுதீர்!
எங்கள் தமிழ்த்தாயை
ஏற்காது தள்ளிவிட்ட
சிங்களவர் மத்தியிலும்
சிங்கம்போல் நிற்கின்றீர்!
தங்களைப்போல் வாக்குறுதி
தந்ததனைக் காற்றில்விட
இங்கே இனிமேல்
எவர்தான் இருக்கின்றார்?

சங்கையுள்ளசிங்க(ள)மே!

காந்தி மகாத்மா
கடைப்பிடித்த
கொள்கைகளை
ஏந்தித் தமிழையரி
யாசனத்தில் ஏற்றுதற்கு
சாந்தம் நிறைகின்ற
சத்யாக் கிரகத்தில்
நீந்துகையில் ஏற்பட்ட
நீசத் தனமெல்லாம்
பாராளு மன்றப்
படிக்கட்டில் பார்த்தபடி
போராட்டம்! புஸ்வாணம்!!
போச்சுதெனக்
கைகொட்டி
ஆராரோ பாடியவுன்
அன்பை மறப்போமா?

கல்லோயாப் பள்ளத்தில்
காடையர்கள்
தம்முடனும்
வெள்ளத்தில் மூழ்கி
விதியென்ற பேயுடனும்
கொள்ளையர்கள் செய்த
கொடியசல கத்துடனும்
எல்லோரும் போராட
இன்பம் நிறைகொழும்புப்
பட்டணத்தில் நீரிருந்த
பண்பை மறப்போமோ?

***

"எட்டப்பன்" என்றும்மை
ஏசுபவர் ஏசட்டும்
மட்டக் களப்பின்ற
மன்னாதி மன்னவோ
விட்டுத்தள் அன்னாரை;
விஸ்கி இதோ பருகும்!

வீராதி சூர

போனதெலாம் போகட்டும்
போன வருடத்தில்
ஆன சலகத்தில்
அழிந்தவர்கள் போக
எஞ்சும்
ஈனத் தமிழர்களை
எப்படியோ சிங்களச
மானர்கள் தம்மோடு
மன்றாட்ட மாய்ஒன்றி
வாழ வழிவகுக்க
வந்திரே மந்திரியாய்
ஈழத்தின் ஒற்றுமைக்கு
எப்படியும் பாடுபட்டு
தாழ்தாங்கி வாழும்
தமிழர் தனித்தலைவா!
வாழ்க எனயாம்
வரவேற்புக் கூறுகிறோம்!!
தாழ்வு வரினும்
தமிழுக்கு, நீஇன்பம்
சூழ்க மதுவைச் சுவைத்து!

இவ்வண்ணம் 'பட்டிருப்புப் பாவாணர்.'

(தொடரும்)

# சிங்களத்தை ஏற்பதும். . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வி மொழியாகத் தலைமுறைகளாக இருந்து வந்திருக்கிறது.

"ஆங்கிலத்தை ஒரு மேலதிக அரசகரும மொழியாகத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமெனத் திரு நேரு விரும்பியதற்கு மற்றுமொரு காரணமுண்டு. நாட்டின் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி தாய் மொழியிலேயேயிருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டமையே இக் காரணமாகும். இந்தி பேசாப்பகுதிகளிலுள்ள மக்கள் மற்றம் பகுதிகளிடன் தொடர்பு வைப்பதற்கு ஒரு மொழி வேண்டும். அத்துடன் தாம் மற்றப் பகுதிகளுடன் தொடர்பு வைக்க முடியாது ஒதுக்கப்பட்டு விட்டோமென அவர்கள் கருதவும் கூடாது எனக் கூறினர் திரு நேரு."

இந் நாட்டிலும் இதே நிலைமைதான் நிலவுகிறது. இங்குள்ள இரு பெரும்பான்மை மக்களுக்கிடையிலுள்ள கடிதப் போக்கு வரத்து முதலிய தொடர்புகள் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன. எனினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மக்களின் பொருட்டு அம்மாகாணங்களின் நிருவாகம் தமிழில் நடைபெற வேண்டும். அது அவர்கள் உரிமை. சிங்கள மக்களின் பகுதிகள் சிங்களம் மூலம் நிருவாகம் செய்யப்பட வேண்டும் என்பது போல தமிழ் மக்களின் பகுதிகள் தமிழ் மூலம் நிருவாகம் செய்யப்பட வேண்டும். அத்துடன் சிங்களம் தெரியாத தமிழ் மக்கள் நாட்டின் எப்பகுதியிலிருந்தாயினும், வவனியாப் பிரதிநிதி விரும்பியவாறு ஒரு தனி இராச்சியம் இல்லாதபோதும், தம் அலுவல்களைப் பார்ப்பதற்கு வசதி செய்யப்பட வேண்டும். இது தமிழ் மக்களின் உரிமை.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: தமிழ் மக்கள் தனி இராச்சியத்தை விரும்பவில்லை. வவனியாப் பிரதிநிதியைத் தமிழ் மக்களே தள்ளி வைத்து விட்டனர்.

திரு வன்னியசிங்கம்: ஆம். எமக்குத் தனி இராச்சியம் தேவையில்லை. ஆனால் இந் நாட்டில் நாம் ஒன்றாக வாழும்வரை அவ்வாறு வாழ்வது ஒற்றை ஆட்சி முறையிலாயினும் சரி கூட்டாட்சி முறையிலாயினும் சரி, எசமானர் சாதியாரின் மொழியைத் தெரியவேண்டுமென்ற நிர்ப்பந்தமின்றி நாட்டின் எப்பாகத்துக்காயினும் சென்று எம் அலுவல்களைப் பார்க்கும் உரிமை எமக்குண்டு.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயா: எசமானர் சாதி என ஒன்றில்லை.

திரு வன்னியசிங்கம்: 'எசமானர் சாதி' என்ற வார்த்தையைக் குண்டசாலையிலுள்ள உங்கள் மாணவர் விடுதிப் பாதுகாவலர் ஒருவர் சமீபத்தில் கூறினர். அதனாலேயே அது என் நினைவில் வந்தது: அத் திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர் சிலரின் சிறுமைக் குணத்தையே இது காட்டுகிறது; இந் நாட்டில் இப்பொழுது நிலவும் கலைக்கிடமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு இத்தகைய சிறுமைக் குணமும் ஒரு காரணமாயிருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உரிமைப் பாதுகாவலர் பிரிவு:

# எதிர்த் தரப்பாருக்கும் கவலை

## இ. தொ. கா. தலைவர் சோமசுந்தரம்



இலங்கை ஜனநாயக காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு ச சோமசுந்தரம் தலைமையில் மேற்படி ஸ்தாபனங்களின் 18-வது வருடாந்த மாநாடு 19, 20-9-59 சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் நாவலப்பிட்டி 'சக்தி நக'ரில் நடைபெறுகிறது.

### முதல் தடவை

**இந்த ஸ்தாபனங்களில்** தொடக்க நாளிலிருந்தே இணைச் செயலாளராகவும், பொதுச் செயலாளராகவும் உப தலைவராகவும் இன்னும் அதன் அங்கத்தவர் என்ற முறையிலும் சிறந்த பணியாற்றி வந்த திரு சோமசுந்தரம் (சோ மா) தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் வருடாந்த மாநாட்டுக்குத் தலைமை வகிப்பதும் இது முதல் தடவையாகும்.

**அவரின் திறமையையும்** சேவை உணர்வையும் கட்சிப் பற்றையும் நன்கு அறிந்தவர்களுக்கு இதுவரை காலமும் இருந்து வந்த ஒரு மனக்குறை, காலங் கடந்தாவது திரு சோமசுந்தரம் தலைவராக்கிக் கௌரவிக்கப்பட்டதோடு மறைந்து போய் விட்டது என்பது அவர்கள் மகிழ்ச்சிப் பெருக்கிலிருந்து ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

### சேவை

இந்தோனேஷியாவில் 1951-ல் நடந்த சர்வதேச விவசாயத் தொழிலாளர் மாநாடு, ஜெனிவாவில் 1953-ல் நடந்த சர்வதேசத் தொழிற் சங்க மாநாடு, அதே ஆண்டில் டுனீஷியாவில் நடந்த சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளன உலக மாநாடு ஆகியவற்றிற்கு திரு சோமசுந்தரம் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளரின் பிரதிநிதியாகச் சென்று புகழ்க்கொடி நாட்டியிருக்கிறார்.

அவ்வப்போது தோட்டத் தொழிலாளரின் குறைபாடுகளை எழுத்து (மகஜர்) மூலமும் நேரடி சாட்சியமூலமும் உரியவர்களிடம் எடுத்துரைத்து தீவிரமாக வாதாடி வெற்றி பெற்றுத் கொடுத்த பெருமை திரு சோமசுந்தரத்துக்கு உண்டு. அவருடைய சாதனைகள் எல்லாவற்றுள்ளும் மகத்தானதாக எல்லோராலும் கொள்ளப்படுவது தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை அதிகரிக்கச் செய்ய அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளாகும்.

### வல்லவர்—நல்லவர்

மறைந்த தலைவர் திரு பெரிசுந்தரத்தின் பாராட்டுக்கு உரியவரான திரு சோமசுந்தரம் இலங்கையில் பிறந்து வளர்ந்தவராவர். கண்டி திரித்துவக் கல்லூரியில் கல்வி பயின்றார். சட்டப் படிப்பும் படித்திருக்கிறார். ஆரம்ப காலத்தில் கண்டி 'பாஸ சங்கத்'திலும் பின்னர் பேராதனை இந்திய வாலிபர் சங்கத்திலும் தொடர்பு கொண்டு உழைத்திருக்கிறார்.

திரு சோமசுந்தரத்தின் பேச்சு, எழுத்து விவாதிக்கும் திறனோடு நியாயம்,நேர்மை, உண்மை பேசல் ஆகிய பண்புகளும் சேர்ந்து கொண்டதால் அவர் வல்லவராக மட்டுமல்லாமல் எல்லோருக்கும் நல்லவராகவும் விளங்குகிறார்.

அவர் தலைமையில் நடக்கும் மாநாடு சிறப்படையும் என்பதில் ஐயத்துக்கு இடமில்லை.

## சுவாமி சிவனாந்தர் பிறந்த தின விழா

கண்டி திவ்ய ஜீவன சங்கச் சார்பில் எதிர் வரும் 21-9-59 திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு, கண்டி தென்னக்கும்பர சச்சிதானந்த தபோவனத்தில் சுவாமி சிவானந்தர் பிறந்த தின விழா யோகிராஜ் சச்சிதானந்த தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

## நஷ்டம் தனி ஒருவருக்கல்ல

### குடும்பத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் நாட்டுக்கும் சேர்த்தே!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை வேறுபாடு உடையோர் கூட அவர் பால் அபிமானம் வைத்திருந்தனர்.

### கொள்கை முழக்கம்

"தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கொடுங்கள்; தமிழ்ப் பிரதேசத்தை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் சிங்களப் பிரதேசமாக்காதீர், மலைநாட்டுத் தமிழருக்கு வாக்குரிமை அளியுங்கள்; ஒற்றை ஆட்சி முறைக்கு பதிலாக இலங்கையை சமஷ்டி ஆட்சி முறையில் அமுலுக்கு கொண்டுவாருங்கள்" என்று கட்சியின் கொள்கை முழக்கம்செய்வதோடுஅரசாங்கத்தின் அன்றாடச் சூழ்ச்சிகளையும், தமிழரின் அடிமை நிலைக்கு ஆவன செய்துவரும் துரோகத்தையும், தமிழை அழிக்கத் திரைமறைவில் நடைபெறும் சதி வேலைகளையும் புள்ளி விவரத்தோடு நிலையாக நின்று ஆணித்தரமாக எடுத்துக் கூறிவந்த திரு வன்னியசிங்கம் அரசாங்கப் பிரமுகர்கள் பலரின் அதிருப்திக்கு அவ்வப்போது ஆளானது உண்டு. ஆயினும் அவரது மறைவுச் செய்தி அவர்களைக் கூடக் கலக்கி விட்டது.

### நஷ்டம்

வீட்டுத் தலைவனை இழந்தோமே என்று குடும்பத்தவரும் அருமை நாட்டுத் தலைவனை இழந்தோமே என்று தமிழ் பேசும் மக்களும் கலங்குவது போல அரசாங்கப் பிரமுகர்களும் அருமையான பார்லிமென்டேரியன் (Parliamentarian) ஒருவரை இழந்து விட்டோமே என்று கலங்குகிறார்கள். ஆக, திரு. வன்னியசிங்கத்தின் மறைவால் ஏற்பட்ட நஷ்டம் தனி ஒருவருக்கு உரியதல்ல. இலங்கை நாட்டுக்கே நஷ்டம்; தமிழ் இனத்துக்கு பெரிய நஷ்டம்; தமிழரசுக் கட்சிக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம்; திரு வன்னியசிங்கம் குடும்பத்துக்குசொல்லொணு நஷ்டம்...நஷ்டம்... நஷ்டத்தின் மேல் நஷ்டம்.

### வாழ்க்கை

திரு வன்னியசிங்கம் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர். வயது 48 பி. ஏ. பட்டதாரி. அத்துடன் வழக்கறிஞரும் கூட. சைவபரிபாலன வித்தியாசாலையிலும், தெல்லிப்பளை மகாஜன ஆங்கிலப் பள்ளிக்கூடத்திலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றிருக்கிறார்.

1947 தொடக்கம் தொடர்ச்சியாக எம்.பி.யாக இருந்து வந்திருக்கிறார். 1949ல் தமிழரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது வரை அவர் திரு ஜீ. ஜீ.யின் தமிழ்க் காங்கிரஸில் இருந்து பணியாற்றியிருக்கிறார்.

தமிழரசுக் கட்சியில் திரு வன்னியசிங்கம் பொதுக் காரியதரிசியாகவும், தலைவராகவும் பணிபுரிந்திருக்கிறார்.


சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625



நீங்கள் வெகு நாட்களாக எதிர்பார்த்த

மாலா மணிப்புரி சாரிகள்

அழகிய டிசைன்களில் தற்சமயம் வந்து சேர்ந்திருக்கின்றன

ஜூனியர் காஞ்சிபுரம் மணிப்புரி டெக்கா, கொட்டன் டெக்கா, ஆர்ட்சில்க்செக் டிசைன் சாரிகளும்,

கோல்டு பிரிண்டெட் பிரெஞ்சு நைலோன் டிஸ்யூ சாரிகளுக்கேற்ற டிசைன்களும், கவுன், ஜாக்கெட்டுக்கு ஆகக்கூடிய பிளேன் கலர்களிலும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு

ரஞ்சனு ஸ்டோர்ஸ்,

52, பேங்ஷால் வீதி,

கொழும்பு-11.

Phone: 6551 Tel: "ரஞ்சனுஸ்"



இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது



ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சம நிலைப்படுத்துகிறது. பிசின்-நுறை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினுல் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அப்பீல்'

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

இறைவனை வழிபட்டதால் அருணகிரியை இகழ்ந்தார்கள் வழிபடாதவனை நாத்திகன் என்று திட்டும் அதே ஆட்கள். பணத்தை நன்ருகச் செலவு செய்தால் அவனை ஊதாரி என்றும் டம்பாச்சாரி என்றும், செலவு செய்யாது போனால் கஞ்சன் என்றும் உலோபி என்றும் தூற்றித் திரியும் இந்த மக்களின் போக்கில் அதிசயப்பட எதுவும் இல்லையே!

களங்கமற்ற அருணகிரியின் வெள்ளை உள்ளத்தின் அடி ஆழத்தில், அன்புச் சுரங்கத்தில் ஒரு வார்த்தை உற்பத்தியாகி வாஞ்சையோடு அவனுடைய அதரங்களில் பிறந்தது............

அந்த வார்த்தை மாசு படிந்த பார்வதியின் இதயத்தை உதைத்தது. பார்வதி நிமிர்ந்தாள், திகைத்தாள், நிலை தடுமாறினுள்.

எல்லோரும் வாழ்கிருர்கள்; அருணகிரியும் வாழ்ந்தான். எல்லோருடைய வாழ்க்கையிலும் சில சம்பவங்கள் நிகழ்கின்றன; அருணகிரியின் வாழ்விலும் அப்படித்தான். எல்லோருடைய வாழ்வையும் சமுதாயம் ஒவ்வொரு கோணத்தில் இருந்து அவதானித்து ஒவ்வொரு தீர்ப்பை வழங்கிவிடுகிறது; அருணகிரிக்கும் ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டது.

சாதாரண நீதி மன்றத்தில் ஒரு வழக்குக்கு தீர்ப்புக் கூறப்பட்டால், அந்தத் தீர்ப்பு நியாயமானதல்ல என்று சம்பந்தப்பட்டவர்கள் கருதினுல், அந்த வழக்கை உயர்தர நீதி மன்றத்துக்கு எடுத்துச் செல்ல—எடுத்துச் சென்று நியாயம் கேட்க வழிவகை, உரிமை, எல்லாம் எல்லோருக்கும் உண்டு.

இங்கேயும் அருணகிரிக்கு சமூகம் அளித்த தீர்ப்பையொட்டி 'அப்பீல்' கேட்கிறேன். உயர்தரநீதிமன்றத்து நீதியரசர்களின் புனிதமான ஸ்தானத்தில் வாசகர்களாகிய நீங்கள் அமர்ந்து தீர்ப்பளியுங்கள்—

சமூகத்தின் தீர்ப்பு சரியா என்று!

நீங்கள் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னுல் அருணகிரியின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில முக்கிய பகுதிகளைக் கவனிக்க வேண்டும். பின்னர் சமூகத்தின் தீர்ப்பைக் கவனிக்க வேண்டும். உங்களுக்கு ஒத்தாசை செய்யும் பொருட்டு நான் வேண்டுமென்றுல் வக்கில் வேலை பார்த்து விட்டுப் போகிறேன்.

* * *

அவனுக்கு பெற்ருேர் இட்ட பெயர் அருணகிரி. மற்ருேர் இட்ட பெயர் சோணகிரி. ஊரெல்லாம் பழக்கப்பட்ட பெயர் பைத்தியம்!

பூமி உருண்டையல்ல சதுரமாக இருக்கும் என்று யாராவது சொன்னுல் அருணகிரி நம்பிவிடுவான். அது சதுரமும் அல்லவப்பா, முருங்கைக்காய் மாதிரி நீளமாக இருக்கும் என்ருல் கூட நம்பத்தான் நம்புவான்.

ஏன்?

போதியபடிப்புஇல்லாதது ஒரு காரணமாக இருந்த போதிலும், தன்னைப்போலத் தானே மற்றவர்களும் நியாயத்துக்குத் தலை வணங்குபவர்களாக, வஞ்சனையற்ற மனம் படைத்தவர்களாக உண்மை பேசுபவர்களாக, நாணயமானவர்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையே முக்கிய காரணம்.

ஆமாம், அவன் அப்படியான ஒரு அப்பாவி-நல்லவன்.

இப்படிப்பட்ட ஒருவனுக்கு பகுத்தறிவுப் பெருமக்கள் வழங்கும் மிகவும் அதிகப்படியான கௌரவப் பட்டம் எதுவோ, அதை அருணகிரிக்கும் பெருந் தன்மையோடு வழங்கினுர்கள்.

வழங்கினுர்கள்—பைத்தியம்!

"பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது......" என்று அருணகிரி அதிகாலையில் எழுந்து மடத்தடிப் பிள்ளையாரை வலம் வந்து பாட ஆரம்பித்தால்—

"அந்த மருந்துதெரிந்திருந்தும் உன் பித்தம் தெளியவில்லையே" என்று சிலர் தங்கள் தலையில் அடித்துக்கொள்வார்கள்; அவமானப் படுத்துவார்கள்; கூட்டத்தில் கூடி நின்று எள்ளி நகையாடுவார்கள்; ஏளனம் செய்வார்கள். ஆமாம், இறைவனை வழிபட்டதால் அருணகிரியை இகழ்ந்தார்கள் வழிபடாதவனை நாஸ்திகன் என்று திட்டும் அதே ஆட்கள். பணத்தை நன்ருகச் செலவு செய்தால் அவனை ஊதாரி என்றும் டம்பாச்சாரி என்றும், செலவு செய்யாது போனுல் கஞ்சன் என்றும் உலோபி என்றும் தூற்றித் திரியும் இந்த மக்களின் போக்கில் அதிசயப்பட எதுவும் இல்லையே!

தலைமுறை தலைமுறையாக உழுதுண்டு வயிறு வளர்த்த உத்தமக் குடும்பம் ஒன்றின் வாரிசு அருணகிரி. தமிழில் ஓரளவு எழுதப் படிக்கத் தகுதி வரும் வரை படித்தான். பருவம் வந்ததும் பரம்பரைச் சொத்தான கலப்பையை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு வயற்காட்டில் இறங்கினுன். தான் உண்டு தனது வாழ்வுண்டு என்று உழுதுண்டு வாழ்வதுதான் அவனுடைய கட்சி, கொள்கை, லட்சியம் எல்லாம்.

அருணகிரியை வீட்டில் காணவில்லை என்ருல் வயற்காட்டில் இருப்பான். வயற்காட்டில் காணவில்லை என்ருல் பிள்ளையார் கோவில் மடத்தில் இருப்பான். இந்த மூன்றும்தான் அவனுக்கு உலகம். இந்த மூன்றுந்தான் அவனுக்குச் சுவர்க்கம். இந்த மூன்றும்தான் அவனுக்கு இன்பம்.

காலையில் எழுந்ததும் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு வயலுக்குப் போவான். அங்கு தனது ரத்தத்தில் பிறந்த பயிர்களைப் பெருமிதத்தோடு பார்வையிடுவான். வேட்டியை மடித்து கட்டிக்கொண்டு வேண்டிய வேலைகளைச் செய்வான். மாலையானதும் பிள்ளையார் கோவிலுக்குப்போய் ஆடுவான், பாடுவான், கூட்டுவான், கழுவுவான். அவனுக்கு தினசரி பொழுது பிள்ளையார் கோவிலில்தான் அஸ்தமிக்கும்.

இந் நிலையில் அவனுக்கு பைத்தியக்காரப் பட்டத்தைச் சூட்டியேனும் மனிதர் ஜாபிதாவில் சேர்த்துக் கொண்டதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமே. அருணகிரியின் தந்தை கணபதியாருக்கு அந்த ஊரிலே கொஞ்சம் நடப்பு, கியாதி.

"சேயாய் சமைந்து செவிடுமை போற்றிருந்து பேய்போலிருந்துன் பிரமை கொள்வதெக்காலம்? பாவியென்றே பேர் படைத்துப் பாழ் நரகில் வீழாமல் ஆவி நின்ற சூத்திரத்தை அறிவதினியெக்காலம்?" என்று அருணகிரி பாடிக்கொண்டு கோவிலில் மாலை தொடுத்துக்கொண்டிருக்க—

ஊர் விஷயங்களைபிய்த்துப் பிடுங்கி, பிறரைக் குறை சொல்லி குற்றம் சொல்லி அரட்டையடித்து வெட்டிப் பொழுது போக்கும் வீணர்களின் 'காளவாய்'களில் அருணகிரி சம்பந்தப்பட்ட சில விஷயங்களும் வேக வைக்கப் பட்டன.

"என்னப்பா, நமது அருணகிரிக்கு வருகிற வெள்ளிக் கிழமை கல்யாணமாமே"

"என்ன இந்தச் சோணகிரிக்கா? யார் துணிந்து பெண் கொடுத்தார்கள்?"

"மூலை வீட்டு முத்துத் தம்பியின்ரை மோளின்ரை பிரியன்ரை தமையன்ரை மோள்"

"யார், பார்வதியா? அவள் நாலு மாதம் கர்ப்பிணியாச்சே"

"இவனுக்கு அவள்தான் தோது. இவள்தான் முழுப் பைத்தியமாச்சே"

ஆம், அந்த உரையாடலிலும் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்தது. பார்வதி ஒருத்தி படியாததால்தான் யாழ்ப்பாண நகரம் கெட்டுக் குட்டிச்சுவராகிப்போய் விடும் என்ற மகத்தான உண்மையைக் கண்டுபிடித்த அவளுடைய தகப்பனுர் வயது வந்த பின்புங்கூட அவளைப் பாடசாலையில் படிக்கவிட்டார். பாடசாலைக்குப் போய் வர ஒரு வாடகைக் காரையும் ஒழுங்குபண்ணினுர்.

பெண்கள் பாடசாலைகள் முடியும் நேரத்தில் சந்திகளிலும், கடைகளிலும், பாடசாலை வாயில்களிலும் படித்த—படிக்காத பிஞ்சில் பழுத்த பிண்டங்கள் காத்து நின்று சாரத்தைத் தூக்கிக் கையில் பிடித்துக்கொண்டு சீட்டியடிக்கும் காலம் இது. பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் சாக்கில் வம்புக்கு வித்தூன்றும் கயவர்கள் சிலரும் காரோட்டிகளாகக் கடமையாற்றும் காலம் இது. நடந்து செல்லும் மாணவிகளைப் பின்தொடர்ந்து சென்று, கடைவாய் கிழியச் சிரித்து, கேலிக் கதை பேசி, கடிதம் எழுதிக் கொடுத்து அழிவுலகுக்கு அழைப்பு விடுக்கும் அற்பர்கள் மலிந்த காலம் இது.

கோவில்களில் திருவிழாக்கள் நடந்தால், பகலெல்லாம் பக்தகோடிகள் விழுந்து விழுந்து வணங்குவார்கள். இரவெல்லாம் காளையரும் கன்னியரும் கண்ணுலே பேசி காதல் என்று கூறி ஒழுக்கத்தைக் கசக்கி எறிவார்கள். கார்ணிவல் என்றும் களியாட்டு விழாவென்றும் நடந்தால் வாலிபர்களும் வாலைப் பெண்களும் ஒரு காமக்கோட்டத்தை நிறுவி வரம்பை உடைத்துக்கொண்டு விழுந்து புரள்வார்கள். இன்னும் பஸ்களில், ரயில்களில், சினிமாத் தியேட்டர்களில் 'தெய்வீகக் காதல்' கொண்டு கூத்தாடும் கேவலமான நிலையில் உள்ளவர்கள் நம்மிடையே கணக்கிலர். அம்மா, யாழ்ப்பாண மாதாவே! உன் பிள்ளைகள் கெட்டாலும் கெட்டார்கள். அந்த வெட்கக்கேட்டை வெளியே சொல்ல வந்தால் வரிந்து கட்டிக்கொண்டு வருவார்களே வலுச்சண்டைக்கு!

இந்த லட்சணத்தில் எப்பொழுதோ நேர்ந்த சந்தர்ப்பத்தால், யாரோ கொடுத்த வரப்பிரசாதத்தால் பார்வதி கருவுற்ருள்.

மாதங்கள் நான்கு கடந்தன. பெற்ருேருக்கு விஷயம் தெரிந்தது. பணத்திலே திரை செய்து தொங்கவிட்டார்கள். பார்வதியின் படிப்பு முற்றுப்புள்ளி கண்டது. மாப்பிள்ளையாக அருணகிரியைத் தேடிப்பிடித்தார்கள். தொகை தொகையாகச் சீதனம் கொடுத்தார்கள். முகூர்த்தம் வைத்தார்கள். கழுத்தில் தாலி ஏற வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

பார்வதி கருவுற்ற செய்தியை மறைத்துத் தொங்க விடப்பட்ட திரையில் சில ஓட்டைகள் இருந்துவிட்டன போலும்! அதன் வழியே ரகசியம் நெளிந்துகொண்டு வெளியே வந்து குதித்து ஆங்காங்கு கூடும் ரகசிய மாநாடுகளில் பேச்சுக்கு ஒரு பொருளாயிற்று.

யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக ஒரு கல்யாணம் நடைபெற நடக்க வேண்டிய சாதிச் சண்டை, பந்தி போசனச் சண்டை, நீ பெரிது நான் பெரிது என்ற அகம்பாவச் சண்டை இத்தியாதிகளும் முறையே பரிபூரணமாக நடைபெற்று அருணகிரி பார்வதியின் கல்யாணம் முடிந்தது.

முதலிரவு!

அருணகிரி பார்வதியைப் படுக்கையறையில் சந்தித்தான். பார்வதி நாணிக் கோணிக்கொண்டு அருணகிரியின் அருகில் வந்து நின்ருள். அருணகிரி அவளுடைய மலர்க் கரத்தைப் பற்றி தனக்குப் பக்கத்தில் உட்கார வைத்தான். ஆசையோடு அவளுடைய தளிர் விரலை நெருடிவிட்டான். அன்போடு அவளுடைய முகத்தை ஏறிட்டு நோக்கினுன்.

களங்கமற்ற அருணகிரியின் வெள்ளை உள்ளத்து அடி ஆழத்தின் அன்புச் சுரங்கத்தில் ஒரு வார்த்தை உற்பத்தியாகி வாஞ்சையோடு அவனுடைய அதரங்களில் பிறந்தது.

"பார்வதி.........!"

அந்த வார்த்தை பார்வதியின் மாசுபடிந்த இதயத்தை உதைத்தது. பார்வதி நிமிர்ந்தாள். திகைத்தாள். நிலைதடுமாறினுள்.

"இத்தனை தூய மனம் படைத்த ஒருவரையா நான் ஏமாற்றுவது. நாளைக்கு—ஆறு மாதங்கள் கழிய நான் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க, அதை இந்த நல்ல மனிதர் அறிந்து அவமானப்பட. ஊரெல்லாம் ஒருமுகமாக இவருடைய முகத்தில் தூவென்று காறி உமிழ,—இவர் என்ன செய்வார்? எனது கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவாரா? வாழ்க்கையை வெறுத்து வனவாசம் போய்விடுவாரா? அல்லது...அல்லது...அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டுவிடுவாரா?' என்று ஒருகணம்—ஒரே ஒருகணம்—பார்வதி எண்ணினுள்.

அந்த விஞடியே இதயம் இடிந்து உள்ளம் ஒடிந்து, சித்தம் கலங்கி செய்வதறியாது துடித்தாள் பார்வதி. அவளுடைய அஞ்சன விழிகளில் இரு நீர் மணிகள் வெளியே குதிக்கத் தயாராகநின்றன.

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.



சிக்கனமானது! பிரகாசமுள்ளது!

உங்கள் ரேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு



நாஷனல் ரேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.

டிஸ்டிரிபியூட்டர்ஸ்:- எஸ். யூ. மொகமெட் ஹாஜீயார்,
70, டாம் வீதி, கொழும்பு-12. 143, மெயின் வீதி, காலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாபரிப்புச் சட்டம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ரெனவேனும் அல்லது வசதியிருந்தும் அதைப் பயன்படுத்தவில்லையென்றேனும் ருசுப்படுத்த வேண்டும். இதைப்பற்றி முன் ஆராய்ந்துள்ளோம்.

### பிள்ளை தன்பிள்ளை அல்ல என ருசுப்படுத்தல்

முறையாக விவாகம் செய்த கணவன் விவாகத்தின் பின்பிறந்த பிள்ளை தன் பிள்ளை யல்லவென்பதை நிருபித்துத் தாபரிக்கும் கடமையை மறுக்கலாமோவென்பதை இனி யாராய்வோம். சாதாரணமாக விவாகமான பின் மனைவி பெற்ற பிள்ளை புருஷனுடைய பிள்ளையெனவே கருதப்படும். அது விவாகமாகி ஒன்பது மாதம் முடியுமுன்னர் பிறந்த பிள்ளையென்றாலும் அப்படியேதான் கருதப்படும். ஆனால் புருஷன் தனக்கு அப் பிள்ளை பிறக்கவில்லையெனப் போதிய சாட்சிய மூலம் அத்தாட்சிப்படுத்தலாம்.

அது போலவே விவாகம் செய்த வெகு காலத்துக்குப் பின்னும் பிறந்த பிள்ளையையும் தன் பிள்ளையல்லவென ருசுப்படுத்தலாம். ஆனால் அதை தன் சாட்சியமல்லாத வேறு சாட்சிய மூலமேனும் வேறு சூழ்நிலை மூலமேனும் அத்தாட்சிப் படுத்த வேண்டும். அதாவது பிள்ளை உற்பத்தியான காலத்தில் தனக்கும் மனைவிக்கும் தொடர்பிருக்கும் சந்தர்ப்பமில்லையென ருசுப்படுத்த வேண்டும். அப்படி அப் பிள்ளை தன் பிள்ளையல்லவென ருசுப்படுத்தினால் அப் பிள்ளையைத் தாபரிக்கும் கடமை அவனுக்கில்லை.

### புருஷன் இருக்க இன்னொருவர்மீது தாபரிப்பு வழக்கு

அதுபோலவே ஒரு பெண் தன் புருஷன் உயிருடனிருக்கும் சந்தர்ப்பத்திலும் வேறொருவர் மீது தாபரிப்பு வழக்கு வைத்து அவர்தான் பிள்ளையின் தகப்பனென ருசுப்படுத்தலாம். உதாரணமாகதானும்விவாகமானபுருஷனும் உறுதி ஒப்பந்த மூலம் பிரிந்திருப்பதாகவும் மேற்கண்ட நபருடன் தான் உறவு கொண்டிருப்பதாகவும் ருசுப்படுத்தினால் அவரே தாபரிப்புப் பணம் கட்ட வேண்டும்.

இன்னும் ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். அதாவது பிள்ளையின் தாயுடன் எவ்வித ஒப்பந்தமும் செய்து தகப்பன் தன் கடமையைத் தவிர்த்துக்கொள்ள முடியாது. நீதி மன்றம் பிள்ளைக்குச் சரியான தாபரிப்பில்லையெனக் கருதினால் தாபரிப்புக்கு உத்தரவிடலாம்.

### மனைவி மனுப்பண்ணக்கூடிய சந்தர்ப்பம்

இனி ஒரு மனைவி தன் தாபரிப்புக்காக புருஷனிடம் தாபரிப்புக்கு மனுச் செய்யும் விஷயம் பற்றிக் கவனிப்போம். இங்கு முறையாக அதாவது சட்டரீதியாக விவாகம் செய்த மனைவியே புருஷனிடம் தாபரிப்புக்கு மனுப் பண்ணலாமென்பதை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். அத்துடன் நியாயமின்றிப் புருஷனை விட்டுப் பிரிந்திருக்கும் மனைவியின் மனுவை நீதிமன்றம் அநுசரிக்கச் சற்றுத் தயங்குமென்பதையும் அறிய வேண்டும். தாபரிப்பு மனுவை விசாரிக்கும் பொழுது தன்னுடன் வாழ்ந்தால் மனைவியைத் தாபரிக்க ஒத்துக் கொள்ளுகிறேனென்று புருஷன் சொன்னால் நீதிமன்றம் ஏன் அவனுடன் கூடி வாழக் கூடாதென மனைவியை விசாரிக்கும்.

தான் கூடி வாழ்வதற்கு முடியாத சந்தர்ப்பங்களிருப்பதாக மனைவி நிரூபிக்குங்கால் நீதிமன்றம் புருஷனைத் தாபரிப்புப் பணம் கட்டும்படி உத்தரவிடலாம். உதாரணமாகப் புருஷன் இன்னொரு பெண்ணுடன் அப்பொழுதும் விபசாரம் பண்ணிக்கொண்டிருக்கிறானென்றாவது அல்லது தன்னைச் சதா நிஷ்டூரப் படுத்துகிறானென்றாவது அல்லது வசிப்பதற்குப் போதிய வசதிகள் செய்யவில்லையென்றாவது அத்தாட்சிப் படுத்தினால் புருஷனோடு கூடி வாழ விருப்பமில்லாத மனைவிக்கும் தாபரிப்புப் பணம் அனுமதிக்கப்படும்.

### விபசாரக் குற்றஞ் சாட்டித் தப்ப முடியாது

மனைவியும் புருஷனும் ஒப்பந்த மூலம் பிரிந்திருந்தாலும் மனைவி தாபரிப்புப் பணத்துக்கு மனுப்பண்ண முடியாது. ஆனால் அப்படிப் பிரிந்திருந்த மனைவி புருஷனுடன் வாழ்வதற்குத் திரும்பி வரும்பொழுது அதற்கு அவன் மறுத்தால், அதன் பிறகு அவள் தாபரிப்புக்கு மனுப்பண்ணலாம். அச் சந்தர்ப்பத்தில் பிரிந்திருக்கச் செய்த ஒப்பந்தம் அவள் மனுவுக்கு இடையூறாக இராது.

மனைவி அப்பொழுது விபசாரத்தில் ஈடுபட்டிருக்கிறாளென நிரூபித்தால் புருஷன் தாபரிப்புப் பணம் கட்டத் தேவையில்லை. ஆனால் புருஷனுடன் ஒருமித்து வாழ விரும்பும் மனைவியை ஒரு காலத்தில் விபசார வாழ்க்கை வாழ்ந்தாளென்னும் காரணத்தால் ஏற்க மறுத்துத் தாபரிப்புப் பணம்கட்ட மறுக்க முடியாது. ஆனால் புருஷன் விவாகரத்து வழக்குப் போடலாம். விவாகரத்துக் கிடைத்தால் அதற்குப் பிறகு தாபரிப்புப் பணம்கட்டத் தேவையில்லையென்பது சொல்லாமலே விளங்கும்.

வழக்கு விசாரிக்கும் காலத்திலும் வேறு பெண்ணுடன் உறவாடிக்கொண்டிருக்கும் புருஷனுடன் ஒருமித்துவாழ மறுக்கும் மனைவியின் மறுப்பு நியாயமானதென நீதிமன்றமெண்ணி அவளுக்குத் தாபரிப்புப் பணம் கொடுக்கலாம். அதுவுமன்றி மனைவி மேல் பொய்யான விபசாரக் குற்றம் சாட்டிய புருஷன் கூடி வாழ மறுக்கும் மனைவியின் நிலை நியாயமானது எனக் கொள்ளப்படும். அந் நிலையில் அவள் தாபரிப்புப் பணம் கோரலாம்.

### தீர்ப்புப்படி பணம் கட்டத் தவறினால் தண்டனை

கடைசியாக தாபரிப்புப் பணம் கட்டும்படி உத்தரவு பிறந்தபிறகு தாபரிப்புப் பணம் கட்டாதவரின் நிலை என்ன என்பதை ஆராய்வோம். பணம் கட்டாமல் விட்டால் கட்டப்பட்டிருக்க வேண்டிய தொகையை அறவிடுவதற்காக நீதிமன்றம் ஒரு மறியற் கட்டளை (Warrant) பிறப்பிக்க வேண்டும். இக் கட்டளை நீதிமன்ற அபராதங்களை யறவிடுவதற்குப் பிறப்பிக்கும் கட்டளை போன்றது. இக் கட்டளைக்கும் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டத்தவறினால் அவருக்கு ஒரு மாதத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனையை நீதிமன்றம் விதிக்கலாம். அப்படியவர் சிறைத்தண்டனை அனுபவித்தால் அவர் எப் பணம் கொடாததற்கா சிறை சென்றாரோ அப் பணம் செலுத்தும் கடமையற்றவராவர்.

### மாறுபட்ட சூழ்நிலையில்...

மேற் கூறியயாவும் எல்லாவித தாபரிப்பு வழக்குகளுக்கும்

(13-ம் பக்கம் பார்க்க)

# தொழிற் சங்க இயக்கம்

## சட்ட நுணுக்கம்

1871ம் ஆண்டு தொடக்கம் 1876-ம் ஆண்டுவரையில் இயற்றப்பெற்ற பல சட்டங்களும் தொழிலாளர் சங்கங்கட்கும் அவைதம் நடவடிக்கைகளுக்கும் சட்டரீதியானஅங்கீகாரம் வழங்கினவெனினும் சட்ட அரங்கில் தொழிலாளர் சங்கங்களின் போராட்டம் அப்போது முடிவடைந்ததென்று சொல்ல முடியாது. முதலாளி வர்க்கமும் முதலாளி வர்க்கத்தைப் பிரதிபலிக்கும் அரசாங்கமும் தொழிலாளர் இயக்கங்கள் மேல் கொண்டுள்ள விரோத மனோபான்மையை இலகுவில் மாற்றவில்லை.

### சட்டங்கள் வந்த பின்னரும் போராட்டம்

பாராளுமன்றத்தில் தொழிலாளரின் நயங்களைப் பேணும் சட்டங்கள் உருவாகினவெனினும், அச்சட்டங்களை வியாக்கியானம் செய்வதற்கும், செய்யும் வியாக்கியானங்களிலிருந்து எழும் பாதகமான விளைவுகளிலிருந்து தொழிற் சங்கங்களும் தொழிற் சங்கத் தலைவர்களும் விடுதலை பெறுவதற்கும் மேலும் அநேக ஆண்டுகள் போராட்டம் நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கிறிமினல் சட்டத்தை உபயோகித்து வேலைநிறுத்தத்தில் இறங்கும் அல்லது இறங்கும்படி ஏவும் தொழிலாளர்களை தண்டனைக்குட்படுத்த எத்தனிக்கும் கொள்கையை முதலாளிவர்க்கம் 1876ம் ஆண்டில் உருவாக்கப்பெற்ற சட்டத்தின் விளைவாகக் கைவிட்டது என்று கூறலாம்.

### சட்டக் கருத்தையொட்டி வழக்கு

ஆனால் தொழிற் சங்கத் தலைவர்கள்மேல் பொருள் நட்டம் விளைவித்தனர் என்று குற்றம்சாட்டி நீதிமன்றங்களில் அவர்கள்மேல் "சிவில்" வழக்குகள் தொடர சந்தர்ப்பம் இருப்பதை முதலாளிவர்க்கம் அவதானிக்கத் தாமதிக்கவில்லை. அந் நாளில் நிலவிய ஒரு சட்டக் கருத்து "நட்டம் விளைவிக்க முனைதல்" (Conspiracy to Injure) எனப்படும்.

இந்தச் சட்டக் கருத்தின்படி வேலைக்குச் செல்லாமல் நிற்கும்படி ஏவும் தொழிற் சங்கத் தலைவர்கள் மேல், அவர்கள் முதலாளிக்கும் தொழிலாளர்க்குமிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கைக்குக் குந்தகம் விளைவிக்க முயன்றனர் என்ற ஒரு "சிவில்" விதிப்படி தப்புச் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு நட்டஈடு கட்டும்படி வழக்குத் தொடர சந்தர்ப்பம் இருந்தது. இத்தகைய வழக்குகள் பல இக் காலத்தில் தொடரப்பட்டன.

### சட்டம்பற்றி பொதுவான அபிப்பிராயம்

தனித் தனித் தொழிற்சங்கத் தலைவர்கள்மீதும்தொழிலாளிகள்மீதும் சிவில் வழக்குத் தொடர்வதுடன் முத[illegible]

தத்தை நிறுத்திக்கொள்ளவில்லை. 1871ம் ஆண்டில் இயற்றப்பெற்ற தொழிற் சங்கச் சட்டம் தொழிற் சங்கங்களுக்கு ஒரு நவீன தன்மையான சட்டரீதி ஏகத்துவத்தையே வழங்கியது என்பது பொதுவான அபிப்பிராயம்.

தொழிற் சங்கங்கள் சொத்துக்கள் பணங்களைப் பரிபாலிக்கவும் கையாளவும் வசதியளித்ததேயன்றி சாதாரணமாகச் சட்டரீதி ஏகத்துவ அந்தஸ்து கொடுக்கும் நிலைமை அதாவது ஒரு ஸ்தாபனம் நட்டம் விளைவித்ததாக அந்த ஸ்தாபனத்தின் மீது மற்றையோர் வழக்குத் தொடரலாம் என்னும் நிலைமையை, ஏற்படுத்தவில்லை என்றே பொதுவாக எல்லோரும் கருதி வந்தனர்.

**சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).**
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி.

### தொழிற் சங்கத்திடம் நஷ்டஈடு கோரி வழக்கு

ஆனால் 1901ம் ஆண்டில் தெற்கு உவேல்ஸ் பகுதியில் "ராப்வேல்" புகையிரதக் கம்பெனி (Taff Vale Railway Company) யின்கீழ் வேலை செய்த தொழிலாளர் ஒரு வேலைநிறுத்தத்தை நடாத்தினர். வேலைநிறுத்தத்தைமுறியடிப்பதற்காக கம்பெனி ஏராளமான "கருங்காலித் தொழிலாளரை" வேலைக்கு அமர்த்தியது. இத்தகைய கருங்காலித் தொழிலாளரை தொழில் செய்ய விடாது வேலைநிறுத்தத்தில் இறங்கிய தொழிலாளரும் அவர்கள் சங்கத் தலைவர்களும், மிக உத்வேகமாக வசீகரித்தனர்.

அவ்வாறு அத் தொழிற் சங்கத்தினர் "கருங்காலி தொழிலாளரை" தொழில் செய்ய வொட்டாது தடுத்தமை குறித்து புகையிரதப் பணியாளர் கூட்டுச் சங்கம் எனப்படும் அச்சங்கத்தின் மீது கம்பெனியார் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்தனர். அத்தகைய வழக்குத் தொடர்வதற்கு உரிமையில்லையென்பதே அதுவரை காலமும் நிலவிவந்த அபிப்பிராயமாகும். ஆனால் புகையிரதக் கம்பெனியோ ஒன்றன்மேல் ஒன்றாக அதியுயர்ந்த நீதித்தலமாகிய பிரபுக்கள் நீதிமன்றம்வரை அவ்வழக்கைக் கொண்டு சென்றது.

### தீர்ப்பு

பிரபுக்கள் நீதிமன்றமோ கம்பெனிக்கு நேர்ந்த நட்டத்திற்கு குறித்த தொழிற் சங்கம் பாத்திரவாளி என்று கண்டு தொழிற் சங்கத்தை 23,000 பவுண் நட்டம்இறுக்குமாறு தீர்ப்பு அளித்தது. தீர்ப்பின்பேரில் இறுத்த வழக்குச் செலவும், இதர செலவுகளும், நட்டஈடுமாக அத் தொழிற் சங்கத்திற்கு

(13ம் பக்கம் பார்க்க)

வழுக்கை விழுகின்றதா.....?

அப்படியானால் உடனே

"ஹெர்பிலோல்"

உபயோகியுங்கள்.

இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.
★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு முகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஃ ஆலம் அவர்களின் அரண்மனை வைத்தியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள் இலைகள் மற்றும் பெருமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிருபணமானது: இந்த ஆச்சர்யமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணெயில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.

"ஹெர்பிலோல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப்போன்ற கருமையான கேச வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.

சோல் ஏஜண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

சிர்ருல் கதீர் அன் கம்பெனி,

41, & 43 இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொழும்பு ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் ரொப்பாட சாலை மாணவர்கள் சமீபத்தில் கொழும்பு கமலா மோடி மண்டபத்தில் ஒரு கலை நிகழ்ச்சி நடத்தினர்கள். அந்தக் கலை நிகழ்ச்சியில் இரண்டு காட்சிகள் மேலே வெளியிடப்பட்டுள்ளன. (1) தாமரைப் பூ நடனம் (2) "ஸீக்கிரட்டீஸ்" நகைச்சுவை நாடகம். (செய்தி 5-ம் பக்கத்தில்)

# அரிய கருத்து அமைந்த சிறிய வசனங்களே நாடகத்துக்கு சோபை அளிக்கத் தேவை

## கொக்குவில் நாடகத்தின் போது பகுத்தறிவு இயக்கச் செயலாளர் பேச்சு

"கூரடு முரடான கோடை இடி வசனங்களைப் பொழிவதாலும் நீண்ட சொற்பொழிவுகளை மூச்சுவிடாமல் நிகழ்த்திவிடுவதாலும் நாடகம் சோபித்து விடாது. அரிய கருத்தமைந்த சிறிய சிறிய வசனங்களைக் கொண்டே நாடக நிகழ்ச்சிகள் பின்னப்பட வேண்டும்."— இவ்வாறு அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கக் கொக்குவில் கிளையினரின் 'தியாக வாழ்வு' நாடகத்துக்கு தலைமை வகித்து பேசுகையில் அ. இ. ப. இயக்கக் கொழும்புக் கிளைச் செயலாளர் திரு. க. ந. இராசரத்தினம் கூறினர்.

கடந்த 6-ந் திகதி கொக்குவில் திரு. பொ. தம்பி தலைமையில் நடந்த பகுத்தறிவு இயக்க ஆண்டு விழாவின் ஒரு நிகழ்ச்சியாக நாடகம் நடைபெற்றது.

திரு. இராசரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

"வெறும் மேடைப் பேச்சுக்களால் மட்டும் மக்கள் உள்ளங்களை மாற்றி விடலாமென்ற தப்பு எண்ணத்தை தவிர்த்து, நல்ல கருத்துக்கள் அமைந்த நாடகங்கள் மூலமே மக்களிடையிலே இலகுவில் மறுமலர்ச்சி உண்டு பண்ண முடியுமென்பதில் உறுதி கொண்டு, அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க கொக்குவில் கிளையைச் சேர்ந்தவர்கள் நாடகம் நடத்த முன் வந்தது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்; அவர்களைப் பாராட்டுகிறேன்.

"அறிவுக் கொவ்வாதகதைகளை நாடகமாக்குவது கூடாது. சீர்திருத்தக் கருத்து அமைந்த நாடகமே நாட்டுக்குத் தேவை. அதை அளிப்பதே நாம் செய்யும் சேவையாகும். சாதி என்ற பேயால் ஒரு இளைஞனின் வாழ்வு எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதை அருமையான முகபாவத்தாலும் திறமையான நடிப்பாலும் விளக்கிக் காட்டியுள்ளார் கதாநாயகனாக நடித்த திரு அரிய புத்திரன்.

"தூய காதலின் மேன்மையையும், பணத்தை விடப் பண்பே பெரிது என்ற கருத்தையும் கதாநாயகி பாத்திரம் ஏற்று சிறப்பான நடிப்பால் உறைப்பாக எடுத்து விளக்கிய திரு. ச. க. வேலனை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

"சாதிக் கொடுமையாலும் வறுமை நிலையினாலும் வாடி வதங்கும் இளைஞன் வாழ முடியாமல் மாள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும் கட்டத்தையும் நாடகத்தில் பார்க்க முடிகிறது.

"இப்படிப்பட்ட கட்டங்களை அன்ருட வாழ்வில் அகற்ற இத்தகைய நாடகங்கள் கிராம மக்களிடம் அடிக்கடி நடித்துக் காட்டப் படல் வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்"- இப்படித் திரு. இராசரத்தினம் கூறி முடித்தார்.

## யாழ் நகரில் லண்டன், கந்தையா



"லண்டன் கந்தையா" என்ற நகைச்சுவை நாடகத்தை இம்மாதம் 18-ம் 19-ம் திகதிகளில் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் 'மேயர் நிதி'க்காக நடத்த இருப்பதாக காட்சி தயாரிப்பாளர் திரு கே. பாலச்சந்திரன் சுதந்திரனுக்கு அறிவித்திருக்கிறார்.

திரு பாலச்சந்திரன் மேற்படி நாடகத்தை கொழும்பில் இருதடவைகளில் நடத்திக் காண்பித்திருக்கிறார். ரோயல் கல்லூரி மண்டபத்தில் சமீபத்தில் அந்த நாடகத்தை பார்த்த சுதந்திரன் விமர்சகர் 9-8-59 இதழில் பின்வருமாறு எழுதியிருந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்:

> "திரு சன்முகநாதன் (நாடகக் கதாநாயகனும் தயாரிப்பாளருமான 'சானு') மனம் வைத்தால் 'லண்டன் கந்தையா'வை மேடைக்குரிய நல்ல நகைச்சுவை நாடகமாக அமைத்து அரங்கேற்ற அவரால் முடியும். அதற்கு வேண்டிய ஆற்றலும் அனுபவமும் அவரிடம் உண்டு. அப்படி அவர் செய்ய வேண்டும் என்பதுவே எமது ஆசை."

விமர்சகரின் இந்த ஆசை நிறைவேறும் வகையிலேயே தாம் முயற்சி செய்து வருவதாகவும் யாழ்ப்பாணத்தில் நடக்கும் நாடகம் மிகச் சிறப்பாக இருக்கும் என்றும் காட்சித் தயாரிப்பாளர் திரு பாலச்சந்திரன் தெரிவித்திருக்கிறார். இது நாடக அன்பர்கள் எல்லோருக்குமே மகிழ்ச்சி தரும் செய்தியல்லவா!

மகிழ்ச்சிக்குரிய செய்தி இன்னென்று. காட்சித் தயாரிப்பாளர் திரு பாலச்சந்திரன் வெகு விரைவில் தமிழ் நாட்டிலிருந்து பிரபல கலைஞர்களை இங்கு வருவித்து சிறந்த கலை நிகழ்ச்சிகளை அளிக்க இருக்கிறார்.

இந்தத் துறையில் தமிழர்கள் இதுவரை சரியான கவனம் செலுத்தவில்லை. கலை வளர்ச்சிக்கே அது ஒருகுறைபாடு என்று சொல்லலாம். இளைஞரான பாலச்சந்திரன் துணிந்து இத்துறையில் இறங்குவது போற்றத்தக்கதாகும். தமிழன்பர்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கத் தயங்கமாட்டார்கள் என்று நம்பலாம்.



ஜி கே. புரொடக்ஷன்ஸாரின் "சகோதரி" என்ற படத்தில் பாலாஜி, நாகையா, ராஜசுலோசனு.

நாடக விமர்சனம்:

# விருப்பும் வெறுப்பும்

நாடகத்துக்கு வேண்டிய அம்சங்கள் அனைத்தும் செறிந்திருந்தும் சில நாடகங்கள் படு தோல்வியடைகின்றன. ஆனல், காதல் காட்சிகளோ, பெண்களோ, பாட்டுக்களோ எதுவுமின்றி "விருப்பும் வெறுப்பும்" என்ற நாடகம் ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றிருக்கிறது.

பத்தவேனி விநாயக சனசமூக நிலைய 6-வது ஆண்டு வருடாந்த விழாவில் "விருப்பும் வெறுப்பும்" நாடகம் நடித்துக் காட்டப்பெற்றது.

பெரிய இடத்தில் விவாகத்தை விரும்பிய வாலிபன் பின்னர் மனம் மாறி கிராம வாழ்க்கையை நாடுவதும், கடைசிவரை கட்டிய மனைவியை கைவிடாத நல்ல பண்பும் நாடகத்தில் வலியுறுத்தப்பட்டன.

உபாத்தியாயராக திரு ந. சிவபாதமும் சிங்கண்ணையாக திரு. க. தனபாலசிங்கமும், மாப்பிள்ளையாக திரு. எஸ் இராசரத்தினமும், முதலியாராக பொ. ஜெயராசாவும் வேலைக்காரனாக திரு. வை. நாகமுத்துவும் நடித்தனர்.

உபாத்தியாயர் சிங்கண்ணையுடன் பேசிய போதும், (13-ம் பக்கம் பார்க்க)

நாடக விமர்சனம்:

# சம்பூரண அரிச்சந்திரா

பழைய நாடகமான "அரிச்சந்திர விலாசத்"தை "சம்பூரண அரிச்சந்திரா"வாகமாற்றியமைத்துப் புதிய முறையில் தயாரித்து நாடகாசிரியர் திரு வி. நல்லையா வெற்றி கண்டார்.

அணிமையில் வரணி—தம்பான் கற்பகப்பிள்ளையார் கோயிலின் முன்றிலில் நடைபெற்ற மேற்படி நாடகத்தை வெற்றிபெற வைத்த பெருமையில நடிகர்களுக்கு பெரும் பங்குண்டு. எல்லா நடிகர்களும் தத்தமது பாகத்தைத் திறம்பட நடித்தார்கள்.

எளிய நடை வசனங்களும் திரைப்படப் பாட்டுக்களின் மெட்டுடையபாட்டுக்களும், நடிப்பிலும் கதை நிகழ்ச்சிகளிலும் கலந்திருந்த நகைச்சுவை அம்சமும் நாடகத்தை வெகுவாகச் சிறப்பிக்க உதவின இடையிடையே நடைபெற்ற நடன நிகழ்ச்சிகளைப் பார்த்தோர் என்றுமே மறக்க மாட்டார்கள். குழந்தைகளின் நடனங்கள் என்னல் கேட்கவும் வேண்டுமா?

பெண்ணின் அழகுக்கு அழகு செய்யும் அணிகலன்களைப்போல இசையமைப்பு, ஒலியமைப்பு, காட்சியலங்காரம் ஒளியமைப்பு முதலியன மிளிர்ந்தன. துணைப்பாடகர்... [illegible] ...களின் இருந்தைவிட்டு நீங்காதவர். இசையமைப்பு பிரமாதம் என்றே சொல்லலாம்.

ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இரண்டாவது முறையாக இந் நாடகம் நடித்துக்காண்பிக்கப்பட்டது என்பது நாடகத்தின் வெற்றிக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

—தேசிகன்

# ஏழு ஆண்டு..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காமல் என் சொந்த செலவிலேயே இதை நடத்தி வருகின்றேன்.

"என் அன்னையின் மரணத் தருவாயில்கூட அவர்களின் பக்கத்தில் நிற்க முடியாத பாவியானேன். காரணம், அந்நேரம் பாடசாலையை விட்டுப் போக என் மனம் இடந்தரவில்லை. என் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இப்பாடசாலைக்கென்றே அர்ப்பணித்துவிட்டேன்"

### இடவசதி போதாது

ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் ஒராப் பாடசாலைக்கு உள்ள ஒரு பெருங்குறை என்னவென்ருல், மாணவர்கள் வசதியாக உட்கார்ந்து கல்வி பயிலப் போதிய இடம் இல்லாமல் இருப்பதே. ஒரு சிறு அறையில் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் நெருக்கி உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்க்கப் பரிதாபகரமாக இருக்கிறது.

யாராவது பணம் படைத்தவர்கள் அல்லது நிலவசதி உள்ளவர்கள் இப்பாடசாலைக்கு உதவ முடியுமானல் அவர்கள் ஒரு பெரும் புண்ணியத்தைச் செய்தவர்கள் ஆவார்கள். அரசியல் செல்வாக்குள்ளவர்கள் இப்பாடசாலையை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்து தக்க மான்யம் பெற்றுக்கொடுப்பதும் பெருந்தொண்டாகும்.

தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை !
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, கருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றேட், புறக்கோட்டை
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தால்தான் இதனை இலகுவில் செய்யலாம். எனவே, இன்னும் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேராதவர்கள் உடனே தங்கள் முகவரி, வயது, தொழில் முதலிய விபரங்களை எழுதித் தமிழியக்கம் மே/பா சுதந்திரன், த. பெ. 1183, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்,

தமிழியக்கத் தொண்டர்கள் பெயர்கள் இன்று தொடக்கம் வெளியிடப்படுகின்றன. முப்பது தொண்டர்களின் பெயர்களையும் அவர்கள் எந்தெந்த ஊர்களைச் சேர்ந்தவர்கள் என்பதையும் கீழே காண்க:

1. மு. வ. மாணிக்கவாசகர் (முகிலன்) வேலணை. 2. பொன்னர் குணரத்தினம், கொழும்பு 10 3. வே. தனபாலசிங்கம், புசல்லாவை. 4. மு. சு. மணியம், பசறை. 5. சி. ஆனந்தரத்தினம், பம்பலப்பிட்டி. 6. ந. தே. குணரெத்தினம், ஒலிலிகந்த. 7. அ. சி மாணிக்கவேலு, மாத்தளை. 8. சா. சா. செல்லையா, மட்டக்களப்பு. 9. ந அனந்ததேவன், கொழும்பு 2. 10 க. பெருமாள், வட்டவளை;

11. க. நடராசன், கண்டி 12. அ. வ. முருகேசன், அப்புத்தளை. 13. க. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம். 14. அ. சு. மணியம், அட்டன். 15. அ. செபரத்தினம் உனுப்பிட்டி. 16. நா. சின்னராசா, ஒப்பநாயகா. 17. ப. ஞா. சோதி, மல்லாகம். 18. செ. யோகநாதன், யாழ்ப்பாணம். 19. எம். ஆதம்பாவா, அக்கரைப்பற்று 20. சி. க. பாலசுப்பிரமணியம், கொழும்பு-11.

21. மு. அ. மணிமாறன், கொழும்பு 14. 22. வி. ந. நேசமணி, ராசா தோட்டம். 23. இளம்பூதி, கொழும்பு 11. 24. வ. இராசையா, கொழும்பு 13. 25 பொ. ஆறுமுகசாமி, மட்டக்களப்பு. 26. மு. சுந்தரன் கொக்கட்டிச்சோலை. 27. பா. தவமணி, கொழும்பு 3. 28. ஆ. வேலாயுதம், கொழும்பு 6. 29 ந. பாலசுந்தரம் (இளவழகன்), வேலணை. 30. ம. சரவணமுத்து, கொழும்பு 6.

---

## மக்கள் கவி . . .

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பாண்டியனின் பரம்பரையினராகிய நாம் வாயிருந்தும் வாளாவெட்டிகளாக, அறிவிருந்தும் அறிவிலிகளாய் வாழ்கின்ற நிலையை எண்ணி, "பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச் சொலப் பான்மை கெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்தல் நன்றோ? சொல்வீர்! தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாடியுள்ளார்.

இப்படியான ஒரு கவிஞன், தேடக்கிடைக்காத தேச பக்தன், எங்கும் காணாத எழுத்தாளன், பெறற்கரியதோர் பேச்சாளன், ஒரு இலட்சியவர்தி, சிறந்ததோர் கதாசிரியன், பல மொழிகளைப் படைத்த பண்டிதன் கோவில் யானையால் அடிபட்டு 1921-ம் ஆண்டு புரட்டாதி 11-ம் நாள் மறைந்தார்.

அக்கர்மவீரனின் கவிதைகளை, தமிழ் இளைஞர்களாகிய நாம் படித்து, அவரது எண்ணத்தை நிலைக்கப் பண்ண தமிழைப் பரப்ப முன்வருவோமாக. யாருக்கும் யாரும் அடிமையல்ல! என்பதை அறிவுறுத்துவோம். "எல்லோரும் ஒரு குலம்; எல்லோரும் ஓரினம்; எல்லோரும் இந் நாட்டு மன்னர்" என்ற அவரது கொள்கையை நிலைநாட்டுவோம்!

## புதிய தீயணைக்கும் கருவி

நெருப்பை வெகு விரைவில் அணைத்துவிடக் கூடிய கருவியொன்றை கடற்படை கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது உபயோகத்திலிருக்கும் சிறந்த தியணைப்புக் கருவிகளைவிட இரண்டு மடங்கு வேகத்தில் மண்ணெண்ணெய், பெற்ரோல் முதலியவற்றினால் ஏற்படும் தீயை இது அணைத்துவிடக் கூடியதாக இருக்கிறது. இந்தப் புதிய கருவியின் பெயர் Purple K. Powder. தீயணைக்கும் புகை மண்டலம் இந்தப் பவுடரின் மூலம் எழுப்பப்படுகிறது. பொட்டாஸியம் பை கார்பனேட் பவுடர் (Pottasium Bi Carbonate Powder) இதை உண்டுபண்ணுகிறது. ஒரு விமானம் நொறுங்கியதால் ஏற்படும் தீயைப் போல் அண்மையில் செயற்கை முறையில் எண்ணெயினால் ஏற்பட்ட ஒரு தீயை இந்தப் புதிய கருவி பதினொரு வினாடிகளில் அணைத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

## தொழிற் சங்க...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

42,000 பவுண் செலவழிந்தது.

குறித்த பிரபுக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொழிலாளர் உலகத்தை ஒரு கலக்கு கலக்கிவிட்டது. ஏழைத் தொழிலாளிகளை அங்கத்தவராகக்கொண்ட தொழிற் சங்கம் அவர்களிடமிருந்து மாதாமாதம் சந்தாப் பணமாகப் பெற்று வருடக்கணக்காகத் திரட்டிய நிதியிலிருந்து பல்லாயிரக்கணக்கான பவுண்களை பத்து நாட்கள் வேலைநிறுத்தம் நடாத்திய காரணத்திற்காக அமித ஆதாயத்தை உண்டு ஏப்பம் விட்டிருக்கும் புகையிரதக் கம்பெனிக்கு இறுக்க வேண்டிய நிலையை எவ்வாறு வர்ணிக்க முடியும்? சட்டங்களை வியாக்கியானம் செய்வதில் நியாயதுரந்தரரும் நீதிமன்றங்களும் கண்டுபிடிக்கும் நுணுக்கங்களின் விநோதத் தன்மை இவ்வாறாக இருந்தது!

(தொடரும்)

## தாபரிப்புச் சட்டம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் பொதுவானவை. இனிச் சூழ்நிலை மாறியிருந்தால் நீதிமன்றத்துக்கு மனுப்பண்ணித் தாபரிப்புக்கு உத்தரவிடப்பட்ட பணத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்விக்கலாம். ஆனல் 100 ரூபாவுக்கு மேற்படக் கூட்ட முடியாது. உதாரணமாகப் புருஷன் தன் உழைக்கும் வல்லமை குறைந்ததைக் காட்டித் தொகையைக் குறைக்க விண்ணப்பிக்கலாம்; அல்லது மனைவி புருஷனின் கூடிய சம்பாத்தியத்தைக் காட்டிக் கூடிய பணம் கோரலாம்; அல்லது மனைவி விபசாரத்தில் ஈடுபட்டிருக்கிறாள் என்று ருசுப்படுத்தி புருஷன் தாபரிப்புக் கட்டளையை நீக்கிவிட மனுப்பண்ணலாம். நீதி மன்றம் இவ்விஷயங்களை விசாரித்த பிறகு தகுந்த கட்டளையை பிறப்பிக்கும்.

## விருப்பும் . . .

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தினத்துடன் அவன் படிப்பு, கலியாணம் பற்றி உரையாடிய போதும், அவர் பேச்சு கிராமிய நடையில் மிகு இயற்கையாக அமைந்திருந்தது.

வேலைக்கார நாகமுத்தன் மேடையில் தோன்றிய போதெல்லாம் சபையோர் கைகொட்டிச் சிரித்த வண்ணமேயிருந்தனர்.

இந் நாடகத்தை நட்டுவாங்கம் செய்த திரு. எஸ். இராசரத்தினம் ஆசிரியருடைய குறிக்கோள் ரஸிகர்களைச் சிரிக்க வைக்க வேண்டுமென்பதாகவே இருந்திருக்க வேண்டும். அதில் அவர் வெற்றிபெற்றார்; அதனல் நாடகமும் வெற்றி பெற்றது என்றே கூறவேண்டும்.

—"தென்றல்"

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்

2-வது மகத்தான மாதம்!

எல்பின்ஸ்டன் றெக்ஸி வேல்ஸ்
(மருதானை) (வெள்ளவத்தை) (கண்டி)
வின்ஸர் றீகல்
(யாழ்ப்பாணம்) (யாழ்ப்பாணம்)
ஆகிய தியேட்டர்களில்

வீரபாண்டிய கட்டபொம்மன்

200,000 மக்கள் கண்டு களித்துவிட்டார்கள்!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
பாலாஜி-பண்டரிபாய்-விஜயகுமாரி
தங்கவேலு
நடித்த
மனைவியே
மனிதனின் மாணிக்கம்



எதிர்பாருங்கள்!
24-ம் திகதி வியாழக்கிழமை முதல்
சென்ட்ரல் ஓடியன் ராணி லிபர்ட்டி
(மருதானை) (கல்கிஸை) (யாழ்ப்பாணம்) (பதுளை)
ஆகிய தியேட்டர்களில்

வாழ்க்கை ஒப்பந்தம்

நாகேஸ்வரராவ்-நம்பியார்-ஜமுனா-ராஜசுலோசனா
ரங்கராவ்-சாரங்கபாணி-ஏ. கருணாநிதி நடித்தது.
— சங்கீதம் : கண்டசாலா —

கடைசி 4 தினங்கள் மட்டும்
சென்ட்ரல் (மருதானை)
சிவாஜி கணேசன்-சந்திரபாபு
மாலினி-சரோஜா தேவி
நடித்த
சபாஷ் மீனா

முருகன் (ஜிந்துப்பிட்டி)
தினசரி மாலை 6, இரவு 9-30 மணிக்கும்,
சனி, ஞாயிறு பிற்பகல் 2-00 மணிக்கும்
ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கும்
காண்பிக்கப்படுகிறது.
எஸ். எஸ். ராஜேந்திரன்—எம். என். ராஜம்
மனோஹர்—ராஜசுலோசனா
நடித்த
புதுமைப் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணம் இல்லா மலர்

பிலிப் என் ஆப்த நண்பன். நாள்தவருது பூசை, ஆராதனைகளுக்குச் செல்வான். அவனின் பக்தியைக் காண எனக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. ஏன் பிலிப், சதா கோவிலும் ஆராதனையுமாயிருக்கிருயே உண்மையில் பக்தியுடன் தான் இவையெல்லாம் செய்கிருயா என்று ஒருநாள் அவனைக் கேட்டேன். பக்தியில்லாமல் யாரும் கோவிலுக்குப் போவார்களா என்று பதிலுக்கு ஒரு கேள்வியைப் போட்டான் அவன். கடவுள் சபித்துவிடுவாரே, உலகம் நாஸ்திகன் என்று தூற்றுமே என்ற பயத்தினுல் கோவிலுக்குப் போய் கும்பிடு போடுபவர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். அது போல்தான் நீயும் இருப்பாயோ என்றுதான் கேட்டேன் என்றேன். கடவுளுக்கும் உலகத்துக்கும் பயப்படாமல் மனிதன் வாழ முடியுமா என்று அவன் என்னைக் கிண்டல் செய்தான்.

கடவுளின் கோபத்துக்குப் பயந்தும், பிறரின் நன்மதிப்புக்காகவும் கோவிலுக்கும் ஆராதனைகளுக்கும் போக வேண்டியதில்லை. அதனுல் பயனெதுவுமில்லை. இறைவனில் உண்மையான பக்தி ஏற்பட வேண்டும். தன்னைப் பூ வைத்துப் பூஜிக்கவில்லையே என்று இறைவன் ஒருவரையும் நொந்துகொள்வதில்லை. ஆனுல் உண்மையான அன்பு இன்றி பக்திமான்களாக நடிப்பவர்களை அவருக்கு அறவே பிடிக்காது. கோவில் ஆராதனைகள் ஒருபுறமிருக்க, ஒருவனுக்கு இறைவனிடத்தில் உண்மையான அன்பு ஏற்பட வேண்டும். மகன் ஒருவனுக்குத் தந்தையிடம் ஏற்படும் அன்பும் நம்பிக்கையும் எமக்கு இறைவனிடத்தில் உண்டாகவில்லையெனில் பூசைகளாலும் ஆராதனைகளாலும் பயனெதுவுமில்லை.

'அன்பில்லா ஆராதனைகள் மணம் இல்லா மலர்கள்' போன்றவை பிலிப் என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டேன். பிலிப் எதுவுமே பேசவில்லை.

—ஏ. ஜி. ஆனந்தம்




# மக்கள் கவி பாரதி

—மு. கனகராஜா—

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு, அவர்கள் எல்லோரும் சமம் என்பதுறுதியாச்சு" என்ற இவ் வெழுச்சியைக் கண்ட கள்ளத்தனம் கொண்ட ஆங்கிலகுள்ள நரிக் கூட்டம் பாரதியாரைச் சிறைப்படுத்த திட்டம் திட்டத்தொடங்கியது.

பாரதியாருக்கு வரப் போகின்ற தீங்கை அறிந்த தமிழுள்ளங்கள் "சிறையிலிருப்பதைவிட பாரதியார் 'பிரஞ்சு இந்தியா'வாகிய பாண்டிச்சேரிக்குச் செல்வது நல்லது, புதுவையிலிருந்து கொண்டாவது தமிழகத்துக்கு பணியாற்றலாம்" என்று விருப்பமற்ற அவரை அனுப்பிவைத்தன.

புதுவையிலிருந்து கொண்டும் எழுதினுர் எண்ணற்ற எழுத்தோவியங்களை. அவர் அடிமை வாழ்வை மீட்க எழுதிய எழுத்துக்கள் அறியாமையை அகற்றுவதாக, கொடுமையை கொள்ளுவதாக, ஊக்கத்தை ஊட்டுவதாக, ஆண்மையை அளிப்பதாக கடமையைக் கட்டிப் போடுவதாக அமைந்திருந்தன.

இப்புலவரது காவியங்களைப் படிப்பவர்கள் என்றும் அடிமைத் தனத்தை நினைக்கவேமாட்டார்கள்.

பாரதியார் சுதந்திரப் பாடல்களை மாத்திரம் பாடவில்லை. பலதும் பாடினுர். அவரது கவிதைகள் "தேசிய கீதங்கள்", "தெய்வப்பாடல்கள்", "பல்வகைப் பாடல்கள்", "முப்பெரும் பாடல்கள்" என்னும் நான்கு பாகங்களுடன் 'பாரதி நூலாக வந்துள்ளது.

பாரதியார் உவமையாகப் பாடுவதில் இணையற்றவர். இதோ அவரது உவமைத் திறனை எடுத்துக் காட்ட ஒரு பாட்டு.

"தேனை மறந்திருக்கும்
வண்டு—ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும்
பயிரும்—இந்த
வையம் முழுவது மில்லை.

மழை பெய்வதைக் கண்டு பாரதியார் வர்ணித்துபாடிய பாடலொன்று கீழே வருகிறது:-

"திக்குகள் எட்டும்
சிதறி—தக்கத்
திம்தரிகிட திம்தரிகிட
திம்தரிகிட திம்தரிகிட
பக்க மலைகள்
உடைந்து—வெள்ளம்
பாயுதி பாயுது
பாயுது—தாம்தரிகிட............"

மேலும் பாரதியார் தண்டமிழ் நாட்டிலுள்ள மலைகளின் மாண்பையும், ஆறுகளது அழகையும், வயல்களது வனத்தையும், நூல்களின் சிறப்பையும் புகழ்ந்துள்ளார். சீரும் சிறப்பு மிக்க இந்திய மக்கள் அறிவை அடகுவைத்தவர்களாக, கல்வியைக்கடன் கேட்பவர்களாக என நொந்து

"ஆலயம் ஆயிரம் கட்டல்
அன்ன சத்திரம் பதினுயிரம்
நாட்டல்
அன்றையாவினும்
புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்"

என்று கல்விக்கூடங்களைக் கட்டும்படிக் கூறினுர்.

தொல் பெருமை பெற்ற நாடு நம் தமிழ் நாடு, மொழிகளிலே வளமிக்க மொழி நமது மொழி, இனங்களிலே பக்குவம் பெற்றது நமது இனம். கல்தோன்றி மண் தோன்ருக் காலத்தே தோன்றியவை நம் கலைகள் என்பது அறிஞன் துணிபு. இவ் வளமிக்க மொழியை 'மக்கள் கவி' "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல், இனிதாவதெங்குங் காணேம்..." என்று புகழ்ந்துள்ளார்.

[illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

# பொருள் ஆழம்

பழங்கால எல்லாப் புலவர்களின் பாடல்களிலும் பொருள் ஆழமுள்ள பாக்கள் ஒரு சிலவாவது இருக்கவே செய்யும். காளமேகப் புலவரின் பாடலிற் பல இருப்பது போலவே நமது அவ்வைப் பிராட்டியின் பாடலிலும் சில இருக்கின்றன. அவற்றில் ஒன்றைப் பார்ப்போம்.

ஒருநாள் ஔவையார் மருத நிலவயல் வரப்பின் மேலால் நடந்து சென்ருர். எதிரே கல்வியிற் பெரியார் கம்பரும் வந்தார். இருவரும் சந்தித்தனர். ஔவையின் மேல் கம்பருக்குப் பழைய கோபமொன்றிருந்தது. எனவே ஔவையை ஏளனம் செய்ய எண்ணிப் பக்கத்திலுள்ள ஆரைக்கிரையை யிட்டு ஓர் விடுகதை சொல்லுமாப்போல் 'ஒரு காலில் நாலிலைப் பந்தலடீ' என்ருர். அது ஔவைக்கு விளங்கியது. தன்னை 'அடீ' என்றதற்கு அவனை 'அடா' என்று சொல்லி அவ் விடுகதையின் விடையான 'ஆரை'யையும் சொல்லி விடவேண்டுமென்றெண்ணி,

"எட்டேகால் லட்சணமே!
எமனேறும் பரியே!
மட்டில் பெரியம்மை
வாகனமே!—முட்டமேற்
கூரையில்லாவிடே! குலராமன்
தூதுவனே!
ஆரையடா சொன்னுய் அது"

என்ருர்.

தமிழிலே எட்டிற்கு 'அ' என்றும், காலுக்கு 'வ' என்றும் எழுதுவது வழக்கம். அதோடு இலட்சணமே என்பதை சேர்ந்து அவலட்சணமே! என்றும், சீதேவிக்கு மூத்தவளான (பெரியம்மை) மூதேவியின் வாகனமான கழுதையே! என்றும், கூறையற்ற வீடு போன்ற ஆமையே! என்றும், இராமனின் தூதுவனுக (அனுமான்) குரங்கே! என்றும், அடா என்றும் கம்பரைப் பேசியதோடு ஆரை என்று விடையையும் சொல்லிவிட்டார். இப்போது பொருள் புரிகின்றதல்லவா? ஔவை வாழ்க!

—தாமரைத்திவான்

மலைவீடு

# சரித்திரம் செய்வோம்....!

செழித்துக் கொழித்த தமிழே—உந்தன்
சீரிய புகழைக் குறைத்தே,
இழித்துக் கூறும் பகைவர்—இன்று
ஏனோ நாட்டில் அதிகம்?
கழித்துக் கூட்டிச் சொல்வேன்—தமிழர்
கண்கள் உறக்கம் நீங்கி,
விழித்தால் உண்டு உயர்வு—இன்றேல்
என்றும் அவர்க்குத் தாழ்வே!

உன்னை இகழ்ந்த வடவர்—இருவர்
கல்லைச் சுமந்த கதையை
மண்ணில் எவரே அறியார்? அறிந்தும்
அறியா நிலையிங்கேனோ?
வெண்ணகை காட்டும் முத்தும்—மிளகும்
அகிலும் தேக்கும் தந்து
பொன்னைக் குவித்த நாடு—இன்று
புவியில் வறுமைக் காடு.

விரிந்த வையம் உன்னை—அன்று
வியந்து புகழ்ந்தது. இன்று
பரந்த உன்னரும் நாடு—வீரம்
செறிநத மூன்று மன்னர்,
புரிந்த செங் கோல் ஆட்சி—கலைகள்
நாகரிகம் எங்கே?
சரிந்த நிலையை மாற்றி—புதிய
சரிதம் ஒன்றைச் செய்வோம்.

—எம். ஏ. சம்சுதீன்

# அன்னை அழுகிருள்!

செல்வச் சிறப்புடன் சீராக வாழ்ந்து மூவேந்தரும் அடிதொட்டுப் போற்ற அறம் வழி நின்று, நீதி தவருது ஆட்சி செய்த தமிழன்னை! இன்று அழுகிருள்-கதறுகிருள், ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்! என்று. ஆனுல் அந்த அழுகுரலோ? பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் அண்ணன்மாருக்குக் கேட்கவில்லை; படுக்கை அறையே தஞ்சமெனக் கிடக்கும் தம்பிமாரிகளுக்குக் கேட்கவில்லை. குடும்பத்தின் முதல்வனும்—குலத்தின் தலைவனும் பெரியண்ணனுக்குக் கேட்கவில்லை. எனவே, அன்னை அழுகிருள்! "கோ" என்று அழுகிருள்! கூப்பிட்டு அழுகிருள்! ஆனுல் குரல் கொடுக்கத்தான் யாருமில்லையே?

ஆமாம்! கொடும் பகைவர்கள் அவள் சிலம்பணிந்த கால்களைப் பிடித்திழுக்கிருர்கள். கயவர்கள் அவள் வளையல் அணிந்த கரங்களைப் பிடித்துக் கதற இழுக்கிருர்கள். தலையிலிருந்த சூடாமணி சரிகிறது! கையிலிருந்த திருச் செங்கோல் கைதவறி விழுகிறது! இடையிலிருந்த மணிமேகலை இடையைவிட்டுக் கழல்கிறது! அகமும், புறமும் ஆருகப் பெருக்கெடுத்து ஓடுகின்றன! இந்த நிலையைக் கண்டும் கயவர்கள் விட்டபாடில்லை; எனவே தான், கதறுகிருள்-கண்ணீர் வடிக்கிருள், காப்பாற்ற யாருமில்லையா? என்று. அழுதுமென்ன? எமது அண்ணன்மார் ஒரு மனம் படைத்தவரில்லையே? பலரும் பல துறையில் செல்கின்றனரே? அழும் அன்னைக்கு ஆதரவு கொடுக்க யாருமில்லையே? இன்னிலை என்று மாறுமோ? அன்னையின் அழுகுரல் என்று ஓயுமோ?

—எஸ். சோமசுந்தரம்

கொம்மாதுறை

# சிரிப்பூட்டும் கவிதை

காளமேகப் புலவரென்னும் பழந் தமிழ் புலவர் எங்கோ சென்று விட்டு இடையர்கள் வசிக்கும் இடைச்சேரி வழியாக வந்து கொண்டிருந்தாராம். அவருக்குத் தண்ணீர் தாகம் ஏற்பட்டுவிட்டது. உடனே அங்குள்ள ஒரு வீட்டுக்குச் சென்று தண்ணீர் தரும்படி கேட்டார். அப்போது ஒரு அழகிய இளம் மாது வந்து மோர் தருவதாகக் கூறிவிட்டு உள்ளே சென்று ஒரு பாத்திரத்தில் மோர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை அருந்திய புலவருக்கு அது மோராகப் புலப்படவில்லை; நீராகவே புலப்பட்டது. அவர் முகத்தில் கேலிப் புன்னகை தவழ கீழ் வரும் பாடலைப் பாடுகிருர்.

ககரென்று பேர் படைத்தாய்
கானத்துறும் போது
நீரென்று பேர் படைத்தாய்
நின் தரையில் வந்ததற் பின்
வாரென்ற மென்
முலையாச்சியர் கை
வந்ததற் பின்
மோரென்று பேர் படைத்தாய்
முப்பேரும் பெற்ருயே.

மேகத்திலிருக்கும் போது மழை என்று அழைக்கப்படுகிருய்! பரந்த பூமிக்கு வந்த பின்பு நீரென்று பெயர்பெறுகிருய்; நீராக இருந்தாலும் மூன்று இடங்களில் முப்பெயர் பெறுகிருய் என்று கேலி செய்கிருர். இவரின் பேச்சு அவளுக்குச் சிரிப்பை உண்டாக்கிவிட்டது. அவள் இள நகை புரிகிருள். அவளுடன் சேர்ந்து நாமும் சிரிப்போம்.

—மலர்ச்சிமகள்

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்..........................................................

பாடசாலை..........................................................

விலாசம்..........................................................

..........................................................

.................................. ..................................

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மூதூர் மத்திய வாசிகசாலை திறப்பு விழா

மூதூர் எட்டாம் வட்டார இளைஞர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மத்திய வாசிகசாலையை மூதூர் கி. ச. அக்கிராசினர் ஜனுப் வா. ம. செ. மரைக்காயரால் அணிமையில திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி விழாவில் கி. ச. அக்கிராசனர் சார்பில் உப அக்கிராசனர் திரு. ரூச் டிவாஸ் பேசுகையில் "வட்டாரத்திற்கொரு அல்லது தெருவுக்கொரு வாசிகசாலையை ஸ்தாபிப்பதாயினும் அதனை ஏற்றுக் கொள்ள கி. ச. என்றும் பின் நிற்காது என்றும், இதன் மூலம் நாட்டில் வகுப்பு வாதம்—சாதி வேற்றுமைகளை அகற்றிவிடலாம் என்றும் கூறினர்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் இன்றைய நாட்டை முன்னேற்ற இளைஞர்களால்தான் முடியும் எனவும் இதன் வளர்ச்சிக்காக இப் பகுதி மக்கள்தோளோடு தோள் நின்று பாடுபட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். மற்றும் மத்திய வாசிகசாலை தலைவர் ஜனுப் எம். ஏ. ஹமீது உட்பட ஜனுப்கள் எஸ். எம். மக்கீம், எம். எம். கே. முகம்மது, எம். ஏ. கே. லத்தீப் ஆகியோர்களும் பேசினர்கள்.

### வலிமேற்கு தி. மு. கழகம்

திராவிடப் பெருங்குடி மக்களின் எதிர்கால வாழ்வை வளப்படுத்தும் நோக்கத்தோடு அறிஞர் அண்ணுவின் பகுத்தறிவுக் கொள்கைகளை ஏற்று, சென்ற 30-8-59-ல் திரு. தி.வ. தருமரத்தினம் தலைமையில் வலிமேற்குக் கிளை திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. திருவாளர்கள் அ. பொன்னம்பலம், எஸ். எஸ். குணநாயகம் ஆகியோரும் இன்னும் பலரும் பேசினர். இறுதியில் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். டாக்டர் அ. வை. தங்கக் கணபதியும் திரு தி. வ. தருமரத்தினமும் இணைச் செயலாளர்களாககவும் திரு. மா. நாதன் தனுதிகர்ரியாகவும் திரு. அ. பொன்னம்பலம் உப தனுதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும், பதினெருவர் கொண்ட காரியக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### 'அப்பீல்'

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அருணகிரி அவளுடைய முகத்தை தனது வலது கையில் தாங்கி ஏந்திஞன். நேருக்கு நேராக நோக்கிஞன். பார்வையை கூர்மையாகச் செலுத்திஞன்.

"பார்வதி! இந்த உலகத்தில் மனச்சாட்சி அற்றவர்கள், மிருகக் குணம் படைத்தவர்கள், கயவர்கள், காமுகர்கள் உள்ளவரை துன்பங்கள் தொடரத்தான் செய்யும். உன்னை நானே மனப்பூர்வமாக ஏற்கும்பொழுது நீ எதற்காகக் கண்கலங்க வேண்டும். ஒரு பெண் வாழ்வில் வழுக்கி விழுந்துவிடுவதற்கு அவள் மட்டுமல்லவே காரணம்" என்று தனது ஆள்க்காட்டி விரல் நுனியில் அந்தக் கண்ணீர் மணிகளில் ஒன்றை ஏந்தி வெளியே சிந்திஞன்.

அவனுக்கு—அருணகிரிக்கு இந்தச் சண்டகோலாலம் போன்ற சமுதாயம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

ஒரு சோணகிரி என்று!
ஒரு பைத்தியம் என்று!
ஒரு ஏமாளி என்று!
வெறும் சோதா என்று!
உங்கள் தீர்ப்பு என்ன; சொல்லுங்கள்.

# கழகச் செய்திகள்

### சன சமூக சேவா சங்கம்

சங்கானை—தொட்டிலடி சன சமூக சேவா சங்கத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி சென்ற 30-8-59-ல் நடைபெற்றது.

சங்கானை பட்டின சபையின் தொட்டிலடி வட்டார அங்கத்தவர் திரு. த. பொன்னம்பலம் தலைமை வகித்தார்.

விளையாட்டுப் போட்டி பாரதி, நாவலர், இல்லங்களுக்கிடையில் நடைபெற்றது. விநோத உடைப்போட்டியில் நொண்டிப் பிச்சைக்காரனுக வந்த செல்வன் சு. சிவப்பிரகாசம் முதலாம் இடத்தை அடைந்தார்.

விவாகமானவர்கள், விவாகமாகாதவர்களுக் கிடையில் நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியில் விவாகமாகாதவர்கள் வெற்றி பெற்றனர்.

நாவலர் இல்லம்விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை அடைந்தது. வெற்றி பெற்றவர்களுக்குத் தலைவர் பரிசில்கள் வழங்கினர்.

### அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் ஈழ்த்து மாணவர் மன்றம்

"இந்தியத் தமிழரும் இலங்கைத் தமிழரும் மொழியால் மட்டுமன்றி பல வகையாலும் ஒன்றுபட்டவர்களே. இந்தியாவிலிருந்து சென்று பாணன் என்ற இசை வல்லார் பரிசிலாகப் பெற்ற பகுதியே யாழ்ப்பாணம் ஆகும்"—இவ்வாறு அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டி. எம். நாரராயணசாமிப்பிள்ளை கூறிஞர்.

திரு. நாராயணசாமிப் பிள்ளை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் ஈழ நாட்டு மாணவர் மன்றத்தைக் கடந்த மாதம் 30-ந் தேதி தொடக்கிவைத்துத் தலைமை வகித்துப் பேசிஞர். அவர் மேலும் பேசுகையில் மாணவர் மன்றத்திற்கு வேண்டிய கட்டுப்பாடு பற்றியும், மன்றத்தை வளர்க்கத் தேவையான ஊக்கம் பற்றியும் கூறியதுடன் மாணவர் மன்றத்தின் இன்றியமையாமை பற்றியும் கூறிஞர். தம்மால் இயன்றவரை ஈழ நாட்டு மாணவர் மன்றத்திற்கு வேண்டிய வசதிகளைத் தாம் எப்போதும் செய்து கொடுக்கத் தயார் என்றும் கூறிஞர்.

அதன் பின் விழாவின் சிறப்புச் சொற்பொழிவாளராகிய திரு. வீ. உலக ஊழியஞர் பேசிஞர். ஈழத் தமிழரது சிறந்த பண்புகள் பற்றியும் ஈழம் என்ற சொல்லும், யாழ்ப்பாணம் என்ற சொல்லும் வந்த விதம் பற்றியும் அவர் விளக்கிக் கூறிஞர். அத்துடன் மன்றம் நிற்க வேண்டிய நெறியையும் அதன்கடமைகளையும் நினைவு படுத்திஞர்.

மாணவர் ம. பார்வதிநாதசிவம் மாணவர்களின் ஒற்றுமை பற்றிப் பேசிஞர்.

மன்றச் செயற்குழு உறுப்பினர் தேர்வு நடைபெற்றது. தலைவர்:- திரு வை. சோமாஸ்கந்தன் (புலவர் நான்காம் ஆண்டு) உப தலைவர்:- திருமதி இராசம் மரியாம்பிள்ளை (சங்கீதபூஷணம் 4-ம் ஆண்டு) செயலாளர்:- திரு. கா. கந்தையா, (புலவர் நான்காம் ஆண்டு) துணைச் செயலாளர்:- செல்வி. தர்மபூபதி முத்துவேலு. (சங்கீத பூஷணம். 3-ம் ஆண்டு) பொருளாளர்:- இ. விஞயகமூர்த்தி. (பி. எஸ். ஸி. 2-ம் ஆண்டு) திருவாளர்கள் சுப்பிரமணியம், முத்துக்குமாரசாமி, இரத்தினவேதன், செல்விகள் மகேஸ்வரி, திலகவதி, சுந்தரலட்சுமி ஆகியோர் மன்றச் செயற்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### கட்டைபறிச்சான் சன சமூக நிலையம்

"சன சமூக நிலையம் மக்களுக்கு அரும் தொண்டு ஆற்றுகின்றன. சன சமூக நிலையங்களில் கட்சி வேறுபாடுகள் காட்டுவது தவிர்க்கப்படவேண்டும். நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தால் நமக்கும் நமது மொழிக்கும் ஏற்பட்டிருக்கும் இன்னல்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற முடியும்" இவ்வாறு கட்டைபறிச்சான் சன சமூக நிலைய கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய கட்டைபறிச்சான் கிராமச் சங்கத் தலைவர் திரு. குணநாயகம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. குணநாயகம் மேலும் பேசியதாவது:- ஒரு சில தமிழ்த் தலைவர்கள் தங்கள் சொந்த நலனைக் கருதி தமிழ் மக்களை சிங்கள அரசாங்கத்துக்கு அடிமையாக்க எத்தனிக்கிருர்கள். யாழ்ப்பாணத்துத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன் எனப் பாகுபாடுகளைக் கிளப்பி கற்றறிவில்லாத மக்களைப் பிரித்து தமிழ் இனத்தை என்றன்றும் அடிமையாக்க எத்தனித்துள்ள எட்டப்பன்களை இனிமேல் நம்பி ஏமாறக் கூடாது. தமிழ் எமது உயிர். உயிருக்காகப் பாடுபடுவதற்கு இதே போன்ற ஒரு ஸ்தாபனம் நம் நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாயம் இயங்க வேண்டும் என்று கூறிஞர்.

சன சமூக நிலையத்தின் காரியதரிசி திரு. கா. ஜீவரெட்ணம் பேசுகையில் மக்களின் கூட்டுறவால் உருவாக்கப் பெறும் சன சமூக நிலையம் கிராமாந்தர வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது என்று கூறிஞர்.

கட்டைபறிச்சான் சன சமூக நிலைய காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. சு. இராசதுரையின் மரணத்தையிட்டு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. திரு. இராசதுரையின் நினைவுக்காக ஒரு கட்டடம் எழுப்பப்பட வேண்டுமெனவும் பேசப்பட்டது.

### கிராமச் சங்க சமாஜத் தலைவர்கள் கூட்டம்

திருகோணமலை கிராமச் சங்கத் தலைவர்கள் சமாஜக் கூட்டம் சென்ற 8-9-59-ல் பெருந்தெரு எம். எம். பாடசாலைமண்டபத்தில் சமாஜத் தலைவர் திரு. நா. கயிலைநாதன் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி திரு. எஸ். குணநாயகம் கூட்ட அறிக்கையை வாசித்தார்.

கூட்டத்திற்கு கிழக்கு மாகாண ஸ்தலஸ்தாபன உதவி அதிபர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் சமுகம் அளித்து கிராமத்துக்கு வேண்டிய முக்கிய தேவைகளை கேட்டு அறிந்து கொண்டார்.

தலைவர் பேசுகையில்ஸ்தல ஸ்தாபன மந்திரி திருமதி விமலா விஜயவர்தன திருமலைப் பகுதிக்கு வரவிரும்புவதாக ஓர் சுற்று நிருபர் அனுப்பியுள்ளார் என்றும் அறிவித்தார்.

சாம்பற்றீவு கிராமச் சங்கத் தலைவர் திரு. வ. நா. தம்பிராசா பேசுகைமில் அமைதியாக உள்ள திருமலை மந்திரி வருகையால் அமைதியின்மை யேற்படுமோவென அஞ்சுவதாகக் கூறிஞர்.

### திருவண்ணுமலைக்கு தூது அனுப்புவர்

இந்தோ சிலோன் கப்பல் போக்கு வரத்தை ஒக்டோபர் 12 லிருந்து மாற்றியமைக்கப்படவிருப்பதற்கு இச் சங்கம் கலக்கமடைவதோடு, தற்போதைய முறையே தொடர்ந்திருக்கச் செய்யும் படியாக காருண்யமிகுந்த இந்திய சர்க்கரை அ. இ. அ. சங்கம் பணிவோடு கேட்டுக் கொள்ளுகின்றது.

திருவண்ணுமலைகோயிலைத் தரிசிக்கும் அருந்ததிய மக்களுக்கு மடம் அல்லது சாவடி கட்டித் தரும்படியாக ஆலய தர்ம கர்த்தாக்களிடம் பல முறை முறையிட்டும், இதுவரை ஆலய நிர்வாகிகள் கவனிக்காததையிட்டு இச் சங்கம் வருந்துவதோடு; முன் வரும் திருவிழாவுக்கு முன் மடம் அமைத்துத் தரும்படியும் இது பற்றி ஆவன செய்ய ஆலய தர்மகர்த்தாக்களிடம் சங்கம் தூது செல்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அருந்ததிய சங்கத் தலைவர் திரு. மூ. வேலாயுதம் தலைமையில் சங்கப் பணி மனையில், கடந்த 5-9-59 சனி மாலை 4 மணிக்கு சங்கப் பொதுக் குழு கூடியபோது மேற்கண்டவாறு தீர்மானங்கள் ஏகமனதாக, நிறைவேற்றப்பட்டன. பொதுக் காரியதரிசி அ. பி. சுந்தரராசனின் நன்றியுரையோடு பொதுக் குழு இனிது கலைந்தது.

## விஞ்ஞானம் கற்பவர்கள்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல தமிழ்ச் சொற்களைத் தவிர்த்துவிட்டு வட மொழி சொற்களைக் கையாள்கின்றனர். 'நீரகம்' என்பதை 'ஜலவாயு' என்றும், 'விலங்கியல்' என்பதை 'மிருக சாஸ்திரம்' என்றும் கூறும் இக்கூட்டத்தினர் காலப்போக்கில், பாரதிதாசன் கூறியதுபோல் 'ஆட்டுக்குட்டி'யையும் 'ஆஷ்டுக்குஷ்டி' என்று அழைத்தால் அதில் வியப்பிராது.

### மாநாடு கூட்ட வேண்டும்

மேலே குறிப்பிட்ட சிக்கலைத் தீர்த்து வைக்க வேண்டியது இன்றைய உடனடித் தேவை. தமிழில் விஞ்ஞான நூல்கள் எழுதும் நற்பணியில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் எல்லோரும் மேல்நாடுகளில் நடப்பதுபோல் ஒரு மாநாடு கூட்ட வேண்டும். அம்மாநாட்டில் எந்தெந்தக் கலைச் சொற்களை மட்டும் பயன்படுத்துவது என்று ஒரு முடிவுக்கு வர வேண்டும். அன்றேல் ஒரு சொல்லுக்கு ஆயிரம் சொற்கள் தோன்றும் சீர்கேடு தவிர்க்கப்பட மாட்டாது. அதனுல் ஏற்படும் குழப்பத்தையும் அளவிட முடியாது.

### வழக்குச் சொற்கள்

அடுத்த பெரும்சிக்கல் கலைச் சொற்கள் அத்தனையையும் தமிழாக்குவதா அல்லவா என்பது. பல கலைச் சொற்கள் உலகின் பல நாடுகளில் ஒருவிதமாகவே அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, Hydrogen, Electron என்ற சொற்களை ஜெர்மன், ருஷ்யன் ஆகிய மொழிகளிலும் அப்படியே அழைக்கின்றனர். இது ஒரு பல்நாட்டு உடன்பாடு. ஆகவே தமிழிலும் அச் சொற்களை அப்படியே வழங்க வேண்டும், அல்லது தமிழ் மரபுக்கேற்றபடி சிறிது திரித்து வழங்க வேண்டும் என்று சிலர் வாதிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, 'சைக்கிள்' என்ற சொல் இன்று ஒரு பொதுச் சொல்லாகிவிட்டது. இதற்கு இனி ஒரு புதுச் சொல் காண்பதில் பயன் இல்லை என்பது இவர்கள் வாதம். 'சைக்கிள்' என்பதைத் 'துவிச் சக்கர வண்டி' என்று அழைப்பதில் சிறப்பு ஏதும் இல்லை. இவ்விரு சொற்களும் தமிழுக்குப் புறம்பானவை. இவற்றுள் கூடியளவு மூலச் சொல்லான 'சைக்கிள்' என்பதையே பயன்படுத்துவது நன்று என்பது எம் கருத்து. கலைக் களஞ்சிய வெளியீடுகளில் பெரும்பாலும் ஆங்கிலக் கலைச் சொற்களை அப்படியே பெயர்த்து வெளியிட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### இழிநிலை மாற வேண்டும்

கலைச் சொற்கள் முழுவதையும் தமிழாக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். இப்போதைக்குச் சில ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தினும் காலப்போக்கில் எல்லாவற்றையும் தமிழாக்கிவிடலாம் என்பது இவர்கள் கருத்து. பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்தினல் கருத்துத் தெளிவும் விளக்கமும் குன்றிவிடும் என்றும், தமிழ் மரபுக்கே அது இழுக்காகும் என்றும் இவர்கள் வாதிக்கின்றனர். இந்தச் சிக்கலையும் மேற்குறிப்பிட்டதுபோல் ஒரு மாநாடு தீர்த்து வைப்பது அரிதன்று.

பொறியியல், விஞ்ஞானம், மருத்துவம், கணிதம் போன்ற துறைகளில் தமிழ் நூல்கள் எழுதுவோர் தொகை மிகக் குறைவு; ஏனெனில், பெரும்பாலும் விஞ்ஞானம் கற்பவர்கள் தமிழைக் கற்பதில்லை. தமிழைக் கற்பவர்கள் விஞ்ஞானத்தைக் கற்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும். சீன, இஸ்ரேலிய நாட்டு மாணவர் போல் தமிழ்ப்பற்று உள்ள விஞ்ஞானம் பயிலும் மாணவர் அனைவரும் இப்பணியில் படுபட வேண்டும். அன்றேல் இப்புதிய துறைகளில் எமது அருமைத் தாய்மொழி பின் தங்கிவிடும்.


**சுதந்திரன் சந்தா விபரம்**

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாராகச் சேர்ந்து கொள்வதுதான்.

**வருடச் சந்தா ரூபா. 10-00**

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.


சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

ரஞ்சன், பி. எஸ். வீரப்பா,
சந்தியா, வனஜா, மாஸ்டர் ரவி,
டி. பி. முத்துலட்சுமி, எஸ். டி. சுப்புலட்சுமி,
காகா ராதாகிருஷ்ணன், சண்முகசுந்தரி
நடித்த



# மின்னல் வீரன்



இசை:
வேதா.

டைரக்ஷன்:
ஜம்பணு.

கதை வசனம்:
ஏ. எல். நாராயணன்

பின்னணி : டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன்,
பி. லீலா, டி. வி. ரத்தினம், எம். எல். வசந்தகுமாரி, எஸ். ஸி. கிருஷ்ணன்.

கலர் நடனம்: சாயி—சுப்புலக்ஷ்மி

---

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை)

ஆகிய தியேட்டர்களில்



# மணமுள்ள மறு தாரம்

பாலாஜி—சரோஜாதேவி—காமினி—தங்கவேலு—முத்துலட்சுமி
முத்துக்கிருஷ்ணன்—குமுதினி ஆகியோர் நடித்தது

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சுதந்திரன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 செப்டம்பர் மாதம் 20-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org